# தமிழரசு

தமிழ்நாடு அரசின்
திங்கள் இருமுறைத்
தமிழ் ஏடு
ஆக. 1. 1970 - 35 காசு



**உறுதியான கட்டடங்கள்:** *பொதுப்பணியில்-1*

SANKAR I C CEMENT



சிமெண்ட் கான்கிரீட் பாலம்

உறுதியையும் சிறப்பையும் இணைக்கும்

# சங்கர் சிமெண்ட்

IS:269

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது

ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2

23 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-1442TM

# தமிழரசு

மலர் 1 1970 ஆகஸ்டு 1 இதழ் 3



இந்த இதழில்

தமிழக முதல்வர்
தமது மேலை நாட்டுச்
சுற்றுப்பயணம் பற்றிய
தொடர் கட்டுரையைத்
தொடங்குகின்றார்.

ஏராளமான படங்கள்
விளக்கக் கட்டுரைகள்
கருத்து விருந்துகள்
வளர்ச்சித் திட்டங்கள்

கண்கவர்
வண்ணம்
எண்ணிலா
உண்மை

குறைந்த விலையில்
நிறைபயன் விளைக்கும்
சிறந்த ஏற்பாடு

# இனியவை இருபது

## 1. புறப்பட்டேன்!

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

கவிச் சக்கரவர்த்தி பாரதியார் வெறும் சொல்லழகிற்காக இந்தக் கவிதை வரிகளைப் புனையவில்லை. பண்டைத் தமிழர், கடல் பல கடந்து பல்லாயிரக்கணக்கான கற்கள் தொலைவிற்கு அப்பால் நாகரீகத் தொடர்பும், வாணிபத் தொடர்பும், அரசியல் தொடர்பும் கொண்டிருந்தனர் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் மிகப் பலவுண்டு. அந்தத் தொடர்பிற்கான அடையாளங்கள் தான் இன்றைக்கும் தமிழகத்தின் கடற்கரையோரங்களில் கிடைக்கின்ற கிரேக்க, ரோமானிய நாணயங்களாகும்.

பிற நாடுகளுக்குச் செல்வது என்பது வெறும் உல்லாசப் பயணங்களுக்காக அமைந்து விடாமல் பொறுப்பிலே இருப்பவர்களுக்கு ஊக்கத்தையும், பணியாற்றுவதில் உத்வேகத்தையும் எழுப்புகின்ற வகையில் அமைந்திட வேண்டும். அப்படி ஒரு பயணத்தை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் நான் நீண்ட நாளாகக் காத்திருந்தேன்.

ஓராண்டிற்கு முன்பே இங்கிலாந்து நாடு எனக்கு அழைப்பினை விடுத்தது. அதைத் தொடர்ந்து வேறு பல நாடுகளின் அழைப்பினையும் பெற்றிருந்தேன். ஆனால் எனக்கு ஏற்பட்ட இடையறாத தொல்லைகள், ஒய்வின்மை, தாயகத்தைப் பிரிந்து சில பல நாட்கள் வெளி நாடுகளில் உலவிட வேண்டுமே என்கின்ற மனக்கவலை இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து என் பயணத்தை ஒத்திப் போட்டுக் கொண்டே வந்தன.

சுற்றுலாப் பயணிகளுக்குக் கண்ணுக்கு விருந்தளிக்கும் காட்சிகளைக் கொண்டதோடு மட்டுமல்லாமல், சுழலும் சிந்தனைக்கு வேலைதனைக் கொடுத்துக் கருத்துக்கும் விருந்தளிக்கக்கூடிய நாடுகள் சிலவற்றை நான் செல்வதற்கேற்ற வகையில் தேர்ந்தெடுத்துக் கொண்டேன்.

பிற நாடுகளின் கலைச் செல்வங்களையும், கலாச்சாரம் பற்றிய விளக்கங்களையும், தமிழகத்திற்குக் கொண்டுவருவது ஒருபுறமிருக்க, அந்தந்த நாடுகளில் நமது நாட்டின் கலைச் செல்வங்களையும், கலாச்சாரங்களையும், பண்பாடுகளையும் அறிமுகப்படுத்திட வேண்டும் என்கின்ற அவா எனக்கு மிகுந்திருந்தது.

பண்டைய நாட்களில் தமிழகத்திற்கும், நான் சென்ற நாடுகளுக்கும் இருந்த தொடர்புகளையெல்லாம் மறந்து விட்டவர்கள் தான் பெரும்பாலும் இன்றைக்கு அந்த நாடுகளில் குடிமக்களாய் இருக்கிறார்கள். ஆகவே பழைய தொடர்புகளை நினைவுறுத்தவும், பசுமையான எண்ணங்களை அவர்தம் உள்ளத்தில் பதிய வைக்கவும் வீழ்ந்து பட்ட நாடுகள் விரைவில் எழுந்து நிற்கும் வியத்தகு சாதனைகளை விசை ஒடிந்த தேகத்தில் வன்மை ஊட்டுதல் போல, விழிப்புற்ற தமிழகத்தில் விரைந்து வினையாற்றிடவும் என் பயணம் பயன்பட வேண்டுமென்பதே

முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை

தலையாய குறிக்கோளாக எனக்கிருந்தது. அதனைச் செவ்வனே நிறைவேற்றும் பொருட்டுத் தான் தமிழக அரசின் நிதிச் செயலாளரையும், என்னுடைய தனிச் செயலாளரையும் என் பயணத்திற்குத் துணையாகச் சேர்த்துக் கொண்டேன். ''துணையோடல்லது நெடு வழி செல்லேல்'' என்பது முதுமொழியன்றோ?

இந்த மாதம் செல்கிறேன், அடுத்த மாதம் செல்கிறேன் என்று என்னுடைய வெளிநாட்டுப் பயண நிகழ்ச்சி பற்றி நிருபர்கள் கேட்ட நேரத்தில் எல்லாம் ஏதாவது ஒரு பதிலைச் சொல்லிக் கொண்டிருந்த என்னை, விடாப்பிடியாகச் சென்ற இடம் எல்லாம் அவர்கள் மடக்கி மடக்கி ''எப்போது மேலை நாடு செல்கிறீர்கள்?'' என்று கேட்டபோது திடீரென்று ''ஜூலை 1-ம் தேதி செல்கிறேன்'' என்று கூறிவிட்டேன். ஆகவே அழைப்பு அனுப்பிய நாடுகள் என் பயணத்தை விரைவுபடுத்தின என்று சொல்வதை விட, வெளிநாடுகளைக் காண வேண்டும் என்ற ஆசை என் பயணத்தை விரைவாக்கியது என்று கூறுவதைவிட, நிருபர்கள் காட்டிய அக்கறைதான் என் பயணத்திற்கான நாளைக் குறித்தது என்று சொன்னால் அது மிகையாகாது. முதலில் அவர்களுக்குத்தான் என்னுடைய வெளி நாட்டுப் பயணத்திற்கான நன்றியினைக் கூறிக் கொள்ள வேண்டும்.

ஜூலை முதல் நாள் பயணத்திற்கான நாள் குறிக்கப் பெற்ற தென்றாலும் ஜூன் 30-ம் நாள் மாலை வரையில் அரசாங்க வேலைகளில் நான் ஈடுபட வேண்டியதாயிற்று. பயணத்திற்கான ஏற்பாடுகள், வெளி நாடுகளில் குளிரைத் தாங்குவதற்கேற்ற உடைகள் இவைகளெல்லாம் தயாரா என்பதைப் பற்றிக் கூட என்னால் கவலை செலுத்த முடியவில்லை. அவைகளைக் கவனிக்கலாம் என்று நான் எண்ணிய போது, வீட்டிற்குள்ளே நுழைந்து என்னென்ன ஏற்பாடுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதைக் கூட நான் அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு என் பயணத்திற்கு முதல் நாள் காலையிலிருந்தே தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்து கொண்டிருந்த நண்பர்கள் எனக்கு மாலை அணிவித்து வழியனுப்பத் தொடங்கி விட்டார்கள். பயணத் தயாரிப்புகளை எல்லாம் வீட்டில் உள்ளவர்களிடையே விட்டுவிட்டு நான் வழியனுப்ப வந்தவர்களின் இதய வாழ்த்துக்களிடையே மிதந்து கொண்டிருந்தேன்.

முதல் நாள் இரவெல்லாம் தூக்கம் வரவில்லை. இதுதான் எனது முதல் வெளி நாட்டுப் பயணம். இதற்குமுன் பலவெளி நாட்டுப் பயணங்கள் ஏற்பாடாகி இடையிலே தடைபட்டுப் போயின. அருகாமையிலுள்ள இலங்கைத் தீவிற்குக் கூட என்னால் செல்ல இயலவில்லை. பலமுறை இங்கே தடை; இந்த முறை அங்கே தடை! அதனால் இந்த வெளி நாட்டுப் பயணம் பற்றிய உணர்வு என் உள்ளத்தில் ஏதோ ஒரு சலனத்தை ஏற்படுத்திக் கொண்டேயிருந்தது. 20 நாட்கள் என் அன்புக்கு இனியவர்களை எல்லாம் விட்டுவிட்டு வெளிநாட்டில் இருப்பது எப்படி? இந்தக் கேள்வி என் விழிகளை மூட விடவில்லை. ஆறு மாதம், மூன்று மாதம் என்று சிறைச்சாலைகளில் இருந்தபோதெல்லாம் இந்த நாட்டிலேதான் இருக்கிறோம் என்கின்ற உணர்ச்சியில் அவ்வளவாகக் கவலை தெரியவில்லை. ஆனால் இப்போதோ உல்லாசபுரிகளைப் பார்க்கப்போகிறோம்; ஒய்யார மாளிகைகளைக் காணப் போகிறோம், உபசரிப்புக்கள் பலவற்றைப் பெறப் போகிறோம் உலக நாடுகளின் அமைச்சர் பெருமக்களைச் சந்திக்கப் போகிறோம் என்றெல்லாம் மனத்திலே ஒரு மகிழ்ச்சியும், தெம்பும், தித்திக்கும் நினைவுகளும் ஒன்றன் பின்



ஒன்னுகப்படக் காட்சி போல உருண்டு கொண்டிருந்தன என்றாலும், யார்யாரைப் பிரிந்து செல்லப்போகிறோம், அப்பப்பா! இருபதுநாட்கள் எப்படி இருக்கப் போகிறோம்? என்கின்ற வேதனைப் புயல் இதயத்தைக் குலுக்கிக் கொண்டேயிருந்தது.

ஜூலை முதல் நாள் பொழுது விடிந்தது. அணி அணியாக அருமை நண்பர்கள் ஆயிரமாயிரம் பேர் இல்லத்து வாயிலில் குழுமிடத் தொடங்கினர். அவர்கள் அணிவித்த ஆரங்கள், அளித்த வாழ்த்துக்கள் அனைத்தையும் பெறுவதிலே தனிக் களிப்பும் அடைந்தேன்; பெரும் களைப்பும் அடைந்தேன்!

கடிகாரத்தின் முட்கள் நகர்ந்தன. ஏன் இவைகள் இப்படிப் பறக்கின்றன என்று என்னையறியாமல் அந்த முட்களை நான் நொந்து கொண்டேன்!

நமக்கு ஒரு கவலை இருக்கும் போது கடமையைச் சரிவரச் செய்கிறவர்களைப் பார்த்துக் கடும் கோபம் ஏற்படுவது கூட இயற்கைதான் போலும் என்ற உண்மையைக் கடிகாரத்திற்கும் எனக்கும் ஏற்பட்ட காழ்ப்பின் மூலம் புரிந்து கொண்டேன்!

மாலை 6-20-மணிக்கு என்னையேற்றிச் செல்லும் விமானம் சென்னை மீனம்பாக்கத்திலிருந்து சரியாகப் புறப்படும் என்று சொன்னார்கள். வீட்டிலிருந்து 5-45 மணிக்குப் புறப்பட்டாலே போதும். ஆனால் 4-30 மணிக்கே நான் வீட்டிலிருந்து புறப்பட்டாக வேண்டும் என்று கூறிவிட்டார்கள். ஏன் என்றால் வழி நெடுக உள்ள வரவேற்புகளைப் பெற்று, விமான நிலையத்தில் கூடியிருக்கும் நண்பர்களின் அன்பு மாலைகளைப் பெற்றுக் கொண்டு விமானத்தில் ஏறுவதற்கு நேரம் சரியாக இருக்கும் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதற்கும் மேலாக நான் செல்ல வேண்டிய விமானம் 20 நிமிடங்கள் காலம் தாழ்ந்துதான் புறப்பட நேரிட்டது. காரணம் வழி நெடுக வளைத்துக் கொண்ட பூன்புள்ளங்களும், விமான நிலையத்தில் மறைந்துக் கொண்ட ஆசை நெஞ்சங்களும் தான்!

தமிழக ஆளுநரும், அமைச்சர் பெருமக்களும், அன்பிற்குரிய ஆயிரமாயிரவரும் வழியனுப்ப, நான் எனது குழுவினருடன் விமானத்தில் ஏறிக் கொண்டேன். எங்களைத் தவிர வேறு பயணிகள் யாரும் அதுவரையில் விமானத்தில் ஏறவில்லை. அவர்கள் எல்லாம் விமானத்திற்குள் வரமுடியாத அளவிற்கு விமான நிலையத்தில் அவ்வளவு பெருங் கூட்டம் இருந்தது. நாங்கள் ஏறி உட்கார்ந்த பிறகுதான் மற்ற பயணிகளுக்கு வழி வகுக்கப்பட்டு அவர்கள் விமானத்திற்குள்ளே வந்தார்கள். அவர்களிடமெல்லாம் என்னால் அவர்களுக்கேற்பட்ட சங்கடத்திற்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டேன். விமானத்தில் நான் அமர்ந்து விட்டேன் என்றாலும் எனக்கு உட்கார இருப்புக் கொள்ளவில்லை. ஒரு முறை எழுந்து வந்து வெளியே தலைநீட்டிப் பார்த்தேன். வெளியில் கூடியிருந்தவர்கள் கையசைத்து வாழ்த்துக் கூறினர். மீண்டும் போய் உட்கார்ந்து கொண்டேன். ஆனாலும் இருப்புக் கொள்ளவில்லை! மறுபடியும் எழுந்து வந்து வெளியில் நின்று கொண்டு கூடியிருந்தவர்களை நோக்கினேன். மீண்டும் அனைவரும் கையசைத்து வாழ்த்துக் கூறினர். மறுபடியும் போய் உட்கார்ந்து கொண்டேன்! என் செய்கை எனக்கே கூடக் கூச்சம் தரத்தக்கதாயிருந்தது. விமானப் பணிப்பெண்கள், ஏனைய பணியாளர்கள் 'இருபது நாட்களுக்கு இப்படி அலட்டிக் கொள்கிறானே?' என்று எண்ணியிருக்கக் கூடுமோ என்ற வெட்கம் வேறு என்னைத் துளைத்தது. இனி எழாமல் இருக்க வேண்டுமென்பதற்காக (சீட்-பெல்ட்) பிடிப்புக் கயிற்றால் என்னைக் கட்டிக் கொண்டேன்.

ஆனால் அதை விடப் பெரிய பிடிப்பு வெளியே இருப்பதை என்னால் எப்படித் தவிர்த்திட முடியும்? ஏதோ ஒரு உணர்ச்சி, பிடிப்புக் கயிற்றை அவிழ்த்து விட்டது. எழுந்தேன்! அருகிலிருந்த என் மனைவி ''எல்லோருந்தான் போய்விட்டார்களே, உட்காருங்களேன்!'' என்றாள். ''யாரும் போகவில்லை, அவர்கள் கண்கள் என்னைத் தேடுகின்றன, என் கண்கள் அவர்களைத் தேடுகின்றன!'' என்று சொன்னவாறு, என் கண்களில் அரும்பிய நீர்த்துளிகளைத் துடைத்துக் கொண்டு மீண்டும் வெளியே தலைகாட்டினேன்.

என்னை வழியனுப்ப வந்தவர்கள் விமானத்தைப் பார்த்தவாறு நின்றுகொண்டிருந்த காட்சி மறக்கக்கூடிய காட்சியா? அந்த நாள் எவ்வளவு இனிமையான நாள்! ஆனால் அதே நேரம் எவ்வளவு இன்னலை என் உள்ளத்திற்குத் தந்த நாள்! இனிப்பும், கசப்பும் சேர்ந்தது தானே வாழ்க்கை? கசப்பிலும் இனிப்பை வழங்கியதன்றோ அந்தக் கண்கொள்ளாக் காட்சி! அந்தக் கசப்பிலும் இனிய நினைவுகளை நெஞ்சத்தில் பதித்த எத்தனையோ நிகழ்ச்சிகள் ஓடிக் கொண்டிருந்தன என் மனத்திரையில்.

''உட்காருகிறீர்களா? விமானம் புறப்பட நேரமாகிறது!'' என்ற மென்மையான குரல் கேட்டது. ஆம், கடமையாற்றும் பணிப் பெண்ணின் குரல்தான் அது. அந்த ஆணையை மீற முடியாமல் அமர்ந்து விட்டேன். கதவு இழுத்துச் சாத்தப்பட்டது. பலகணி வழியே பார்வையைச் செலுத்தினேன். விமானம் பறக்கத் தொடங்கும் வரை வெளியில் பார்த்துக் கொண்டேயிருந்தேன். விண்முட்டக் கிளம்பிய விமானம் என் விழிகளிலிருந்து வெகு விரைவில் சென்னையை மறைத்து விட்டது. ஆனால் என் நினைவிலிருந்து சென்னையையும், செந்தமிழ் நாட்டையும் மறைத்துவிட அந்த விமானத்தால் முடியுமா?

(தொடரும்)



# தாய்ப்பாலா சிசுவைக் கொல்லும்?

“குறிஞ்சிமலர்'' புதினத்தில் சொல்லப்படும் ஓர் உவமைக்கு இணையாகப் பரபரப்போடும், சப்த ஜாலங்களோடும் திணறிய தெரு முனையில் ஒரு கடையில் தொங்கிய மாலைப் பத்திரிகை ஒன்றின் போஸ்டரில் கண் குத்திப் பாம்பாக நெளிந்த அந்த வரி ''தமிழ் திணிக்கப்படுகிறது''—இதய சோகத்தை உருவாக்கியது.

“தமிழ்த் திணிப்பால் தமிழ்ச் சமூகமே கெடப் போகிறதே!'' என்று ஒரு தமிழ்த் தலைவரே அங்கலாய்த்திருந்தார்.

அந்தத் தலைவரின் பேச்சு எனது கல்லூரிப் பருவ நாட்களின் ஒரு ஞாயிற்றுக்கிழமைக்கு என்னை இழுத்துச் சென்றது. அன்று வைகை மணல் வெளிகளைத் தாண்டி, ஒரு தோப்பைப் போலவே நிழல் தந்துகொண்டு, ''ஒரு மரம் தோப்பாகுமா?'' என்ற பழமொழிக்கே அறை கூவல் விட்டுக்கொண்டிருந்த ஒரு பேராலமரத்தின் நிழலில்—செம்போத்துப் பறவையின் தொலை தூரக் கூவுதலில் பயந்து ஆல மரக் கூரையில் கீச்சிட்டுக்கொண்டிருந்த சின்னப் பறவைகளின் குரலில் நானும்—மொட்டிலே சிவப்பு வண்ணத்தில் குளித்து, தனது மலர்ச்சியில் வெளுத்துப் போகின்ற விநோதமயமான அலஞ்சிப் பூக்கள் மலரும் மலைப் பகுதி ஊரின் செல்லப் பிள்ளையான எனது ஆருயிர் நண்பனும், கவிஞர் சுரதாவின் 'நந்திக் கலம்பகம் என்னும் கவிதையைப் பற்றி இன்னும் சில நண்பர்களோடு விவாதித்துக் கொண்டிருந்தோம். அதில் சிந்தனை மின்னலாக வரும் ஒரு வரி—'தாய்ப்பாலா சிசுவைக் கொல்லும்?''

தமிழ்த் திணிப்பு, தமிழரைக் கெடுக்குமென்ற கூக்குரல் அந்த வரியைத் தான் எனக்கு ஞாபகப் படுத்துகிறது. இந்தப் பிரச்சினை பற்றிச் சில பெருமக்களையும், மாணவ, மாணவியரையும் பேட்டி கண்டேன். அவர்களுடைய உள்ளம் இங்கே அச்சாகியிருக்கிறது.

## ஆ. க. அ. அப்துஸ்சமது

எம். ஏ., எம். பி.

ஜெர்மானிய நாட்டில் ஜெர்மன்மொழி திணிக்கப்படுவதாக எந்த ஜெர்மானியனும் குறைபடுவதில்லை. பிரான்சு நாட்டில் பிரெஞ்சு மொழி திணிக்கப்படுவதாக எந்தப் பிரெஞ்சுக்காரனும் ஓலமிடுவதில்லை. ஆனால் தமிழ் நாட்டில்—தமிழ்மொழி திணிக்கப்படுவதாகக் கூக்குரல் எழுப்பும் தமிழர்கள் இருக்கிறார்கள்!

தமிழர் மீது எந்த மொழியும் திணிக்கப்படுவதைத் தமிழர் விரும்புவதில்லை. அது போன்றே தமிழையும் எவர் மீதும் திணிக்கத் தமிழர் விரும்பவுமில்லை, விரும்பப் போவதுமில்லை. பழம் பெருமையும், இலக்கணச் செறிவும், இலக்கியச் சிறப்பும் தமிழுக்கு உருவாகிப் பிறந்திருக்கின்றன. அதற்கு வளம் சேர்க்கும் நன் முயற்சியில் ஒரு பகுதியாகவே வாழ்வியலில் பல்வேறு துறைகளிலும் தமிழை அதன் வெகு இயல்பான முறையிலே இயங்கச் செய்யத் தமிழக அரசு பாடுபட்டு வருகிறது.

இதற்குப் பாராட்டுத் தெரிவிக்க மனம் இல்லாதவர்கள் ஒதுங்கியிருக்கலாம். தமிழைத் திணிக்கக் கூடாதென—மக்களின் கருத்தைத் திசை திருப்பிவிடும் முயற்சியில் ஈடுபட வேண்டியதில்லை. தமிழ்நாட்டில் தமிழ் திணிக்கப்படுகிறது என்று கூறு



பவர்கள் தமிழைப் படிக்கக் கூடாது என்று கூறுபவர்கட்குச் சமமாகவே கருதப்படுவர்—வீறு கொண்ட தமிழகத்தில்.

## டாக்டர் மெ. சுந்தரம்

எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.
தலைமைத் தமிழ்ப் பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி, சென்னை.

''திணித்தல்'' என்ற சொல்லாட்சியே பொருத்தமற்றது. ஏற்கனவே உள்ளே உள்ள பொருளைத் திணித்தல் என்று கூறுவது பொருந்தாது. வெளியே உள்ள பொருளைக் கட்டாயமாக



உள்ளே செலுத்துவதற்குத்தான் திணித்தல் என்று பொருள்.

தமிழ்—தமிழர்களின் தாய் மொழி. தமிழ்நாட்டின் இயற்கை மொழி. தாய்மொழியில் எல்லாப் பாடங்களையும் படிக்க வேண்டுமென்பது எப்படித் திணிப்பாகும்? மொழித் திணிப்பு என்பதன் பொருளைப் புரிந்து கொள்ளவேண்டும். இந்தி தமிழர்களின் தாய்மொழி அன்று. அதுதான் ஆட்சி மொழி என்று கூறுவதும், தமிழர்கள் அதைக் கட்டாயம் படிக்கவேண்டும், இல்லாவிட்டால் வேலை வாய்ப்புகள் கிடைக்காதென அச்சுறுத்துவதுமே மொழித் திணிப்பாகும். அதைப் படிக்கவேண்டுமென்று சொல்வதும், அதற்காகக் கல்வித் துறையின் மூலமும் வானொலியின் மூலமும் நடுவண் அரசு செய்துவரும் முயற்சிகள் மொழித் திணிப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

தாய்மொழி மூலம் கல்வி பயிற்றுவதைச் சான்றோர் பலர் ஆதரித்துள்ளனர். ''வேற்று மொழி வாயிலாகக் கல்வி புகட்டுவது இந்திய நாட்டிற்கு அளவிடற்கரிய தீங்கினை உருவாக்கி விட்டது'' என்று அண்ணல் காந்தியார் கூறியுள்ளார். நேருவும், தாகூரும் இதே கொள்கை உடையவர்கள் தான். பாரதியார் ''பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்'' என்று ஆங்கிலக் கல்வி முறையினை வன்மையாகக் கண்டிக்கிறார்.

பிறமொழிக் கல்வியால் முயற்சி இரட்டிப்பாகும். தாய்மொழியின் மூலம்படிக்கும்போது மாணவன் செய்தியறிவு மட்டும் பெற்றால் போதும். பிறமொழி மூலம் பயிலும்போது மொழியறிவும் சேர்த்துப் பெறவேண்டி இருக்கிறது.

தாய்மொழிக் கல்வி பாலும் பாலும் கலப்பதைப் போல; பிறமொழிக் கல்வி தண்ணீரில் எண்ணெய் மிதப்பதைப் போல. தாய்மொழிக் கல்வி தண்ணீரில் பனிக்கட்டி கரைவதைப் போல; பிற மொழிக் கல்வி தண்ணீரில் கட்டை மிதப்பதைப் போல.

## டி. கே. சண்முகம்,
எம்.எல்.சி.



தமிழ்நாட்டில் தமிழ் மொழியின் இழிநிலை கண்டு ஆத்திரம் கொண்ட பாரதியார் கூறினார்.

''வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ; வீட்டு பாஷைகள் கற்கிலாய் போ போ'' என்று.

பாரதியைப் போற்றி விழா வெடுக்கும் அன்பர்கள் இதைப் புரிந்து கொண்டிருக்கிறார்களா என்பது தெரியவில்லை. எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்று தாய்மொழிக்கு அரியணையில் முதலிடம் கொடுக்கத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது தமிழக அரசு. இதற்கு ஆதரவளிக்க வேண்டியவர்கள் ''தமிழ்த் திணிப்பு'' எனக் கூறிப் பள்ளி மாணவர்களைத் தூண்டிவிட முயல்கிறார்கள். இம்மொழிக் கொள்கை காந்தியடிகளின் மகத்தான கொள்கையாகும்.

குழந்தை நலம் பெற வேண்டுமானால் தாய் என்ன செய்வாள்? கசப்பு மருந்தாக இருந்தாலும் குழந்தையின் நலத்திற்காக அதைப் புகட்டிக் குழந்தையை வளர்க்கத் தானே பாடுபடுவாள்? அதுதான் இன்று நடைபெறுகிறது. தமிழ்நாடு என்னும் குழந்தை வளர வேண்டுமானால் தாய் மொழி என்னும் மருந்து புகட்டப்படல் வேண்டும். அதைத்தான் இன்றைய அரசு செய்து வருகிறது, தாய்மை உணர்வோடு! தமிழக அரசை வாழ்த்துகிறேன்.

## கே. பாலதண்டாயுதம்

தமிழ்நாட்டில் தமிழ் மாணவர்களின் கல்வி சம்பந்தமாகத் தமிழ்ப் பிரமுகர்கள் சிலர் '' தமிழ் திணிக்கப்படுகிறது'' என்று ஒரு கூக்குரலை எழுப்பியுள்ளனர். ''மூச்சு திணிக்கப்படுகிறது. மூச்சை நிறுத்திவிடு'' என்பதைப் போலிருக்கிறது இந்த விபரீதக் கூச்சல். ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதில் இரண்டு கருத்துக்



களுக்கு இடமில்லை. ஆனால் மொழிப் பயிற்சி வேறு; பயிற்சி மொழி வேறு.

கல்வியறிவு பெறப் பயிற்சி மொழி எதுவாக இருக்க முடியும்? அது மாணவனின் தாய்மொழியாகத்தான் இருக்க முடியும். கல்வி நிபுணர்களின் முடிந்த முடிவு இது. உலக வழக்கும் இதுவே. ஐயாயிரம் ஆண்டுகால நம் நாட்டு வரலாற்றில், இருநூறு ஆண்டுகால வெள்ளையர் ஆட்சி போக—அதற்கு முன் நாமும் தாய்மொழியில் தான் கல்வி பெற்று வந்தோம். விஞ்ஞானக் கல்வியும் தாய்மொழியிலேயே புகட்ட முடியும். கோபுரங்களும், கல்லணையும், மலைக் கோட்டையும் கட்ட எஞ்சினியரிங் அறிவு இல்லாமல் முடிந்திருக்குமா? எஞ்சினியரிங் விஞ்ஞானமல்லவா? கோவையில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு நடத்திய பரீட்சார்த்த முயற்சியில் அம்மாணவர்கள், ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்டவர்களைக் காட்டிலும் சிறப்புப் பாடத்திலும் சரி, ஆங்கிலத்திலும் சரி, அதிகத் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தார்கள் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பயிற்சிமொழி மூச்சுப் போன்றது. மூச்சை நிறுத்த வேண்டாம் எனத் தமிழ்மக்கள் எழவேண்டும்.

## பிரீதா

(மாநிலக் கல்லூரி எம். ஏ. மாணவி)

ஒவ்வொரு நாட்டினரும் தாய்மொழி வாயிலாகக் கற்பதால்,



கற்பவர்களின் உள்ளமும், அறிவும், விஞ்ஞான ஆராய்ச்சிகளும் பண்பட்டு வளர்ச்சியடைகின்றன. அமுதம் போன்ற நம் மொழி பாரிசு போன்ற உலக நகர்களிலும் வளர்ந்துள்ளது. சில இதழ்களும், தலைவர்களும் 'தமிழ் திணிக்கப்படுகிறது' என்ற குரலை எழுப்பியிருப்பது தவறானதாகும். புரியாத ஒன்றை, அறியாத ஒன்றை ஒரு கூட்டத்தின்மேல் சுமத்துவதுதான் திணிப்பு ஆகும். அப்படியென்றால் தமிழனுக்குத் தமிழ்மொழி புரியாத ஒன்றா? இலக்கியச் சிந்தனைப்பசியுள்ள ஒருவனுக்கு அமுதமாகிய தமிழைக் கொடுப்பதால் அது திணிக்கப்படுகிறதா? ஊட்டப்படுகிறதா? நினைத்துப் பாருங்கள்.

## தாய்மொழியே பயிற்று மொழி

''எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்திலேயே படித்தால்தான் ஆங்கில அறிவு கிடைக்கும் என்று எண்ணுவதை நான் மறுக்கிறேன். ஆங்கிலப் பாடத்தை மட்டும் ஆங்கிலமாகப் படித்தால் போதும். ஆங்கிலப் புலமை பெறுவதற்காக, பூகோளம், கணிதம், வரலாறு ஆகிய நூல்களை எல்லாம் ஆங்கிலத்திலேயே கற்கவேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. நான் எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் கற்றவன்தான். இருந்தாலும் இந்தக் கருத்தை மறுக்கிறேன்.

''லத்தீன் மொழியில் புலமை பெறுபவர்கள், பூகோளம், வரலாறு, கணிதம் ஆகிய பாடங்களை லத்தீனில் படிப்பதில்லை. லத்தீன் மொழியினை மட்டுமே படிக்கிறார்கள்!

''சமஸ்கிருதப் புலமை பெற எண்ணுபவர்களும் அவ்வாறே! எல்லாப் பாடங்களையும் சமஸ்கிருதத்தில் கற்று, அந்த மொழியில் புலமை பெறுவதில்லை. ஆகவே ஆங்கிலத்தை மட்டும் ஆங்கிலமாகப் படித்துவிட்டு, ஏனைய பாடங்களை எல்லாம் தாய்மொழியில் பயில்வதனால் தவறு கிடையாது; தாய்மொழிப் பற்று வளர முடியும்—தாய் மொழிக் கல்வி பெருகும்.''

—பேரறிஞர் அண்ணா

## இரா. சதாசிவம், பி.ஏ.

(பி.ஜி.எல்.) மூன்றாம் ஆண்டு, சட்டக் கல்லூரி மாணவர்.

நம் நாட்டில் சிறந்த மருத்துவர்கள், வழக்குரைஞர்கள், விஞ்ஞானிகள், பொறியியலர்கள், தொழில் நுண்புலனாய்வோர் தோன்றாததற்குக் காரணம் நாம் தாய்மொழிக் கல்வி பெறாததே யாகும். வளர்ந்து வரும் ஒரு குழந்தைக்குத் தேவையான அளவு தாய்ப்பால் ஊட்டுவது திணிப்பாகாது. இந்தியில் பட்டப் பின்படிப்புவரை போதிக்கப்படுகிறது. அங்கே 'இந்தித் திணிப்பு' என்ற வாதமில்லை. ''தமிழை விண்வெளிக்காலத்திற்



கேற்ற மொழியாக உய்விக்க வேண்டும்'' என்ற நமது முதல மைச்சரின் கருத்து நிறைவேறும் நிலை தமிழ் பயிற்சி மொழியாக ஆவதன் மூலமே ஏற்படமுடியும். இந்தப் பயிற்சி மொழிச் சிக்கலில் தமிழக முதலமைச்சரும், கல்வி யமைச்சரும் எடுக்கும் திருப்பணி கட்குத் தமிழ் உணர்ந்த அனை வரும் நல்லாதரவு தர வேண்டும்.

## கண்ணம்மா

(மாநிலக் கல்லூரி,
எம்.ஏ. இறுதியாண்டு மாணவி.)

மொழி என்பது ஒரு கருவி. இக் கருவி மூலம் ஒருவர் கருத்து மற்றவர்கட்கு விளக்கப்படு கிறது. அத்தகைய நல்ல கருவி



தாய்மொழியே. இளமையி லேயே படிப்போர்க்குத் தாய் மொழியில் கற்பித்துப் பின்னர் இடையிடையே ஆங்கிலத்தைப் பயன்படுத்தினுல் அவர்களது மனம், அறிவு ஒருங்கு குவியாமல் முயற்சி பலபடி விரிந்து செல்வ தால் அறிவும் வளரமுடியாமற் போகிறது.

தற்போது தமிழகத்தில் ''தமிழ்மொழி திணிக்கப்படு கிறது'' என்று போலிக் குரல் எழுப்புவோர் கூற்றைத் தமிழர் கள் ஒருபோதும் நம்பமாட்டார் கள்.

# புலமை பெற்ற மொழி தமிழ் !

''ஆங்கில-தமிழ் நவின அக ராதி ஒன்றை உருவாக்குதல் அத்தியாவசியமாகும். இந்த அகராதி திறமையானதாய் அமைய மூன்று லட்சம் சொற் களுக்குப் பதில் குறைந்த பட்சம் ஆறு லட்சம் சொற்க ளேனும் இடம் பெறவேண்டும். அப்போதுதான் தமிழ் உண்மை யான ஒரு நவின மொழியாக முடியும்.

இந்த மாநாடு மூன்று பணி கள் மீது கவனம் செலுத்த வேண்டும்.

முதலாவதாக, தமிழ் நாட்டுக்கும் பிற நாடுகளுக்கு மிடையே மாணவர்கள் பரிவர்த் தனைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இரண்டாவதாக, தமிழை ஒரு நவீன மொழியாக்கும் வண்ணம் ஆங்கிலம்— தமிழ் அகராதியைத் தயாரிக் கும் பணியிலிறங்க வேண்டும்.

மூன்ருவதாக, உலகில் பல் வேறு நாடுகளிலும் தமிழைப் பரப்பவும்வளர்க்கவும்வேண்டும்.

இந்தப் பணிகளில் மறைந்த அண்ணுவின் அடியொற்றி நடக் கும் எமது தமிழ்நாட்டு அரசு இயன்ற எல்லா உதவிகளையும் செய்யும்.

வரலாற்று சகாப்தகாலம் தொட்டு ஆழ்ந்த புலமைபெற்ற மொழியாகும் தமிழ். அது ஒரு செழுமிய மொழி. . . பாரதி போன்ற கவிஞர்கள் அதன் மகிமையைப்பாடியிருக்கிருர்கள்.

ஆனல், அந்த முதுமையும் தற்போதைய வளர்ச்சியும் மட்டுமே போதாது. நாம் வெறுமனே பழைய மகிமையில் ஓய்ந்திருக்கக் கூடாது.

சிந்தனைகளை உணர்த்தவும் விஞ்ஞான வளமிக்க—விண் வெளிப் பயணம் நடத்துகிற நவீன காலத்தின் செய்தி களைத் தெரிவிப்பதற்கும் ஏற்ற கருவியாய், வாகனமாய்த் தமிழ்



மாற வேண்டும் என்பதனைநாம் உணர வேண்டும். தொழில் நுணுக்கம், அறிவியல், மருத் துவம் முதலியவற்றைக் கற் பிப்பதற்கு ஏற்ற பயிற்றுமொழி யாய் இது வந்தாக வேண்டும்.

தமிழ் வளர்வதற்காக, தமிழ் நாட்டுக்கும் பிற நாடுகளுக்கும் இடையே மாணவர்களைப் பரி மாறிக் கொள்வது அத்தியா வசியமாகும். இதனுல், மொழி செழுமைப்படுத்தப்படலாம்.

(உலகத்தமிழ் மாநாட்டில்
தமிழக முதல்வர்)''




கடல் வழங்கும் வளங்களுள் வற்றாத செல்வமாக விளங்குவது மீன். மக்களின் ஊட்டச் சத்துக் குறைபாட்டை நீக்கிக் கொள்ளவும், பொருளாதார மேம்பாட்டுக்கு வழி கோலவும் பெருமளவில் உதவக் கூடியது மீன் பிடித் தொழில். உலகில் மீன் பிடித் தொழில் மூலம் கிடைக்கும் மீன் 2 கோடி மெட்ரிக் டன்னிலிருந்து 5.6 கோடி மெட்ரிக் டன் என்ற நிலைக்கு உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் மீன் பிடித்தொழில் மூலமான உற்பத்தி, முதல் திட்டக் காலத் துவக்கத்தில் 78,000 டன்களாக இருந்தது. 1968–69ல் இது 3,32,205 டன் என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது.

மீன்பிடித் தொழிலில் யந்திரப் படகுகள், திருந்திய முறைகள் முதலியவைகளைக் கையாண்டும் கூட, மிகுதியான முன்னேற்றம் ஏற்படாததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. கடலோரப் பகுதிகளில் மீன் பிடிப்பிடங்களைப் பற்றியும் கிடைக்கக் கூடிய மீன் அளவு பற்றியும் போதிய விவரங்கள் இல்லாமை, மீன்களை விரைவாக இறக்குவதற்கான மீன்பிடித் துறைமுகங்களின்மை ஆகியனவே அக்காரணங்களாகும்.

நவீன மீன்பிடிச் சாதனங்களாகிய எக்கோ சவுண்டர், ரேடியோ டெலிபோன், ரடார் போன்ற கருவிகள் பொருத்தப்பட்ட டிராலர்களைக் கொண்டு மீன்பிடிக்க முனைந்தால் மீன் பிடிப்பை இரண்டு மடங்காகப் பெருக்க முடியும்.

இயந்திரப்படகுகளில் மீன் பிடித்தலின் மூலம் சென்ற பத்தாண்டுகளில் இம்மாநிலத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நம் நாட்டுக் கலன்களில் உணவு விவசாய நிறுவன வல்லுநர்களின் உதவியுடன் மேற்கொண்ட பரீட்சார்த்த சோதனைகள் பாபிலோ படகு எனப்படும் 25 அடிப்படகு நிர்மாணத்துக்கும் 30 முதல் 37 குதிரை வேகமுள்ள 30 அடி 'இல்லுகாஸன் படகு' நிர்மாணத்திற்கும் வழிகோலியது. இத்தகைய படகுகள் இழுவலை மீன் பிடிப்புக்கு உதவின. மீன் துறையால் இராமேசுவரம், கடலூர், சென்னை கடலோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மீன்பிடி சோதனைகளின் பயனாக இரால்கள், காரைப்பொடி இருக்குமிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

படகில் மேம்பாடு செய்வதற்காக 37 முதல் 45 குதிரை வேகமுள்ள இஞ்சின்கள் பொருத்தப்பட்ட 32 அடிப்படகுகள் பயன்படுத்தப்பட்டன. மேலும் பெற்ற அனுபவம் 60 குதிரை வேகமுள்ள எஞ்சின்கள் பொருத்தப்பட்ட 36 முதல் 43 அடியுள்ள படகுகள் சென்னைக் கடலோரப் பகுதிக்கு மிகவும் ஏற்புடையது எனத் தெளிவுபடுத்தியது. இத்தகைய படகுகள் கட்டும் வேலை 1967-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. சென்ற 15 ஆண்டுகளாகவே இயந்திரப் படகுகள் இங்கு கட்டப்பட்டு வந்தாலும் ஆழ்கடலில் மீன்பிடிக்கப்படும் டிராலர்கள் நிர்மாணித்தல் அண்மையில்தான் மேற்கொள்ளப்பட்டது.

மீன்தொழிலை இயந்திர மயமாக்கும் திட்டத்தின் முக்கிய தேவைகள் பின்வருமாறு:—

மீன் பிடிப்பிடங்களைப் பற்றிய சரியான விவரங்கள் திரட்டுதல், பெரிய மீன்பிடிக்கலன்களை நிறுத்துவதற்குரிய மீன்பிடித்துறைமுக வசதிகள், டிராலர்களை இயக்கும் பயிற்சி பெற்ற கடற்கலன் ஆட்கள், போதிய நிதி வசதி ஆகியவையாகும்.

உணவு விவசாய நிறுவன வல்லுநர் இல்லுகாஸன் அவர்களின் உதவியுடன் கடலோரப்பகுதிகள் மீன்பிடிப்புக்குச் சோதிக்கப்பட்டதோடு இத்தகைய வேலைகள் சென்னை, கடலூர், இராமேசுவரம் ஆகிய இடங்களிலுள்ள கடலோர மீன் பிடிப்பு நிலையங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தூத்துக்குடியிலுள்ள இந்திய அரசின் தூரக்கடல் மீன் பிடிப்பு நிலையம் தூத்துக்குடிப் பகுதியிலுள்ள தூரக்கடல் பகுதிகளைச் சோதித்தது. சென்னைக் கடலோரப் பகுதிகளும், சென்னைக்கும் மண்டபத்திற்கும் இடையே உள்ள கடலோரப்பகுதிகளும் ஆழ்கடல் பகுதிகளும் அளவை செய்யப்பட வேண்டியுள்ளன.

இயந்திரப் படகுகள், பெரிய டிராலர்கள் தங்குவதற்குரிய தங்குதுறை வசதிகள்தான் மிக முக்கியத் தேவையாகும். அந்தவகையில் கடலூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களிலும் பரங்கிப் பேட்டை, இராமேசுவரம், மண்டபம், குளச்சல் ஆகிய இடங்களிலும் தோணித் துறைகளும் நிறுவப்பட்டன. இத்தகைய வசதிகள் 36 அடி வரை நீளமுள்ள படகுகள் தங்க ஏதுவாக இருக்கும். இவை டிராலர்களுக்கும் மற்றைய பெரிய படகுகளுக்கும் பயன்படா. மேலும் டிராலர்கள் மீன்பிடித்துத் திரும்பும் போது, பிடித்த மீன்களை விரைவாக இறக்கவும், பாதுகாக்கவும், ஐஸ், தண்ணீர் போன்றவைகளை வழங்குவதும் முக்கியமாகும். மத்திய அரசாங்க உதவியுடன் தூத்துக்குடி, சென்னை ஆகிய இடங்களில் மீன்பிடித்துறைமுகங்கள் நிறுவ முறையே 2 கோடி ரூபாயும் 3 கோடியே 88 லட்ச ரூபாயும் ஒப்புதல் தரப்பட்டுள்ளது. இவ்விரு இடங்களிலும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 1971-ல் சென்னைத்துறைமுகமும், 1972-ல் தூத்துக்குடித் துறைமுகமும் திறக்கப்பட்டுவிடும். இவை ஒவ்வொன்றும் 50 டிராலர்களுக்கும் 500 இயந்திரப்படகுகளுக்கும் இறங்குமிட, தங்குதுறை வசதிகள் நல்கும். இத்தகைய, மீன்பிடித் துறைமுகங்களின் நிர்மாணம் மீன் தொழிலில் பெரியதோர் சாதனையாகும். தமிழ்நாட்டுக் கடலோரப்பகுதிகளிலும், ஆழ்கடல் பகுதிகளிலும் மீன்பிடிப்புக்கு வசதிகளை வழங்கித் தமிழகத்தில் மீன் தொழிலைச் சார்ந்த துணைத் தொழில்களை மேற்கொள்வதற்கும் இது ஊக்கம் அளிக்கும்.

## கடற்கலன் பணிகளில் பயிற்சி

மீன்பிடித் துறைமுகத்திற்கடுத்தபடியாகக் கடலோரப் பகுதிகளிலும் ஆழ்கடலிலும் மீன்பிடி டிராலர்களை இயக்குவதற்கு வேண்டிய கடற்கலன் ஆட்களின் தேவையாகும். பெரிய மீன்பிடிப் படகுகளையும், டிராலர்களையும் இயக்குவதற்குப் பயிற்சி பெற்ற கப்பலாட்கள் இப்போது கிடைக்கவில்லை. இத்தகைய கப்பலாட்களுக்குப் பயிற்சி தருமுகத்தான் கொச்சியில், மத்தியப் பயிற்சி நிலையம் ஒன்றை இந்திய அரசாங்கம் அமைத்துள்ளது. 1969ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இத்தகையதோர் பயிற்சி நிலையம் சென்னையில் துவக்கப்பட்டுள்ளது. இந்தியாவின்கீழைக் கடலோரப் பகுதிகளில் இயங்கும் மீன்பிடி டிராலர்களை இயக்கவும், பேணிப் பாதுகாக்கவும் தேவையான கடற்கலன் ஆட்களுக்குப்பயிற்சியளிப்பதில் இந் நிலையம் மிக முக்கிய பங்கு வகிக்கும்.

மீன்பிடித் தொழிலுக்குத் தேவையான நிதியுதவி நல்குவதற்கு அண்மைக்காலத்தில் வணிக வங்கிகள் பெரும் அளவில் உதவுகின்றன. இந்தியா தொழில் நிதி உதவி நிறுவனம், விவசாய மறுநிதிக் கார்ப்பரேஷன் போன்ற நிறுவனங்களும் மீன்பிடித் தொழி



லுக்கு நிதி உதவி நல்க முன்வந்துள்ளன.

மீன்களைப் பிடிப்பதிலும், பாதுகாப்பதிலும் மேனாட்டுப் புதிய முறைகள் தமிழ் நாட்டிலும் கடைப்பிடிக்கப்படுகின்றன. நாள் ஒன்றுக்கு 3½ டன் மீன்களை உறையவைக்கும் திறன் கொண்ட உறையவைப்பு நிலையம் எண்ணூரில் நிறுவப்பட்டு அது 5 ஆண்டுக் குத்தகைக்குத் தனியாருக்குவிடப்பட்டுள்ளது. மண்டபத்தில் இந்திய நார்வே திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட உறையவைப்பு நிலையம் உபயோகத்திற்குத் தயாராக உள்ளது. தூத்துக்குடியில் இத்தகையதோர் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இவை தவிர, தனியார் மூலம் சென்னையிலும், கடலூரிலும் சிறிய உறையவைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. சென்னை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வரும் மீன்பிடித் துறைமுகங்களில் மீன் பாதுகாப்பு நிலையங்கள் நிறுவ இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தூத்துக்குடியில் நாள் ஒன்றுக்கு 5,000 டன்கள் தயாரிக்கும் திறன்கொண்ட கலனடைப்பு நிலையம் மீன் துறையால் நிறுவப்பட்டுத் தனியாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு 50 டன் மீன்களை மூலப்பொருளாகக் கொண்டு மீன் தூள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று மண்டபத்தில் நிறுவப்பட்டு வருகிறது.

ஆழ்கடல் மீன் பிடிப்பைப் பெருக்கப் பொருத்தமான தளவாடங்களும், கருவிகளும் அவசியத் தேவைகளாகும். இவைகளை உள்நாட்டிலேயே தயாரிப்பதால் அந்நியச் செலாவணி மிச்சப்படுவதுடன் உடனுக்குடன் கருவிகள் கிடைப்பதற்கு வழி ஏற்பட்டு நாட்டில் பலருக்கு வேலை வாய்ப்பும் ஏற்படுத்தும்.

மீன்களின் இருப்பிடங்களைக் கண்டறிவதிலும், கடலில் கலன்களைச் செலுத்துவதிலும் எலக்ட்ரானிக் சாதனங்கள் அதிகமாகக் கையாளப்பட்டு வருகின்றன. மீன் கண்டுபிடிப்புக் கருவிகள், ரேடியோ, டெலிபோன், ரடார், டைரெக்ஷன் ஃபெண்டர் போன்றவை கலன்களில் கையாளப்படும் மிகவும் முக்கியமான கருவிகளாகும். இவை இப்போது வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. இத்தகைய கருவிகளைத் தயாரிப்பதில் இந்தியன் எலக்ட்ரானிக் தொழிற்சாலை அக்கறை கொண்டு சில கருவிகளைத் தயாரிக்க முற்பட்டுள்ளது.

நான்காம் திட்டத்தில் 1525 இயந்திரப் படகுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர ஆழ்கடல் மீன்பிடிப்புத் திட்டத்தில் சென்னை, தூத்துக்குடி ஆகிய இடங்களைக் கேந்திரங்களாகக் கொண்டு மீன் பிடிப்பை மேற்கொள்ளத் தமிழ் நாட்டிற்கு 70 டிராலர்களை ஒதுக்கீடு செய்ய இந்திய அரசாங்கம் சிபாரிசு செய்துள்ளது. இந்தியா பூராவுக்கும் வழங்கப்படவிருக்கும் 300 டிராலர்களில் 70 டிராலர்களைத் தமிழ் நாடு பெறுகின்றதென்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய டிராலர்கள் நான்கு ஏற்கனவே கட்டப்பட்டு வருவதுடன் அவற்றில் இரண்டு 1970–71ல் பெறப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. நான்காம் திட்டத்தின்கீழ் வழங்கப்படவிருக்கும் 70 டிராலர்களில் 10 மீன்துறையாலும், 60 தனியார் நிறுவனங்களாலும் மீன் பிடிப்புக்குப் பயன்படுத்தப்படும். இந்த மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டால் நான்காம் திட்ட முடிவில் தமிழ்நாட்டு மீன் உற்பத்தி 5 லட்சம் டன்னாகப் பெருகும்.








**அறிவுக்குக் கருவூலம்.**

''தமிழரசு''—அரசாங்க வெளியீடு—வெளி வருகிறது என்றதும் எல்லோரும் இயற்கையாக எண்ணியது, வழக்கம்போல் கவர்ச்சியற்று பழுப்புத் தாளில் அரசாங்கப் புள்ளி விவரங்களைத் தாங்கி வரும் ஏடாக இருக்கும் என்பதேயாகும்.

ஆனால் ''தமிழரசு'' எல்லாத் துறையிலும், சிறந்து, கண்கவர் முறையில் அறிவுக்குக் கருவூலமாக வெளிவந்துள்ளதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

சிற்பங்கள், சிறந்த தலைப்புகள் புகைப்படங்கள், சிறு கதை, கவிதை, பொருளாதாரக் கட்டுரை, தொழில் முன்னேற்றம் என எல்லாம் அடங்கிய ஒரு முற்போக்கு இதழாக வெளிவந்துள்ளதைக்காண, இவ்வளவு சிறந்த செயலாற்றும் திறமையுள்ள அரசாங்க ஊழியர்களை இத்தனை நாள் ஏன் பயன்படுத்தவில்லை? என்றே நமக்குக் கேட்கத் தோன்றுகிறது.

அரசாங்கத்தின் பல்வேறு துறைகளுக்கும் தனித்தனித் தலைப்புகளில் தொடர்ந்து செய்திகளைத் தர வேண்டுகிறோம்.

இந்தியாவிலேயே அரசாங்க வெளியீட்டில் தலை சிறந்ததாக ''தமிழரசு'' விளங்கப் பாடுபடும் இதன் ஆசிரியர் குழுவினரைத் தமிழர்களின் சார்பில் பாராட்டுகிறோம்.

நா. முத்துக்குமாரசாமி,
ஆசிரியர்-மக்களரசு,
பட்டுக்கோட்டை.

**பஞ்சாமிர்தமாக இனித்தது.**

ஒரு ஜூலை மாத மாலைப் போதில் ''தமிழரசு'' இதழைப் படித்தேன்! அதிலுள்ள செய்திச் சுருள்கள் பஞ்சாமிர்தமாக இனித்தன. எண்ணங்களின் எழிலோ வியமாகத் திகழ்ந்தன. இதைப் படிக்க நான் உண்மையிலே கொடுத்து வைத்தவன்.

கா. மா. செல்லையா,
திருச்சி-2.

**பயன் மிகுந்தது.**

''தமிழரசு'' இரண்டாவது இதழைப் பார்த்தேன். பயனுள்ள பல கட்டுரைகளைத் தந்திருந்தீர்கள். வெறும் புள்ளி விவரப் பட்டியலாக இல்லாமல், புகைப்படங்களுடன், எளிய நடையில் இனிய முறையில் வெளி வந்திருந்தது.

தொடர்ந்து வரும் இதழ்களை எண்ணக் கருவூலமாகச் சேர்த்து வைத்திருக்கத் திட்டமிட்டிருக்கிறேன்.

கு. கதிர்வேலன்,
செஞ்சி.

**நேர்முக வர்ணனை.**

தமிழரசு ஜூலை 16 இதழில் வந்த முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயண வழியனுப்பு விழாக் கட்டுரை—அடிதொழுது விடைபெறுகிறேன்- அதைத்தான் குறிப்பிடுகிறேன். நிகழ்ச்சிகளை நேரில் பார்ப்பது போல், நேர்முக வர்ணனையைக் கேட்பது போல் செய்திக் கோவையாக அமைந்திருந்தது. எனது பாராட்டுக்கள்.

ந. அன்புமணி,
சென்னை-1.

**படங்கள் பரவசமூட்டின.**

இரண்டாவது இதழின் முதல் பக்கத்தில் வெளியான சிலையின் படத்திலிருந்து ஒவ்வொரு படமும் பரவசமூட்டின. ''தமிழரசு'' கருத்துக்கு விருந்தளிக்கும் ஏடு மட்டுமல்ல, கண்ணுக்கு விருந்தளிக்கும் வண்ண ஓவியம்.

செந்திலப்பன்,
சேலம்.

**உங்களையும் சேர்த்து..**

''காலம் மாறியது'' கார்ட்டூனைத் ''தமிழரசு'' பத்திரிகையில் பார்த்தேன். அரசு இதழ் அதிசயமாக மாறி விட்டதையும் அதில் ஓர் அயிட்டமாகச் சேர்த்துக்கொள்ளலாமே!

ஆமாம்! "தமிழரசு" இதழ் அத்தனை புதுமையுடன் திகழத்தான் செய்கிறது.

எஸ். கௌசல்யா,
மதுரை.

---


## தமிழரசு

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | .. | ரூ. 8-00 |
| ஆறு மாதங்கள் | .. | ரூ. 4-00 |
| தனிப்பிரதி விலை | . | 35 காசுகள் |

விவரங்களுக்கு :

**இயக்குநர்,**
**செய்தி, விளம்பரத்துறை**
**கோட்டை, சென்னை-9.**

# ஓரங்க நாடகம்

## கவிஞர் ஈரோடு தமிழன்பன்





தேன்கிண்ணம்! தரைவேரின் வண்ண எண்ணம்!
திசையாடைக் காற்றுக்குத் திண்டு மெத்தை!
வான்தந்த கூன்தந்த குளிரைப் பாட்டில்
வரவழைக்கும் வண்டுகளுக் குணவுச் சாலை!
ஊனுடம்பு மதுமாது வனப்பைப் பார்க்க
உபயோகப் படுமுரைகல்! ஒளிக்கூ டாரம்!
தான்வாழும் 'நாள்குறுக்கம்' என்றால் கூடத்
தன்மணத்தால் அளபெடுக்கும் புகழின் உச்சி!

மகரந்த மாளிகை! வான் நீல மார்பை
மணத்தாலே ஊறவைக்கும் வாசக் கோப்பை!
சுகத்துறைக்குக் கொண்டுசெலும் இனிப்புத் தேகச்
சுந்தரத்தோ ணிப்பெண்ணின் பற்கள் போல
நகைசெய்த சிற்றரும்பின் 'நேற்றும்' அந்த
நகர்கோயில் கோபுரத்துக் கலசத் தைப்போல்
தகதகக்கும் சதைக்கனியின் 'நாளை' யும்தம்
சந்திப்பை நடத்துகின்ற 'இன்று' மேடை!

தன்னைவந்து தொட்டவர்க்கு மென்மைக் கர்த்தம்
தருகின்ற அகராதி! பன்னீர்ப் பொய்கை!
அன்பென்றால் ஈரம்! அதைக் காட்டி மக்கள்
அறிந்துகொள்ள அழைப்புவிடும் புதுக்கல் லூரி!
என்றுமியற் கையின்வாய்உச் சரிக்கும் பாடல்!
இலையரங்கில் பகல் எழுதும் வெளிச்ச வட்டம்!
மின்வார்ப்புத் தகட்டிதழ்கள் குடும்பம்! பட்டு
மேடை! நெய்யில் லாதெரியும் சோலைத் தீபம்!

சித்திரஇ யற்கையின்தேன் உதட்டில் மின்னிச்
சிரிக்கின்ற மவுனமான கனவு! தன்மை
முத்தமிடக் கொடிகாட்டும் தங்கக் கன்னம்!
மூடாத ஓவியநூல் வாச ஏடு!
பத்திரிகை நடத்துகின்ற பருவ காலப்
பச்சைத்தாள் விழாமலராம் படைப்பு! சாவின்
ஒத்திகையில் தூக்கமிலா தொருநாள் மேடை
ஓரங்க நாடகத்துள் முடியும் வாழ்க்கை!


அப்பொழுது
இப்பொழுது
பிற்பட்டோர் நலத்துறை
பிற்பட்ட மக்களின் குறைகளைக் களைய முழுமையான கவனம் செலுத்தப்படவில்லை.
பிற்பட்ட வகுப்பினர் குறைகளைக் களைய தனியான "துறை"
புது வாழ்வு மலர்ந்தது
கலப்பு மணம் செய்து கொண் டோர் கவனிக்கப்படவில்லை.
கலப்பு மணம் செய்து கொண் டோருக்குத் தங்கப் பதக்கம்.



அப்பொழுது
கலையுலகம் ஒதுக்கி
வைக்கப்பட்ட நிலை.
இப்பொழுது
ரூ
சிறந்த திரைப்படங்களுக்குப்
பரிசு
மூடிய தொழிற்சாலைகள்
மூடப்பட்ட நிலையிலேயே
இருந்தன.
மூடப்பட்ட தொழிற்சாலை
களை அரசு ஏற்றுநடத்த
முன் வந்துள்ளது.

# ஒரு தித்திப்புக் கதை



ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவில் உள்ள பெரிய அரசுகள் கூட ஓர் அவுன்ஸ் சீனி வாங்க இயலாத நிலை இருந்தது. இனிப்புக்காகத் தேன் கூடுகள் வைத்துத் தேன் சேகரித்து உபயோகித்து வந்தனர். 17-வது நூற்றாண்டில் ஐரோப்பாவில் சீனி, பணக்காரக் குடும்பங்களின் சாப்பாட்டுப் பட்டியலில் விசேடப் பங்கைப் பெற்றது.

பிரெஞ்சு, ஜெர்மன் யுத்தத்தின் போது ஜெர்மன் விஞ்ஞானிகள், சீனி உடலுக்குப் புத்துணர்ச்சியைக் கொடுப்பது என்று கண்டுபிடித்து ஒவ்வொரு சிப்பாய்க்கும் ஒரு சிறிய பை நிறையச் சீனியைக் கொடுத்து அனுப்பிச் சிப்பாய்கள் தளர்ச்சி அடையும்பொழுது ''நில், சீனியைச் சாப்பிடு'' என்று உத்திரவிட்டதன் இரகசியத்தைப் பிரெஞ்சுக்காரர்கள் அறிந்து கொள்ள வெகு நாளாயிற்றாம். மேல் நாடுகளில் சீனி அதிகமாய் உற்பத்தியான பொழுது சிமிண்டுடன் கலந்து போர்ட்லண்டு சிமிண்டின் தரத்தை உயர்த்தினர்.

பழங்காலத்தில் பெர்சியாவில் ஒருவிதப் புழுக்கள் மூலம் சீனி தயாரிக்கப்பட்டதாம். ஆஸ்திரேலியாவில் ஒரு வித மரத்தில் வடியும் பாலிலிருந்து தயாரிக்கப்பட்டது. ஆனால், இன்று பீட்ரூட்டிலிருந்தும், கரும்பிலிருந்தும் பதநீரிலிருந்தும் சீனி தயாரிக்கப்படுகிறது.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் சிசிலியன் விஞ்ஞானி ஒருவர் பீட்ரூட்டைக் கால் நடைகள் அதிகமாய் விரும்பிச் சாப்பிடுவதால் அதில் ஒரு சத்து இருப்பதாய்க் கண்டு பிடித்தார். அதே சமயத்தில் பிரெஞ்சு தேசத்துத் தாவர விஞ்ஞானி அதிகமான சீனியை விளைவிக்கும் வழியைக் கண்டு பிடித்தார். சுமார் 200 பீட் ரூட் சீனி ஆலைகள் பிரான்சில் வேலை செய்தன.

இந்தியாவில் முதலில் சீனியைப் பனை மரங்களிலிருந்து தயாரித்தனர். வங்காளத்து ஈச்சமரமும் தென்னகத்துப் பனையும் இனிப்பைத் தந்தன. 1837-ம் ஆண்டில் முதலில் ''பர்துவான்'' சீனி ஆலை வங்காளத்தில் ஆரம்பிக்கப் பெற்றுப் பனஞ் சீனி உற்பத்தி செய்யப்பட்டது.

தென்னகத்தில் பாரி அன் கம்பெனியார் பனை வெல்லத்திலிருந்து சீனி தயாரிக்க ஆந்திராவில் மேற்குக் கோதாவரி மாவட்டத்திலும், தமிழகத்தில் குலசேகரன்பட்டினம், நெல்லிக்குப்பம், தக்கலை, கேரளத்தில் பாலக்காடு முதலிய இடங்களிலும் சீனி ஆலைகள் வைத்தனர்.

முதன் முதலில் கரும்புச் சீனி எங்கு உற்பத்தி செய்யப்பட்டது என்பதற்கு இது வரை எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை. சீன நாட்டு வரலாற்று ஏடுகளிலிருந்து சீனி செய்யும் முறை எகிப்து தேசத்திலிருந்து இந்தியாவிற்குப் பரவியதாகத் தெரிய வருகிறது. ஆனால், வடமொழி நூல்களில் சீனியைக் கிரிட் என்றும் கிராவல் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். கி.பி. 627-ம் ஆண்டில் சீனாவிலிருந்து ஒரு மனிதர் இந்தியாவிலுள்ள பீகார் மாநிலத்திற்கு அனுப்பப்பட்டு, சுத்தமான சீனி செய்யும் முறையைக் கற்றுச்சென்றார் என, பேன்ட்சா என்ற வரலாற்றாசிரியர் குறிப்பிட்டுள்ளார். 10-ம் நூற்றாண்டில் எழுதப் பெற்ற ஆயுர்வேத வைத்திய நூல்களில் சீனியைக் குறிக்கும் ''சர்க்கரா'' என்ற வார்த்தை அநேக இடங்களில் காணப்படுகின்றது. எனவே பத்தாம் நூற்றாண்டில் தொடங்கி கரும்பிலிருந்து சீனி எடுக்கப்பட்டது என்ற முடிவுக்கு வரலாம்.

## பனைப் புராணம்

இந்தியாவில் சுமார் 5 கோடி பனை மரங்கள் இருப்பதாகவும், தமிழகத்தில் மட்டும் 4 கோடி பனை மரங்கள் இருப்பதாகவும் தோராயமாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

பனையின் ஆயுள் காலம் 90 முதல் 120 ஆண்டுகள். பனையில் ஆண் பனை, பெண் பனை என்று உண்டு. நுங்கு தருவது பெண் பனை. ஆண் பனை காய்ப்பது கிடையாது.

பனை 801 வகைகளில் உபயோகப்பட்டது என்று "தால விலாசம்" என்ற சமஸ்கிருத நூல் கூறுகிறது.

பனையின் பாளையிலிருந்து சொட்டும் பத நீரை, தலைவனை நினைத்துத் தலைவி வடிக்கும் கண்ணீருக்கு உவமானமாக எடுத்துக் கூறுகிறார், ஆங்கிலக் கவிஞர் கிட்ஸ்.

பதப்படுத்தி எடுக்கக்கூடிய நீர் என்பதால் 'பதநீர்' என்றும், அரசர்கள் விரும்பிப் பருகியதால் பதி (அரசர்) நீர் (விரும்பிய பானம்) என்றும் பெயர் பெற்றதாகவும் கூறுவர்.

# கல்லெல்லாம் சிலை சொல்லும்



'ஙணீர் கணீர்' என்று சுத்தியால் சிற்றுளியில் அடிக்கும் ஒலி பாறையில் மோதி எதிரொலிக்கிறது. கற்கள் சிறு சிறு சிம்புகளாகச் சிதறுகின்றன. சிற்பிகள் கேவாத பெருந்தச்சன், சாதமுக்கியன், குணமல்லன், ஆபாஜன் ஆகியோர் குன்றன்ன கற்கோயில்களை உருவாக்கும் அரிய பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்கள் கைபட்ட இடமெல்லாம் கலையாகப் பரிமளிக்கின்றது. பல்லவப் பேரரசன் சுற்றி வருகிறான். தனது கற்பனையில் உருவான திட்டங்கள், சிற்பங்களாக, சிலைகளாக, கற்கோயில்களாக உயிர்பெற்று எழுவதைக் காண்கிறான். அவன் உள்ளம் பேருவகை கொள்கிறது காட்சி மறைகிறது.

சுமார் 1300 ஆண்டுகளுக்குப் பின்-கற்கலை பிறந்த அதே மாமல்லை மண்ணில் இன்றும் அதே 'கணீர் கணீர்' ஒலி. இன்று கேவாதபெருந்தச்சன் இல்லை. சாதமுக்கியன், குணமல்லன், ஆபாஜன் இல்லை. ஆனால் அவர்கள் தொடங்கி வைத்த கலை அழிந்து படாவண்ணம் போற்றிக்காப்பாற்ற—அதற்குப் புத்துயிர் கொடுக்கத் தமிழக அரசு ஏற்படுத்திய சிற்பக் கூடம் (பள்ளி) அந்த அரிய பணியைத் தொடருகிறது.

இருபத்து மூன்று இளஞ் சிற்பிகளை மாணவர்களாகக் கொண்டு இயங்கும் இந்தச் சிற்பக் கூடத்தில் தற்போது தயாராகும் சிலைகளில் முக்கியமானவை 'தீபநாச்சியார்' என்ற பெயரில் உருவாகும் ஒரே சாயலில் உள்ள இரு சிலைகள்.

விரைவில் அனைத்துலக விமான நிலையமாகவிருக்கும் மீனம்பாக்கத்திற்கு வரும் வெளிநாட்டவரையும் உள்நாட்டுப் பிரமுகர்களையும் இந்தத் தீபநாச்சியார்கள் வரவேற்பர்.

அவை வெறும் சிலைகள் அல்ல. சந்திரனைக் கைப்படுத்தி விட்ட மனிதனால் இச்சிலைகளுக்கு உயிரூட்ட முடியுமெனில் இந்தச் சிலைகள் பேரழகிகளாக உருப்பெறும்; கட்டிளங்காளையரின் கனவுக்கன்னிகளாக மாறும்.

நாலடி உயரமுள்ள இந்தச் சிலைகளை (பீடத்துடன் சேர்த்து சுமார் $5\frac{1}{2}$ அடி இருக்கும்) உருவாக்கிய சிற்பிகள் இந்தச் சிற்பக்கூடத்தின் மாணவர்கள் கமலநாதனும், பெருமாளும். செய்து முடிக்க ஆனகாலம் மூன்று திங்கள். சிலைகளின் மதிப்பு-ஒவ்வொன்றும் பீடத்துடன் சேர்த்து ரூ. 4,500 (சிலை ரூ. 3,000, பீடம் ரூ. 1,500). இங்கு இதுவரை தயாரிக்கப்பட்ட சிலைகளிலே இதுதான் அதிக விலை மதிப்புள்ளது.

இந்தச் சிலைகளைச் செய்யும்படி இந்தச் சிற்பக் கூடத்தை மத்திய அரசு கேட்டுக் கொண்டதே ஒரு கதை என்று விவரிக்கிறார். பள்ளிக்கண்காணிப்பாளர் திரு. வை. கணபதி. ''மத்திய அரசின் விமானப் போக்குவரத்து அமைச்சர் டாக்டர் கரன்சிங், ஹைதராபாத்தில் ஒரு அனுமான் கோவில் நிறுவினர். அதற்கான அனுமான் சிலையைச் செய்யும் பொறுப்பு இந்தச் சிற்பக் கூடத்திற்குக் கிடைத்தது. நாங்கள் சிலையினைச் செய்து கொடுத்தோம். அதைப் பார்த்த டாக்டர் கரன்சிங் மிகவும் பாராட்டினர். மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு எங்களைச் சிலை செய்யச் சொல்ல வேண்டும் என்ற எண்ணமே இதன் மூலம் தான் ஏற்பட்டதாம்''.

அடுத்த சிலை உருவத்தில் சிறியது. (சுமார் $1\frac{1}{2}$ அடி இருக்கும்). ஆனால் அதன் அழகு அளவிட்டுக் கூறுதற்கரியது. உலக அழகிகள் என்று ஏதேதோ அளவுகள் குறிப்பிடுவார்களே, அவையெல்லாம் இந்தக் கண்ணாடிப் பெண் (அதுதான் இச்சிலையின் பெயர்) உருவத்திற்கு நிகராகமாட்டா.

ஆஸ்திரேலியாவில் நடந்த பொருட்காட்சியில், இந்திய அரங்கிலிருந்த இந்தச் சிலை பலரையும் கவர்ந்ததால், இதில் பத்து சிலைகளை அனுப்பி வைக்கும்படிக் கேட்டிருக்கிறார்களாம். எனவே இந்தக் கூடத்தில் இவை பத்து தயாராகின்றன. இங்கு ஒன்றின் மதிப்பு ரூ. 500. சிட்னியில் ஆயிரம் ரூபாய்க்கு விற்குமாம்.

மாமல்லபுரத்தில், கடற்கோயிலுக்கும், பஞ்சபாண்டவ ரதங்களுக்கும் மத்தியில் உள்ள

தொல்பொருள் ஆராய்ச்சி அலுவலகத்திற்குப் பக்கத்தில் இரண்டு லட்சம் ரூபாயில் கட்டப் பட்டுள்ள இந்தப் பள்ளியின் தோற்றமே ஒரு கலைக் கோயி லாகக் காட்சி தருகிறது.

இங்குக் கட்டிடக் கலையும், சிற்பக் கலையும் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படுகிறது. மாமல்ல புரம், கும்பகோணம், திருச்சி, தஞ்சை, நெல்லை - இப்படி மாநிலத்தின் பல பகுதிகளிலு முள்ள மாணவர்களும் இங்கு பயிலுகிறார்கள். இவ்வாண்டு கொழும்பிலிருந்து இரு மாண வர்கள் சிற்பம் பயில வருகி றார்கள். வெளியூர் மாணவர்கள் தங்கிப்படிக்க மாமல்லபுரத்திலே விடுதியும் உள்ளது. மாண வர்களுக்கு இந்த ஆண்டு முதல் மாதம் ரூ. 60 உதவித் தொகை யாகத் (ஸ்டைபண்ட்) தரப்படு கிறது. இதுவரை முதலாண்டு மாணவர்களுக்கு ரூ. 40-ம், 2-ம் ஆண்டிற்கு ரூ. 45-ம், மூன்றும் ஆண்டிற்கு ரூ. 50-ம், 4-ம் ஆண்டிற்கு ரூ. 55 ஆகவும் இருந்து வந்தது. இப்போது அனைவருக்கும் மாதம் ரூ. 60 தரப்படுகிறது.

### நான்கு ஆண்டுப் படிப்பு

நான்கு ஆண்டுப் படிப்பான இதற்குத் தற்போது சான்றிதழ் வழங்கப்படுகிறது. பள்ளியாக இருக்கும் இதனைக் கல்லூரியாக உயர்த்தி 'டிப்ளமா' தரவேண்டு மெனக் கைத்தொழில்ஆலோசனை வாரியம் கூறி உள்ளது. இந்தக் கோரிக்கை பரிசிலனையில் உள்ளது என்று கண்காணிப்பாளர் குறிப் பிட்டார்.



கல் வேலைபாடுகள் உள்ள இந்தப் பள்ளியுடன், மரவேலைப் பாடுகள், உலோக சிற்பப் பணி கள் முதலியவற்றை இணைத்துக் கல்லூரியாக்கினல் இக்கலைகள் நன்கு வளரவும் நல்ல பலன் தரவும் இன்னும் அதிக வாய்ப்பு இருக்குமென்று அவர் கருது கிறார்.

'' ஆமாம். இங்கு சிற்பக் கல்வி பயிலும் மாணவர்களின் வருங்காலம், அதாவது வேலை வாய்ப்பு எவ்வாறு உள்ளது ? ''

### மாணவர்களின் கை வண்ணத்தில்

'' மிகவும் நல்ல முறையில் '' என்று விளக்குகிறார், திரு. கணபதி.

'' அறநிலையத் துறையில் சேர்ந்து ஒருவர் பணியாற்றினர். மாநிலத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்காக ராஜ கோபாலன், ராமன் என்ற இருவர் பணியாற்றினர்கள். காஞ்சீபுரத்திலுள்ள சொக்கீஸ் வரர் கோவிலையும், அங்கிருந்து 10 மைல் தொலைவிலுள்ள கூழம் பந்தல் கோவிலையும் சீர்செய்த வர்கள் இந்த மாணவர்களே.

இந்த வேலைப்பாடுகளைப் பார்த்த யுனெஸ்கோ நிபுணரான பேராசிரியர் ரைட், இவர்களைப் பெரிதும் பாராட்டினர். இனி மேல் கோயில் சீரமைப்புப் பணி களுக்கு இவர்களைத்தான் பயன் படுத்த வேண்டும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதோடு நவீனக் கட்டிடக் கலை நுணுக்கங்கள் நன்கு தெரிந்த வெளிநாட்டுப் பேராசிரியர்களை இங்கு அழைப்பித்து அவ்வப் போது மாணவர்களுக்குச் சொற் பொழிவு ஆற்றச் செய்யலா மென்றும் அவர் கருத்துத் தெரி வித்துள்ளார். இது ஆய்வில் உள்ளது.

டெல்லியிலுள்ள சுவாமிநாதர் கோயிலுக்காக வாலாஜாவில் சிலைகள் உருவாக்கப்பட்டன. அவற்றை உருவாக்கியவர்களும் இங்கு படித்த மாணவர்கள் தான்.

1968-69-ல் இங்கு பயின்ற இருமாணவர்களான ஏ. நாரா யணசாமி, எஸ். குமாரசாமி ஆகியோர் ஒரு குழுவினருடன் மலாசியா சென்று அங்கு மாரி யம்மன் கோயில் எழுப்பினர்கள்.

தற்போது மன்னாரில், திருக் கேதீஸ்வரர் கோயில் பணிக்காக இரு மாணவர்கள் இலங்கை சென்றுள்ளனர்.



இவை தவிரப் பலர் தமிழகத்தி லேயே பல்வேறு பகுதிகளில் பட்டறையும் வைத்துள்ளனர். மாமல்லபுரம், திருமுருகன் பூண்டி (கோவை), கருவேலன் குளம் (நெல்லை), திருச்சி ஆகிய பகுதிகளில் இந்தப் பட்டறைகள் இயங்கி வருகின்றன. மாமல்ல புரம் பட்டறைக்கு அரசு கடனுதவி அளித்துள்ளது.

### ஏர்பிடித்த கை

மீனம்பாக்கம் விமான நிலை யத்திற்குத் '' தீபநாச்சியார் '' சிலையை உருவாக்கும் முன்னாள் மாணவர் கமலநாதன் மாமல்ல புரத்தில் வேளாண்மைப் பெருங் குடியைச் சேர்ந்தவர். இவரது தந்தை விவசாயத்தோடு, பாறை களை உடைக்கும் வேலையினையும் மேற்கொண்டிருந்தார்.

ஆனால் கமலநாதனுக்கு சிற்பக் கலையில் ஆர்வம் மேலிட்டது. எட்டாவது வகுப்பு முடிந்ததும் இப்பள்ளியில் சேர்ந்து படித்து முடித்தார்.

'' ஆந்திராவிலுள்ள பத்திராச் சலம், ஹைதராபாத், சித்தப் பால்மண்டி மற்றும் காசி ஆகிய இடங்களிலுள்ள கோயில்கள் நிர்மாணிக்கும் பணிகள் எனது மேற்பார்வையில் நடந்தன. இத் தொழில் மிக்க கௌரவமாகவும் பெருமை தருவதாகவும் உள்ளது. முதலில் மாதம் ரூ. 40 சம்பளம் வாங்கி னேன். பின்பு அது தினக் கூலி ரூ. 6 ஆகவும், ரூ. 8 ஆகவும் படிப்படியாக உயர்ந்து மாதம் ரூ. 250 வாங்குமளவுக்கு உயர்ந் தது. தற்போது மாதம் ரூ. 350 சம்பாதிக்கிறேன். வேறு ஏதா வது தொழிலில் ஈடுபட்டிருந்தால் இவ்வளவு வருவாய் கிடைப்பது சந்தேகமே'' என்கிறார் திரு. கமலநாதன்.

### விற்பனை வாய்ப்புக்கள்

''இங்கு தயாராகும் சிலை களுக்கு நல்ல விற்பனை வாய்ப் புக்கள் உள்ளனவா? வெளிநாட் டவர் விரும்பி வாங்குகின்றனரா? அன்றி உள்நாட்டிலும் இக் கலைக்கு மதிப்பு உள்ளதா?''

கண்காணிப்பாளர் பதில் தரு கிறார்.

''ஹாலந்து, அமெரிக்கா, ஆஸ் திரேலியா போன்ற நாடுகளுக்கு அவர்கள் கேட்டதன் பேரில் மொத்தமாகச் சிலைகளை அனுப்பி யிருக்கிறோம். இது தவிர உலகின் பல்வேறு பகுதிகளிலிருந் தும் வரும் வெளிநாட்டவர் நமது விற்பனை நிலையத்திலிருந்து ஏராளமாகச் சிற்பங்களை விலை கொடுத்து வாங்குகின்றனர்.

உள்நாட்டிலும் இவற்றிற்கு நல்ல வரவேற்பு உள்ளது. தற் போது சென்னையிலுள்ள திரு. சர்மா என்பவர் தமது தோட் டத்தில் நிறுவச் சமணப் படிவம் ஒன்றை விரும்பிக் கேட்டுள்ளார். ரூ. 3,250 மதிப்புள்ள அந்தச் சிலை இப்போது இங்கு தயாரா கிறது.

கொடைக்கானல் ஏரியில் சில அழகிய சிலைகளை வைக்கவும் திட் டம் உள்ளது. அரசின் ஒப்புதல் கிடைத்ததும் வேலை ஆரம்பம் ஆகும்.''

''உங்களது ஆண்டு உற்பத்தி எவ்வளவு?''

''இந்தச் சிற்பப்பள்ளி தவிர, உற்பத்தி நிலையம் ஒன்றும் இங்கு உள்ளது. அது சென்ற ஆண்டு தான் துவக்கப்பட்டது. கடந்த ஓராண்டில் இது உற்பத்தி செய் துள்ள சிலைகளின் எண்ணிக்கை 154. விலை மதிப்பு ரூ. 25,000. இது தவிர இங்குள்ள விற்பனை



நிலையத்தில் ஆண்டுக்கு ரூ. 40,000 மதிப்புள்ள கலைப்பொருள்கள் விலை போகின்றன''.

### எக்ஸ்போ—70-ல்

''பொதுவாகச் சிலைகளுக்குத் தான் அதிக கிராக்கி உள்ளது''.

''வெளிநாட்டைப் பொறுத்த வரையில் தற்போது சிறிது மாற்றம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் இந்தியக் கட்டிடக் கலையிலும் தற்போது மிகவும் ஆர்வம் காட்டுகிறார்கள். எனவே நாங்கள் சிலைகள் உருவாக்குவதோடு, கோவில்களின் சிறிய மாதிரிப் படைப்புகளையும் (மாடல்) தயாரிக்கிறோம். ஜப்பானில் நடக்கும் எக்ஸ்போ-70-க்கு மாமல்லபுரம் கடற்கரைக் கோவிலின் மாடல் ஒன்றை அனுப்பியிருக்கிறோம். அதன் மதிப்பு ரூ. 9,000. இதற்கு அங்கு நல்ல வரவேற்பு உள்ளதாகக் கேள்வி.''

''மாணவர்களுக்குச் சிற்பக் கலை கற்பிக்க எந்த நூல்களைப் பின்பற்றுகிறீர்கள்?''

''இதற்கான பண்டைய நூல்கள் சில உள்ளன. அதில் குறிப்பிடத்தக்கது பூம்புகாரை நிர்மாணித்த சிற்பி மயன் எழுதிய 'மயமதம்' என்பது. மனுசாரம் என்ற ஏட்டுச் சுவடிகளும், மானசாரம் என்ற நூலும் குறிப்பிடத்தக்கன. இவற்றைப் பின்பற்றி மிகவும் முறையோடு, ஓவியம் வரைந்து காட்டிப் பின்பு கல் வேலைகளில் ஈடுபடுத்துகிறோம். முதலில் மாணவர்கள் சிற்பம் செதுக்குவது மாக்கற்களில்; பின்பு பச்சைக் கற்கள்; கடைசியில் நன்கு பயிற்சி பெற்றபின் கருங்கற்களில் சிலைகளை உருவாக்குவர்.

### கலைக்கோயில்களுக்குச் சுற்றுலா

''மாணவர்களைச் சரித்திரப் புகழ் பெற்ற கோயில்களுக்கு அழைத்துச் செல்வதுண்டா?''

''ஆமாம். முதல் மூன்றாண்டு மாணவர்களைக் காஞ்சி, தஞ்சை, மதுரை, நெல்லை போன்ற இடங்களில் உள்ள முக்கியமான கோயில்களுக்குச் சுற்றுலா அழைத்துச் செல்கிறோம். கடைசி ஆண்டு மாணவர்களை, பேலூர் சோமநாதபுரம், அஜந்தா, எல்லோரா, கோனார்க் முதலிய இடங்களுக்கு அழைத்துச் செல்கிறோம். இதற்கான செலவை தமிழகஅரசு ஏற்றுக்கொள்கிறது. இந்தச் சுற்றுலாக்கள் மாணவர்களுக்கு மிகவும் பயன் தருவதாக உள்ளன.''

''மாணவர்களை எவ்வாறு தேர்ந்தெடுக்கிறீர்கள்? சிற்பக் கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப் படுகிறதா?''

''சிற்பக் கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு, நாங்கள் முக்கியமாகக் கவனிப்பது அந்த மாணவர்களுக்குச் சிற்பக் கலையில் ஆர்வமுள்ளதா '' என்பதுதான். ஆர்வம் இல்லாவிட்டால் இத்தொழிலில் பரிமளிக்கவே முடியாது.

''வெளிநாட்டு மன்னர்கள், தலைவர்கள் பலராலும் பாராட்டப்பட்ட இந்தச் சிற்பப் பள்ளியின் நோக்கம், அழிந்து போக விருந்த இப்பழம் பெருங் கலைக்குப் புத்துயிர் அளிக்கப் பல புதிய சிற்பிகளை உருவாக்குவதே'' என்று குறிப்பிடும் கண்காணிப்பாளர் கணபதி, சிற்பப் பரம்பரையைச் சேர்ந்தவர். சென்னை அடையாற்றிலுள்ள காந்தி மண்டபத்தை உருவாக்கியவரும் முன்னாள் கண்காணிப்பாளருமான வைத்தியநாத ஸ்தபதியின் மகன்.

உலகெல்லாம் தமிழ்க் கலையைப் பரப்பிக் கொண்டிருக்கும் கற்சிலைகளை உருவாக்கிடும் ''கணீர் கணீர்'' என்ற சுத்தியல் சிற்றுளியின் ஒலி காதுகளில் ரீங்காரம் செய்துகொண்டேயிருக்கின்றது. சரித்திரப் புகழ் பெற்ற மாமல்லை இன்றும் புதிய சரித்திரத்தை அமைக்கிறது.



தமிழ் நாட்டிலிருந்து ஆண்டுக்குச் சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் மதிப்புள்ள சங்குகள், மேற்கு வங்காளத்திற்கு ஏற்றுமதி ஆகின்றன. சங்கு வளையல் செய்வதற்காக இந்தச் சங்குகளைத் தமிழகத்திலிருந்து வாங்குகிறது, வங்காளம்.

வங்காளத்தில், திருமணத்தின்போது சங்கு வளையல் அணிவிக்க வேண்டியது முக்கிய சடங்காகும். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த சங்கு வங்காளக்கடற்கரைப் பகுதிகளில் கிடையாது. எனவேதான் தமிழகத்திலிருந்து வாங்குகின்றனர். சுமார் இரண்டேகால் அங்குல குறுக்களவுள்ள சங்குகள்தான் வளையல்களுக்குப் பயன்படும்.



# தாய்க் குலத்தின் கைகளிலே...

" உங்கள் பெயர் ?"

" ஹேமாமாலினி ".

" எங்கே வேலை செய்கிறீர்கள் ?"

"மத்திய எலக்ட்ரோ கெமிகல் ஆராய்ச்சிக் கழகத்தில் ".

" வேலையின் பெயர் என்ன ? சம்பளம் எவ்வளவு ?"

". வேலையின் பெயர் ஜூனியர் டெக்னிக்கல் அசிஸ்ட்டெண்ட். சம்பளம் மொத்தம் ரூ. 429 கிடைக்கிறது."

"நீங்கள் எங்கே படித்தீர்கள் ?"

" அரசினர் மகளிர் பாலிடெக்னிக்கில்."

"அங்கே படித்தவர்கள் இந்த அலுவலகத்தில் இன்னும் வேலை செய்கிறார்களா ?

" ஆமாம். மாயவரத்தைச் சேர்ந்த ஆஷா லதா, நங்கநல்லூரைச் சேர்ந்த பாரதி மற்றும் பஞ்சாபைச் சேர்ந்த அனுசூயா ஆகியோர் இங்கு வேலை செய்கின்றனர். எல்லோருமே மகளிர் பாலிடெக்னிக்கில் படித்தவர்கள்தான்."

" உங்களுக்கு வேலை எப்படிக் கிடைத்தது ?"

" பாலிடெக்னிக்கில் நாங்கள் மூன்று ஆண்டுகள் படித்தோம், " டிப்ளோமா " பெற்றோம். பணி புரிவதற்குத் தகுதி பெற்றோம். வேலை கிடைத்தது ."

அமிழ்ந்து பேரிருளாம்
அறியாமையில்
அவலமெய்திக் கலையின்றி
வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல்
பெண்ணறமாகுமாம்.
உதயகன்னி உரைப்பது
கேட்டீரோ !

—என்று பாரதியார் கூறியதை நனவாக்கும் வகையில் கலையின்றி வாழ்வதை உமிழ்ந்து தள்ளிய மகளிரை உருவாக்கி வருகிறது அரசினர் மகளிர் தொழில் நுணுக்கப்பள்ளி.



சென்னை அடையாற்றில் உள்ள மத்திய பாலிடெக்னிக் பகுதியில் அமைந்துள்ளது மகளிர் பாலிடெக்னிக். ஆரம்பத்தில்



100 பெண்கள் சேர்க்கப்பட்டு வந்த இந்தத் தொழில்நுணுக்கப் பள்ளியில் இந்த ஆண்டு 165 பேர் சேர்க்கப்பட்டுள்ளார்கள். விண்ணப்ப மனுப் பெற்றவர்கள் மட்டும் 560 பேர்.

இந்தப் பள்ளியில் படிப்பதற்காகச் சம்பளம் எதுவும் இல்லை. மாணவிகளில் பாதிப்பேருக்கு மாதம் 50 ரூபாய் உதவிப் பணம் கொடுக்கப்படுகிறது. இதைத் தவிர ஆண்டுக்கு ரூ. 1,500-க்குக் குறைந்த வருமானம் உள்ள பெற்றோரின் மகள்களுக்கு ஸ்காலர்ஷிப்களும், கடன் வசதிகளும் உண்டு.

மூன்றாண்டில் முடிவுபெறும் இப் படிப்பு இரு வகைப்படும். ஒன்று வணிகப் பயிற்சிப் படிப்பு (Commercial Practice Course); மற்றொன்று, புகுமுகத் தொழிலியல் பயிற்சிப் படிப்பு (Pre-Technical Course). இரு பிரிவினருக்கும் முதலாண்டுப் படிப்பு, கல்லூரிப் புகுமுக வகுப்புப் படிப்புக்குச் சமமானதாகும்.

புகுமுகத் தொழிலியல் பயிற்சிப் படிப்புப் படித்து முடித்தபின் எலக்ட்ரானிக்ஸ், சிவில் எஞ்சினியரிங், கட்டிடக்கலைக் கருவித் தொழிலியல் (Instrument Technology) ஆகிய பாடங்களில் ஏதாவது ஒன்றில் இரண்டு ஆண்டுகள் படித்து " டிப்ளோமா " பெறுகிறார்கள். இவற்றில் மிகப் பிரபலமாகி இருப்பதுதான் எலக்ட்ரானிக்ஸ். கட்டிடக்கலையும், கருவித் தொழிலியலும் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொழில் நுணுக்கப் பள்ளியின் முதல்வர் திரு சீனிவாசன் நம்மை அழைத்துச் சென்று வகுப்புகளைச் சுற்றிக் காட்டுகிறார்.

ஓர் அறைக்குள் நுழைகிறோம். ஏதோ ஒரு வாசனை! உடன் வந்தவர் மூக்கைப் பிடித்துக் கொள்கிறார். " இது ரசாயன பரிசோதனைச்சாலை "— முதல்வர் விளக்குகிறார்.

அடுத்த அறையில் வரிசை வரிசையாக டைப்ரைட்டிங் இயந்திரங்கள் காணப்படுகின்றன. வணிகப் பயிற்சி பெறுகிறவர்களுக்குச் சுருக்கெழுத்தும், டைப்ரைட்டிங்கும் இங்கே உண்டு.

ரம்பம், சுத்தியல் சகிதம் பல பெண்கள் பயிற்சி பெறுவதை ஓர் அறையில் காண்கிறோம்.

" தச்சு வேலையும், கருமான் பயிற்சியும் மாணவியருக்கு உண்டு " என்று முதல்வர் கூறுகிறார்.

வேறு ஒரு அறையில் வானொலிப் பெட்டி, அது சம்பந்தப்பட்ட கருவிகள்......

" ஏனம்மா, உங்களுக்கு ரேடியோப் பெட்டியைப் பழுது பார்க்கத் தெரியுமா ?"—ஏதோ ஒரு கேள்வியைக் கேட்டு வைக்கிறோம்.

" பழுது பார்ப்பதா ? அவர்களுக்கு ரேடியோவின் பாகங்களை இணைத்து முழு ரேடியோவே செய்யத் தெரியும்."—ஆசிரியர் ராமசாமி பதில் கூறுகிறார்.

நமது மனத்திலே இனம் தெரியாத ஒரு நிறைவு ஏற்படுகிறது.

அடுத்த அறையில் தையற்கலை வகுப்பு.

வரிசை வரிசையாகத் தையல் இயந்திரம்.

முதல்வர் விளக்குகிறார்: " சென்னையில் உள்ள இந்த பாலிடெக்னிக்கில் மட்டுந்தான் தையற்கலை கற்றுக் கொடுக்கப்படுகிறது. "

" இவர்களுக்கு ' கோட் ' தைக்கத் தெரியுமா ? "—அருகில் இருந்தவர் கேட்கிறார்.

" பயிற்சி முடிந்த பின்னர் இவர்களுக்குத் தையற்கலை சம்பந்தப்பட்ட அனைத்துமே தெரியும். எதுவும் விலக்கு அல்ல " என்று கூறிய முதல்வர், அடுத்துள்ள அறைக்கு அ[illegible]த்துச் செல்கிறார்.

## தமிழாராய்ச்சி

" ஔவையார், வள்ளுவர் காலம் பழங்காலம்—அதை யடுத்து வந்தது புரட்சிக் கவிஞரின் நேற்றைய—இன்றைய காலம்.

இந்தக் காலங்களை நினைவூட்ட இன்றைய தினம் சென்னை மாநகரின் நடு நாயகமாக அண்ணா சிலை நிற்கிறது.

ஆகவே, சங்க காலத்தை வைத்து மட்டும் தமிழ்பற்றி ஆராய்ச்சி செய்வது போதாது; அண்ணா காலத்தையும் வைத்து ஆராய்ச்சி சுழல வேண்டும். இதை நினைவுபடுத்தத்தான் சென்னையின் நடுநாயகமாக அண்ணா சிலை இருக்கிறது."

உலகத் தமிழ் மாநாட்டில் மால்கம் ஆதிசேஷய்யா.

அங்கு சட்டை, கோட்டு, பாண்ட்; விதம் விதமாக அழகழகாய்க் குழந்தைகள் சட்டை; மகளிர் உடுப்புகள் அத்தனையும் விலைக்கு விற்கப் படுகின்றன. விலை கொள்ளை மலிவு! யாரும் வாங்கலாம்.

அருகில் இருக்கும் ஜன்னல் வழியாக வெளியில் பார்க்கிறோம். ஏதோ " டெலஸ்கோப் "பில் பார்ப்பது போல் மாணவியர் பார்க்கிறார்கள்.

முதல்வர் கூறுகிறார், " சிவில் எஞ்சினியரிங் பகுதியில் பயிற்சி பெறும் மாணவியர். சர்வே பயிற்சி பெறுகிறார்கள் ".

கல்வி இல்லை, உரிமை இல்லை
பெண்களுக்குக்

கடைத்தேற வழியின்றி
விழிக்கிறார்கள்.

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அன்று கனிந்துருகிக் கூறியவை மாறுதல் அடைவதைக் கண்டு மனம் நிறைவடைகிறோம்.

முதல்வர் தொடர்ந்து கூறுகிறார், " மாணவியர் நலத்திற்கென்று இங்கு ஒரு "காண்டீன்" உண்டு. குறைந்த விலையில் உணவும், சிற்றுண்டியும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அத்துடன் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் இயங்கி வருகிறது. மாணவியருக்கு ஹாஸ்டல் ஒன்றும் உண்டு. இதில் 125 மாணவியர் இருக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவிக்கு ரூ. 40 முதல் ரூ. 50 வரைதான் ஆகிறது.

"மாணவியருக்கென்று ஒரு தனிப் பேருந்து உண்டு. அது மைலாப்பூர் - சைதாப்பேட்டை ஆகிய பகுதிகளில் இருந்து மாணவியரை அழைத்து வருகிறது ".

கடைசியாக ஒரு கேள்வி கேட்கிறோம்.

" இதில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு எப்படி இருக்கிறது?"

முதல்வர் புன்முறுவலுடன் பதிலளிக்கத் தொடங்குகிறார்.

" நமது பாலிடெக்னிக்கில் படித்த மாணவியருக்குச் சுலபமாகவே வேலை கிடைத்துவிடுகிறது. இதில் படித்தவர்கள் சென்னையில் உள்ள இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், பிலிப்ஸ் இந்தியா, மத்திய தோல் ஆராய்ச்சிக் கழகம், பெங்களூரில் உள்ள பாரத் எலக்ட்ரானிக்ஸ், இந்தியன் டெலிபோன் இண்டஸ்ட்டிரிஸ், மத்திய எலெக்ட்ரோ கெமிகல் ஆராய்ச்சிக் கழகம் ஆகிய நிறுவனங்களில் வேலை செய்கிறார்கள். நகரில் உள்ள வங்கிகளிலும், வணிக நிறுவனங்களிலும் பலர் வேலை பார்த்து வருகிறார்கள்."

தமிழகப் பெண் குலத்தின் எதிர்காலத்தை நினைவு கூர்கிறோம். மனத்தில் மகிழ்ச்சி அரும்புகிறது.

"விலகி வீட்டிலோர்
பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில்
ஒழிப்பராம்"

என்ற பாரதியாரின் வாக்கு நிறைவாகி வருவதைத்—தாய்க்குலத்தின் கைகள் நிறைவானசெயல் புரிவதைக் கண் கூடாகக் காண்கிறோம்.



தலைப்பில் காணப்படும் ஹேமா மாலினி, ஆஷாலதா, பாரதி, அனுசூயா ஆகிய நான்கு மகளிரும் இந்தத் தொழில் நுட்பப் பள்ளியில் படித்துத் தேறியவர்கள்தான். தற்போது அவர்கள் சென்னையிலுள்ள மத்திய எலெக்ட்ரோ கெமிக்கல் ஆராய்ச்சிக் கழகத்தில் பணியாற்றி வருகிறார்கள்.



''பொறியியல் துறையில் படிக்கவும் பணியாற்றவும் பெண்கள் தகுந்தவர்களல்ல என்ற கருத்து நெடுங்காலமாக இருந்து வந்தது. அதனால் பெண்கள்கூட இந்தப் படிப்புகளில் அக்கறை காட்டாமல் இருந்தனர். இப்பொழுது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. நாங்கள் இந்தப் பயிற்சியில் படித்துத் தேறியதோடு திறம்படப்பணியாற்றியும் எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறோம். பொறியியல், மற்றும் தொழில் நுணுக்கத் துறையில் ஆடவருக்கு ஈடாக மகளிரும்பணியாற்ற முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப இருக்கிறது.'' என்று ஹேமாமாலினி நம்பிக்கையுடன் குறிப்பிட்டார்.



அடையாறு மகளிர் தொழில் நுணுக்கப்பள்ளியில் நாம்கண்ட காட்சி இதனை உண்மை உண்மை என்று பறைசாற்றுகிறது.

'பெண்களால் முன்னேறக் கூடும்—நம்
வண்டமிழ் நாடும் எந்நாடும்....''

—புரட்சிக் கவிஞர்



# கன்னியர் விரும்பும் கார்குழல்

அந்த இள மங்கை, நிலைக்கண்ணாடி முன் நின்று கூந்தலை வாரிக் கொண்டிருக்கிறாள். கார்குழலாள் என்று கவிஞர்கள் வர்ணிப்பார்களே அது இந்த மங்கைக்குத்தான் பொருந்தும். அதை அறிந்து தானோ என்னவோ அவளது பெற்றோர் அவளுக்குக் குழலி என்ற இனிய தமிழ்ப் பெயரினைச் சூட்டியிருந்தனர்.

பக்கத்து வீட்டுக் கோதையை நினைத்துக்கொண்டாள் குழலி. பொங்கி வந்தது புன்னகை. கோதைக்குக் கூந்தல் என்று சொல்லிக் கொள்ள ஒன்றும் கிடையாது. எலி வால் போன்ற சடை, அதுவும் கேப்பைக் கதிர் போன்று திருகித் திருகி நிற்கும். அதை நினைத்ததும் குழலிக்குச் சிரிப்பு வந்தது. பாவம் கோதை;

‘‘வேலனுக்கு அரோகரா . .
கந்தனுக்கு அரோகரா . . .
வேல் ! வேல் . . . .
வீரவேல் தாரை வேல்
விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள்
திருக்கைவேல் . . . .’’.

பக்தர்களின் பரவசக் குரல் பின்னணியில் ஒலிக்கிறது.

### காணிக்கை

குழலி பெருமூச்சு விடுகிறாள். 18 ஆண்டுகளாக எண்ணெய்யும், நறுமணத் தைலமும் தடவி வளர்த்த அவளது கூந்தல், பிற மங்கையர் பார்த்துப் பெருமூச்சு விட வைக்கும் அந்தக் கார்குழல், இன்னும் சிறிது நேரத்தில் பழனியாண்டவனுக்குக் காணிக்கை ஆகப்போகின்றது.

குழலி ஐந்து வயதுச் சிறுமியாக இருந்தபோது ஒரு பெரிய கண்டத்திலிருந்து, உயிர் தப்பினாள். அதற்காகத் தம் மகள் 18 வயது எய்தியதும் அவளது கூந்தலினைப் பழனி முருகனுக்கு அளித்து விடுவதாக அவளது பெற்றோர் வேண்டியிருந்தனர்.

வேண்டுதலை நிறைவேற்ற இன்று பெற்றோருடன் பழனிக்கு வந்திருக்கிறாள் குழலி. இன்னும் சிறிது நேரத்தில்...... குழலி தன் தலையைத் தடவிப் பார்த்துக் கொள்கிறாள்.

குழலி மட்டுமல்ல. குழலியைப் போன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் நாள்தோறும் பல்வேறு கோயில்களில் தங்களது கூந்தலை இறைவனுக்குக் காணிக்கையாக்குகின்றனர்.

பரீட்சையில் தேறுவதற்காக வேண்டுதல், வேலை கிடைப்பதற்காகத். தொழில் வளர, நோயிலிருந்து விடுபட, மகள், மகனுக்குக் குறித்த காலத்தில் திருமணம் நடந்தேற—இப்படி

எண்ணற்ற காரணங்களுக்காகத் தங்களது கூந்தலை அளிக்க முன் வருகின்றனர்.

மெரினு கடற்கரையில், அண்ணுவின் சமாதி அருகே, கோடம்பாக்கம் ஸ்டூடியோ வட்டாரத்தில், மாமல்லபுரக் கலைச் சின்னங்களின் எழிலைப் பருக வரும் எண்ணற்ற சுற்றுப் பயணிகளைப் பார்க்கும்போது நமக்குத் திருப்பதியும், திருத்தணியும், பழனியும், திருச்செந்தூரும் நினைவுக்கு வருகின்றன.

ஆனுல், அவர்கள் காணிக்கையாக வழங்கும் இந்தக் கூந்தல், நாட்டுக்கு லட்சக் கணக்கான பணத்தினை வருவாயாகத் தருவதைப் பலர்அறிய மாட்டார்கள்.

**மாதம் 10 டன் கூந்தல்.**

சென்னை அம்பத்தூர் தொழிற் பேட்டையின் ஒரு கோடியில்அமைந்துள்ள 'விக் இந்தியா' என்ற செயற்கைச் சிகைத் தயாரிப்பு நிறுவனம் இந்த ஆக்கப்பணியினைச் செய்கிறது. அரசின், ''ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனை'' ச் சேர்ந்தது இந்த நிறுவனம்.

சுமார் 3 ஆண்டுகளுக்கு முன், அதாவது 1967-ம் ஆண்டு சனவரித் திங்களில் துவக்கப்பட்ட இந்த நிறுவனம், மாதந்தோறும் வாங்கும் கூந்தல்களின் எடை சுமார் 10 டன்.

இதில் திருப்பதி தருவது மாதம் சுமார் 3 முதல் 4 டன். பழனி அளிப்பது சுமார் ½ டன். மீதியைத் தருவது தமிழகத்தில் உள்ள 40-க்கும் மேற்பட்ட திருத்தலங்கள். மைசூரிலிருந்தும் கொஞ்சம் வருகிறது. பெரும்பாலாக வருவது ஆறுபடை வீடுகளிலிருந்து.



ஆமாம், மாதம் 10 டன்னுக்கா ''விக்'' தயாரிக்கிருர்கள்! உங்களது கண்கள் கேள்விக்குறியோடு விரிகின்றனவா ?

இந்தக் கேள்வியை 'விக் இந்தியா' நிர்வாகி திரு வைத்தியநாதனைக் கேட்டால் உதட்டிலே ஒரு இனிய புன்னகையை நெளிய விடுகிருர். 'விக்' தயாரிப்பது சிக்கலான, நுணுக்கமான கலை. ''வாருங்கள் ! நேரில் பாருங்கள் ! புரிந்து கொள்வீர்கள்'' என்று அழைக்கிருர். இனி அவரைத் தொடருவோம்:—

**பஞ்சுப் பொதிகள் போல**

முதல் அறை, தொழிற் கூடத்தின் கடைசியில் இருக்கிறது. கோயில்களிலிருந்து லாரிகளில் ஏற்றி வரப்படும் கூந்தல்கள் பஞ்சுப் பொதிகள் போல் மூட்டை மூட்டையாகக் கிடக்கின்றன.

அடுத்த அறையின் அருகில் சென்றதும் சற்று முகத்தைச் சுளிக்கிருேம், அந்தக் கச்சாப் பொருளைப் பார்த்து. பந்து போலும், சிக்கலுடனும் உள்ள கற்றை கற்றையான முடிகள். சுமார் 50 தாய்மார்கள் அமர்ந்து மிகவும் பொறுமையுடன் வேண்டாதவற்றையெல்லாம் நீக்குகிருர்கள்.

திரு வைத்தியநாதன் நமது கேள்விக்குப் பதில் தருகிருர். ''வாங்கி வரும் கூந்தல்களில் பெரும் பகுதியை நீக்கி விடுகிருேம். குட்டையானவற்றைப் பயன்படுத்துவதேயில்லை''.

**வர்ண மாற்றம்**

அடுத்த கட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட கற்றைகள் பல ரசாயன மாற்றங்களுக்குட்படுகின்றன. பிறகு வெளி வருவது ''பிளீச்'' செய்யப்பட்ட வெள்ளையான கூந்தல்கள்.

'' ஏன் வெள்ளையாக்கி விடுகிறீர்கள் ''.

''அப்போதுதான் தேவையான வர்ணத்தில் '' விக் '' தயாரிக்க முடியும் ?'' என்கிறார் அருகில் நிற்கும்தொழில் நுணுக்க அதிகாரி திரு சுப்பிரமணியம்.

'' தேவையான வர்ணமா! எத்தனை கலரில் தயாரிக்கிறீர்கள் ?''

'' அடிப்படை வர்ணம் 28. தேவைப்பட்டால் சுமார் 100 விதமான வர்ணங்களில் கூடத் தயாரிக்கலாம் ! '' அமைதியாகப் பதில் சொல்கிறார். சுப்பிரமணியம்.

நாம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கிறோம். நமது அறியாமையைப் புரிந்து கொண்டு பக்கத்திலுள்ள அலுவலருக்குச் சமிக்ஞை செய்கிறார், நிர்வாகி. ஒரு கொத்து வளையங்களில் தொங்குகின்ற மாதிரி கூந்தல்களை அவர் எடுத்து வருகிறார். அதில் மிகக் கருமை முதல் செம்பட்டை நிறம், பொன்னிறம், சாம்பல் நிறம், வெள்ளியிழைகள் போன்ற நிறம், தூய வெண்மையான நிறம் ஆகியவைகளில் ஒவ்வொரு வளையத்திலும் ஒவ்வொரு விதமான மாதிரிக் கற்றைக் கூந்தல்கள் தொங்குகின்றன.

வெளிநாட்டு நிறுவனங்கள் மொத்தமாக '' ஆர்டர் '', கொடுக்கும்போது காட்டுவதற்காக இவைகளை வைத்திருக்கிறோம், என்று விளக்குகிறார் நிர்வாகி.

வர்ணம் செய்யப்பட்ட முடிகள் மேஜைகளில் பொருத்தப்பட்ட சீப்புகள் போன்ற கருவிகளினால் நன்றாக வாரப்பட்டு (இந்தப் பணிகளையும், ரசாயன மாற்றம் செய்யும் பணிகளையும் ஆடவரே செய்கின்றனர்.) தனித்தனி அளவுகளில் வெட்டப்பட்டு, நன்றாகக் கட்டப்பட்டு, அடுத்த அறைக்கு வருகின்றன.







மங்கையர் கூட்டம்

அது அறை அல்ல. ஒரு பெரிய கூடம். சுமார் 500 மங்கையர் ஒரு சேர அமர்ந்து பல்வேறு பணிகளைப் புரிகின்றனர். '' விக் ''கிற்கான வலையில் (அடியில் தொப்பி போன்ற வலை மீது தான் முடிகள் இணைக்கப்படுகின்றன) முடிகளை வரிசையாகத் தையல் யந்திரங்களில் தைக்கும் பிரிவு ஒரு புறம்! வலைகளை மறைத்து அசல் கூந்தல் போல் அமைக்கும் பிரிவு ஒரு புறம். தலையில் பொருத்துவதற்கான புது வகையான '' சீப் '' பைப் பொருத்துவது ஒரு புறம். கையினாலேயே முழு '' விக் '' கையும் தயாரிக்கும் பிரிவு ஒரு புறம். மங்கையர் கூட்டம். தொழிற் கூடத்தைச் சுற்றிப் பார்க்கும் நம்மைக் கூடக் கவனியாமல் தங்களுக்கே உரிய பொறுமையுடன், கடமையில் கண்ணாயிருக்கின்றனர். புகைப் படக்காரர் மேஜைகளில் ஏறித் தனது கடமையைச் செய்கிறார்.

'' ஒரு நாளைக்கு எவ்வளவு '' விக் '' தயாரிக்கிறீர்கள் ?''

அது '' விக்கின் தரத்தைப் பொறுத்தது. முழு '' விக் '' (பெண்கள் அணிவதற்கான டோப்பா), '' விக் லெட் '' எனப்படுகிற சிறிய '' விக் '', ஃபால்ஸ் எனப்படுகிற நீளமான கூந்தல் கற்றை, இப்படிப் பல தரம் உள்ளன. நாள் ஒன்றுக்கு சுமார் 800 விக் லெட்டும், 30 ஃபால்சும், 40 கை '' விக்''கும் தயாரிப்போம்.'' என்கிறார் நிர்வாகி.

'' யந்திரத்தினால் செய்கிற டோப்பாவிற்கும், கையினால் செய்வதற்கும் என்ன வித்தியாசம்''.

'' யந்திரத்தில் ஒரு நாளைக்கு 100 விக் தயாரிக்கலாம். கையினால் ஒரு '' விக் '' செய்ய ஒரு பெண்ணிற்கு 6 நாட்கள் பிடிக்கும்.''

பிறகு ஏன் கை '' விக் '' தயாரிக்க வேண்டும் ?

கை ''விக்''கிற்கு மதிப்பு

'' கையினால் செய்த ''விக் '' கிற்கு வெளிநாட்டில் தனி மதிப்பு உள்ளது. வெள்ளைக்காரர்கள் அதனை விரும்பி வாங்குகின்றனர். எனவே தான் அதில் மிகுந்த கவனம் செலுத்துகிறோம்.

'' எந்த நாடுகள் நமது ''விக்'' கை அதிகம் வாங்குகின்றன?''

''ஜெர்மனி, யூகோஸ்லாவியா, நெதர்லாந்து, பெல்ஜியம், பின்லாந்து என்ற வரிசையில். . .''

கூடை மீது ''காமா சோமா'' வென்றிருந்த '' விக் ''கை முறைத்துப் பார்க்கிறார் எங்களோடு வந்த நண்பர்.

அது '' பீட்டில்ஸ் விக் '' என்று விளக்குகிறார், நிர்வாகி. எல்லோரும் சிரிக்கிறோம். பத்திரிகைகளில் துணுக்குகளில் வரும் பீட்டில்ஸ் படங்களைப் போல் முன்பக்கம் எது பின் பக்கம் எது என்று தெரியாமல் எல்லாப் பக்கத்திலும் அந்த '' விக் ''கில் மயிர்க்கற்றைகள் தொங்குகின்றன.

அடேயப்பா ! எவ்வளவு நீளம்!!

விதவிதமான '' விக் ''குகளைப் பார்த்த வெள்ளைக்கார மாது, '' அடேயப்பா எவ்வளவு நீளமான கூந்தல் ! '' என்று சுமார் 2 அடி நீளமுள்ள ஒரு ஃபால்ஸை தனது தலையில் வைத்து அளவு பார்க்கிறார்.

'' இதை விடப் பெரியது கூட எங்களிடம் உண்டு. $4\frac{1}{2}$ அடி நீளமுள்ள அந்தக் கூந்தல் திருப்பதிக் கோவிலிலிருந்து வந்தது. இப்போது அதை அமெரிக்காவில் பொருட்காட்சியில் வைத்திருக்கிறோம் '' என்று விளக்கினார் நிர்வாகி.

''ஆமாம் ஒரு '' விக் ''என்ன விலை இருக்கும் ?''

'' நாங்கள் சில்லரைக்கு விற்பதில்லை. மொத்தமாகத்தான் வெளிநாடுகளுக்கு அனுப்புகிறோம். சுமார் 1 டாலரிலிருந்து ($7\frac{1}{2}$ ரூபாய்) 15 டாலர் (112 ரூபாய்) வரை பல தரத்தில் உள்ளன''.

பக்கத்தில் இரு பெண்கள் இதமாக இஸ்திரி போடுகின்றனர். அருகில் சென்று பார்த்தால் அடியில் சுமார் ஒரு அங்குல அகலத்திற்கு நன்கு கோக்கப்பட்ட முடிகள் பளபளக்கின்றன. பக்கத்தில் சுமார் 20 பெண்கள் அமர்ந்து ஏதோ நுணுக்கமாகச் செய்து கொண்டிருக்கின்றனர்.

கண் இமை

''அது செயற்கை கண் இமை. அது ஆரம்பக் கட்டத்தில், சோதனை நிலையில் உள்ளது. இன்னும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியைத் துவங்கவில்லை. இந்த இமைகளுக்கு பிரான்சு, அமெரிக்கா போன்ற நாடுகளில் மிகுந்த வரவேற்பு இருக்குமென்று எதிர்பார்க்கிறோம். இதற்காக 3 பெண்கள் இங்கிருந்து பாரிஸ் சென்று தனிப் பயிற்சி பெற்று வந்திருக்கிறார்கள்'' என்று விவரிக்கிறார், திரு வைத்தியநாதன்.

'' டைங். . . . . . டைங்''

அதோ தூரத்தில் ஆலயமணியின் ஓசை கேட்கிறது. குன்றின் மீது அமர்ந்துள்ள குமரனின் கோயில் மணி ஒலிக்கும் வரை, இத் தொழிலும் வளர்ந்தோங்கும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

அதிசயமான இந்தத் தொழிலகத்தை மற்றுமொரு முறை நோட்டமிட்டு விட்டு, நிர்வாகிகளின் புன்னகை ததும்பும் இன்முகத்திற்குக் கரம் கூப்பி வணக்கம் கூறி விடை பெறுகிறோம்.

# விலைக்கா? விதையா?

## அ. மறைமலையான்

தென்னஞ் சோலையைத் தாண்டிக் கோரையாற்றின் நடுவே எங்களுக்காகக் காத்திருந்த படகிலே நாங்கள் ஏறிய பொழுது நிலந்தெளியவில்லை.

ஆயினும், இருளின் சாயம், திறமையில்லாத மனிதர்களின் போலிப் புகழ் போல, மெல்ல மெல்ல வெளுத்துக் கொண்டிருந்தது; கீழ்வானத்தில், கனமாகக் கறுத்திருந்த மேக மூட்டத்திலும் 'இளநரை' தென்பட்டது.

''என்ன, எல்லோரும் ஏறியாச்சா?''–தமக்கே உரிய கரகரப்பான குரலில் கேட்டார் தேவர்.

''ஓ! எல்லாரும் ஏறிட்டோமே!'' என்று நாங்கள் யாவரும் கூட்டுக் குரலில் முழங்கினோம்.

''சரி, விடுங்கப்பா !'' என்று தம் ஆட்களுக்கு ஆணையிட்டார் தேவர்.

கடலைக் காணத் துடிக்கும் எங்கள் பேரார்வத்தைப் புரிந்து கொண்டதைப்போல அந்த நீண்ட படகும் மிக வேகமாக மிதந்தோட முனைந்தது. துடுப்பை வலிக்கும் பாட்டாளி இனத்தோழர்கள் 'ஐலசா! ஐலசா!' என்று உற்சாகமாகப் பாட்டுப்பாடினர்; அதன்மூலம் படகின் ஓட்டத்திற்கு விறுவிறுப்பையும் ஊட்டினர்.

ஓடும் படகில் அமர்ந்தவாறே, ஒரு காலை வெளியே தொங்கவிட்டு, ஆற்று நீரில் தோய்த்தேன். என் அருகில் உட்புறம் உட்கார்ந்திருந்த நண்பர், வேங்கடாசலபதி, ''அய்யய்யோ, காலை அப்படித் தொங்கவிடாதீங்க ; விழுந்தாலும் விழுந்திடுவீங்க!'' என்று என்னை எச்சரித்தார். அவர் எப்போதுமே எதிலுமே எச்சரிக்கையானவர்.

''அப்படியே விழுந்தாத்தான் என்ன? இந்தச் சாதாரண ஆற்றில் கூட இவரால் நீந்த முடியாதா?'' என்று அடக்கமாகச் சிரித்தார் நண்பர் அரங்கசாமி. இந்த மகிழ்ச்சியான படகுப் பயணத்திற்கு ஏற்பாடு செய்தவரே அவர்தாம்.

''ஆமா, உங்களுக்கு நீந்தத் தெரியுமா?''—என்று என்னைப் பார்த்துக் கேட்டார் நண்பர் செருமையா. கிறித்துவ சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடுள்ள ஒழுக்கசீலர் அவர்.

நான் மெள்ளச் சிரித்துக் கொண்டே தலையை ஆட்டினேன்.

''இந்த ஆற்றில் மட்டுந்தானா, வாழ்க்கையிலும் நீச்சலடிக்கத் தெரியாதவர்கள் அமிழ்ந்து போக வேண்டியதுதானே?''—என்று உள்ளூர நான் எண்ணிக் கொண்டேன். எங்கள் பேச்சைக் கவனித்துவிட்ட தேவர்,

''ஒண்ணும் பயப்படாதீங்க ; சும்மா காலைத் தொங்கப் போட்டுக்கிட்டு வாங்க ; அப்படித் தவறி விழுந்திட்டாலும், எங்க ஆட்களை விட்டு உங்களைத் தூக்கிட மாட்டேனா?''—என்று தமது தனிவலிமையை அல்ல—தமக்குள்ள ஆட்களின் வலிமையை நயமாக விளம்பரப்படுத்திக் கொண்டார்.

தேவருக்கு அந்தப் பகுதியில் நிரம்பச் செல்வாக்கு என்று நண்பர் அரங்கசாமி முன்பே சொல்லியிருந்தார். நாங்கள் பயணம் மேற்கொண்டிருக்கும் படகுக்குச் சொந்தக்காரரே அவர்தாம். பழக்கத்திற்கும் மிகவும் இனிமையானவர்; கலகலப்பான பேச்சு—சிரிப்பு. ஏழை—எளியவர்களுக்குத் தாராளமாக உதவக் கூடிய இயல்பும் உள்ளவராம்.

''....என்ன சாயபு, ரொம்பக் குளிரடிக்குதே !''

—என்று சிகரெட்டைப் பற்ற வைத்தவாறே படகின் மறு பக்கத்தில் இருந்த ஆட்களைப் பார்த்துச் சொன்னார் அவர்.

''அதுக்கென்ன முதலாளி? இன்னும் ரெண்டே நிமிசத்திலே சாயா குடிச்சா குளிர் ஓடிப் போவுது!''—என்றார் அந்த இசுலாமிய நண்பர்.

தேவர் எங்கள் பக்கமாக முகத்தைத் திருப்பினார்.

''நம்ம சாயபு சமையல்லே ரொம்பக் கெட்டிக்கார ஆசாமி. பழைய நள மகாராசாவே இவர் கிட்டே தோத்துப் போயிடணும். பாருங்களேன், இன்னும் கொஞ்ச நேரத்திலே டீ மட்டும் இல்லே, இடியாப்பம், தோசை எல்லாமே அற்புதமாத் தயார் பண்ணிக் கொடுத்திடுவாரு. அப்புறம் நாம தீவுக்குப் போனதும் கமகமன்னு மீன் குழம்பு, பிரியாணி எல்லாமே கிடைக்கும்.''

—தேவர் சொல்லச் சொல்ல, எங்கள் நாக்கிலே நீர் ஊறத் தொடங்கிவிட்டது.

படகு இப்போது முன்னைவிட விரைவாகப் பாய்ந்தோடியது.

நிலத்தைக் கிழிக்கும் கலப்பை —நீரைக் கிழிக்கும் படகு—முகிலைக் கிழிக்கும் மின்னல்—இவற்றின் ஊடுருவலுக்கே ஒரு தனி அழகுதான்!

உதயசூரியன் தன் மழலைப் பருவத்தைக் கடந்து பாலப்பருவத்திற்கு வந்துவிட்ட நிலை. அதன் ஒளி நகங்கள் எங்கள் உடலைச் 'சுள்ளென்று' கிள்ளின. ஆனால் ஆற்றின் இருமருங்கிலும் அடர்ந்து செறிந்த அலையாத்தி மரங்களின் மரகத இலைகள் வழி நெடுகிலும் நிழற்பந்தல் விரித்து, 'குளிர் ஒத்தடம்' கொடுத்தன.

''சாயபு மீனுக்கு யார் கிட்டே சொல்லி இருக்கீரு?'' என்று கேட்டார் தேவர்.

''நம்ம பொன்னப்பன் கிட்டே தான் சொல்லியிருக்கிறேன்.''

''பொன்னப்பன் கிட்டேயா? அப்ப நல்ல மீனுத்தான் கிடைக்கும்.''—என்ற தேவர்,

''அவன் என்ன, வேறே கல்யாணம் காட்சிக்கு ஏற்பாடு பண்ணலையா?''—என்று அக்கறையோடு விசாரித்தார்.



''இல்லைங்க எசமான்; இப்புடியே கடைசி வரைக்கும் இருந்திட வேண்டியதுதான்னு சொல்லிக்கிட்டு இருக்கிறன்.''—என்றார் பாய்மரத்தை விரிப்பதில் ஈடுபட்டிருந்த ஒரு மீனவத்தோழர்.

''பாவம், அந்தப் பொன்னப்பன் ....! வாழ்க்கை இப்படிப் பரிதாபமாகப் போயிருக்க வேண்டாம்.''—சொல்லும் பொழுதே தேவரின் முகத்திலே சோகம் இழையோடியது; குரலிலும் தழுதழுப்பின் பிசிறல்.

சில விநாடிகள் அமைதியில் ஆழ்ந்திருந்த அவர், குரலைக் கனைத்துக் கொண்டே, நண்பர் அரங்கசாமியைப் பார்த்துக் கேட்டார்;

''உங்களுக்கு அந்தப் பொன்னப்பன் கதை தெரியுமா?''

''தெரியாதுங்களே?''

''அப்பச் சொல்றேன் கேளுங்க; நீங்கள் எல்லாம் தெரிஞ்சுக்க வேண்டியதுதான்.''

ஒரு சுவையான கதையைக் கேட்கும் ஆர்வத்துடன்

நாங்கள் எங்கள் காதுகளைக் கூர்மையாகத் தீட்டிக் கொண்டோம்:

''...பொன்னப்பன், பிறந்து வளர்ந்தது எல்லாம், எங்க ஊருக்குப்பக்கத்திலே உள்ள ஒரு குப்பத்திலேதான். சின்ன வயசிலேயே, அவனைப் பெத்தவங்க செத்துப் போயிட்டாங்க. அவனோடே அத்தைக்காரிதான் அவனை வளர்த்து ஆளாக்கினு. கல்வி வாசனை இல்லேன்னாலும் ரொம்பக் கறுக்கானவன்; எதிலுமே அசாத்தியமான ஒரு கூர்மை. அவன் ஊத்தையோ, வலையையோ எடுத்துக்கிட்டு வெளியே கிளம்பினு வெறுங்கையோட வீட்டுக்குத் திரும்பவே மாட்டான்; மீன் பிடிக்கிறதிலே அவ்வளவு கெட்டிக்காரன்!

''அவனோடே அத்தைக்கு ஒரு மகள் இருந்தா; அஞ்சம்மான்னு பேரு நல்ல சொட்ட வாழைக் கன்னு மாதிரி ரொம்ப அழகா இருப்பா. அந்த மஞ்சள்-சிகப்பு அவளுக்குன்னு எங்கேருந்துதான் வந்துச்சோ? பலாச்சுளை மாதிரியா உடம்பே ஒரு தள தளப்பா மின்னும். ஒடிச்சு மடிச்சுடலாம்; அப்படி ஒரு வாகான உடல் அமைப்பு. நீங்கள் எல்லாந்தான் ஆவுடையார்கோவில் அங்கே-இங்கே எல்லாம் சிற்பங்களைப் பார்த்திருப்பீங்களே! அந்த மாதிரி மூக்கும் முழியுமா இருப்பா.

''சின்னஞ் சிறுசுகளா இருந்தப்பவே பொன்னப்பனும் அஞ்சம்மாவும் ஒண்ணுத்தான் ஓடி, ஆடி விளையாடுவாங்க. மீன் பிடிக்கவும் போவாங்க. வயசு வந்த அப்புறமும் அந்தப் பழக்கம் போகலே. அவங்க ரெண்டுபேரும் ஒண்ணுக் குனிஞ்சு ஊத்துப்போட்டு மீன் பிடிச்சதை நானே என் கண்ணுரப் பார்த்திருக்கேன்.

''அத்தைக்காரிக்குத் தன் அண்ணன் மகன் மேலே ரொம்ப வாஞ்சை. அவனுக்கே தன் மகளைக் கொடுத்திட்டா.

''ஆனுப் பாருங்க, கலியாணம் ஆகி மூணுநாள் முழுசா ஆகலே; இந்தப் பொன்னப்பன் என்னடான்னு புளிய மரத்திலே தூக்குப்போட்டுக்கிட்டுத் தொங்கப் போயிட்டான்! நல்ல வேளையா அந்தக் கடைச்சாமத்திலே, நடவுக்கு ஆள் அழைக்கப்போன நான் வழியிலே இவன் தொங்குறதுக்கு முந்தி கண்டுபிடிச்சு, கழுத்திலே போட்டிருந்த சுருக்கை அவிழ்த்து விட்டேன். காரணம் கேட்டா, தேம்பித் தேம்பி அழுவுறன். அஞ்சம்மாவோட இனிமே வாழவே மாட்டேன்னு கதறிக் கதறிப் புலம்புறன். நடக்கக்கூடாதது ஏதோ நடந்திருக்கணும் என்று எனக்குப்பட்டது.

''சீ! நீ எதுக்குடா அவளுக்காக உயிரை விடணும்? அவளுக்கில்லாத அவமானம் உனக்கென்ன வந்திடிச்சு? . . . ஆமா அவளைக் கெடுத்தவன் யாருன்னு தெரியுமா''ன்னு கேட்டேன்; ''அய்யோ! அவ முழுசாக் கெட்டிருந்தாலும் தான் பரவாயில்லையே எசமான்! அப்படி ஒண்ணும் ஆகாம இருக்கும்போதே எவனையோ நெனைச்சுக்கிட்டு என்னை நெருங்காதேங்கிரு.''

—பொன்னப்பன் இப்படிச் சொன்னதும் எனக்கு ஆச்சரியமா இருந்துச்சு. சரி, எவனோ மேல் சாதிக்காரன் பணத்தையோ, பகட்டையோ காட்டி அவளுக்கு வலை விரிச்சுட்டாங்கிறதைத் தெரிஞ்சுகிட்டேன்; அதே சமயம் தன் கற்பை அவள் கெடுத்துக்கலேன்னும் புரிஞ்சுகிட்டேன்.

மறு நாளே அஞ்சம்மாவை அழைச்சுப் பேசினேன். அவ உண்மையை ஒப்புத்துக்கிட்டா; ஆனு, தன் காதலன் யாருன்னு மட்டும் சொல்லவே மாட்டேன்னுட்டா.



''இரண்டுபேருக்கும் மனசு ஒத்துப்போகாதப்போ அவங்க அவங்க தனியாப் பிரிஞ்சுபோறது தானுங்களே நல்லது! கீரியும் பாம்புமா மாறிட்டவங்க புருசனும்-மனைவியுமா போலி வாழ்க்கை வாழறதிலே என்ன பிரயோசனம் இருக்கு? அதனாலே நானே பஞ்சாயம் பேசி, பொன்னப்பனுக்கு நானே அஞ்சம்மா கிட்டேருந்து தாலியை வாங்கிக் கொடுத்திட்டேன்.''

* * *

ஓடிக்கொண்டிருந்த படகு சட்டென்று நின்றது.

கோரையாறு சங்கமம் ஆகும் கடல் பகுதிக்கு நாங்கள் வந்து விட்டோம்.

சற்றுத் தொலைவில் நாங்கள் இறங்கித் தங்கி விருந்துண்ணப் போகிற தீவுத் திட்டு, பாயாசத்தில் கிடக்கும் முந்திரிப் பருப்பு மாதிரி அழகாகத் தெரிந்தது.

''என்னடா இது, காத்து ஒரு மாதிரியாவீசுதே! படகை அங்கே கொண்டுபோக முடியாதோ?''—என்று கேட்டார் தேவர்.

''ஆமா எசமான்! இங்கேயே இறங்கி நடந்திடுறதுதான் நல்லது''—என்றார் ஒரு மீனவத் தோழர்.

எல்லோரும் படகை விட்டுக் கீழே இறங்கினோம். முழங்காலுக்கு மேல் நீர் இருந்தபோதிலும், அலையேதும் இல்லை. அது வெறும் உப்பங் கழிப் பகுதியே என்று தெரிந்து கொண்டோம்; நாங்கள் கரையேறப்போகும் திட்டுக்கு அப்பால் தான் உண்மையான கடலாம்!

எங்களைச் சுற்றிலும் பெரிய பெரிய மீன்கள் பல, வைரத் தகடுகளாகத் துள்ளி விழுந்து எங்கள் விழிகளுக்கு விருந்து படைத்தன.

தீவுத் திட்டிலே ஒரு சிறிய கீற்றுக் கொட்டகை. அங்கே சென்றடைந்ததும்தேவர்மீண்டும் கதையைத் தொடர்ந்தார்; இல்லை, அவர் தொடரும் வகையில் நான்தான் கிளறிவிட்டேன்.

''...ஆமா, பிறகு அந்த அஞ்சம்மா தன் காதலனையே மணந்து கொண்டாளா?''

''...ம், அந்த வயித்தெரிச்சலை ஏன் கேட்கிறீங்க? அவ எவனை நினைச்சுக்கிட்டுப் பொன்னப்பனைப் புறக்கணிச்சாளோ அவன் இவளைத் திரும்பிக்கூடப் பார்க்கலே; அவனைத் தன்பக்கம் இழுக்கிற வழியும் இவளுக்குத் தெரியலே. பெண்களுக்கு அழகு இருக்கிற அளவுக்கு அறிவு எங்கே இருக்கு? கொஞ்ச நஞ்சம் படிச்சிருந்தாலும் அவனை மிரட்டி உருட்டிப் பார்க்கலாம். அதுக்கும் இவகிட்டே வக்கு இல்லே. வருசமோ ஒண்ணு-ரெண்டுன்னு ஓடிக்கிட்டே இருந்துச்சு. தாய்க்கு ஒளிச்ச சூலாம்பாங்க. —ஆனா இந்த அஞ்சம்மா ரொம்ப அழுத்தக்காரி. தன் தாய்க்குக் கூடத் தன் காதலன் யாருன்னு சொல்லலே!



**நாடு எது?**

நாடு என்பது வெறும் பூகோளப் படம் அல்ல; அங்கு வாழும் மக்களின் உணர்ச்சித்தொகுப்பே அது. கிராமங்களுக்கு நாம் உலக அறிவை ஊட்டவில்லை யென்றால் அது நாட்டை வாழ வைக்காது.

இப்படி இருக்கிறப்போ, ஒரு நாள் அவ இந்த உப்பங் கழிப் பக்கம் வந்து மீன் பிடிச்சுக்கிட்டு இருந்திருக்கா-அப்போ பொன்னப்பனும் மீன் வேட்டைக்கு வந்திருக்கான்.

திடீர்னு, ''அய்யோ! மச்சான்! என்னைக் காப்பாத்தேன்'' காப்பாத்தேன்!!-ன்னு கூச்சல் போட்டிருக்கிறா அஞ்சம்மா.

பொன்னப்பனுக்கு ஒண்ணுமே புரியலே. திகைச்சுப்போனான்.

ரெண்டு வருசத்துக்கு மேலே திரும்பிக்கூடப் பார்க்காமே—அவமானப்படுத்தி ஏன், வாழ்க்கையே பாழடிச்சவ திடுதிப்புனு கரிசனமா அழைச்சா....?

நானா இருந்திருந்தா அவ திசைப் பக்கம்கூட என்தலையைத் திருப்பி இருக்கமாட்டேன். ஆனா, பொன்னப்பன் சாதாரண மனிதன் பாருங்க; அதனாலே அவ எப்படியாச்சும் செத்துத் தொலையட்டும்னு பேசாமே ஒதுங்கலே; பழி வாங்க நினைக்கலே! ஒரே தாவிலே அவ பக்கத்திலே பாய்ஞ்சான். அவ காலைச் சுத்திக்கிட்டு இருந்த 'வாளைக்கடியனைப்' பிச்செறிஞ்சான். அவளைத்தன் தோள்மேலே அள்ளித் தூக்கிப்போட்டுக்கிட்டுக் குப்பத்துக்கு ஓடினான்.

பொதுவா, 'வாளைக்கடியன்' கடிச்சா யாருமே பிழைக்க மாட்டாங்க. அது ஒரு மோசமான பாம்பு வகை. ஆனா, பொன்னப்பன் ஒரு நல்ல காரியம் பண்ணினான். ஒரு வாழை மரத்துப் பட்டையை வெட்டிக்கிட்டுவந்து சாறு பிழிஞ்சு உள்ளுக்குப் புகட்டினான். ஆனா, அஞ்சம்மா மயக்கமாகிப் பல்லுக்கிட்டி கிட்டதாலே சாறு சரியா உள்ளே போகலே. அப்புறம் முழு வாழை மரத்தையுமே வெட்டிக்கிட்டு வந்து பட்டைகளை அரிச்சு அதுங்க மேலே அவளைப் படுக்க வச்சிருக்கான். கிட்டிப்போன பல்லையும் மெதுவா நெம்பிக் கிட்டுச் சாத்தைச் செலுத்தியிருக்கான். என்ன நல்ல காலமோ அஞ்சம்மா பிழைச்சுக்கிட்டா.

அதுக்கப்பறம், அஞ்சம்மாவின் மனசு மாறிட்டுது. பொன்னப்பனைப் புறக்கணிச்சது எவ்வளவு தப்புங்கிறதை அவளே உணர்ந்துகிட்டா. அவனை மறு கல்யாணம் செஞ்சுக்கிறதுக்கும் தயாராயிட்டா......''

* * *

தேவர் இப்படிச் சொல்லிக் கொண்டு வரும்பொழுதே.

''பிறகு என்ன, பொன்னப்பன் பாடு கொண்டாட்டந்தான்!''—என்று முத்தாய்ப்பு வைத்தார் அரங்கசாமி.

''ஊம்...அதுதான் இல்லே!''—என்று ஒரு வெட்டு வெட்டினார் தேவர்.

''அப்புறம்?''

—என்று நாங்கள் எல்லோரும் ஏகக் குரலில் எங்கள் திகைப்பை வெளிப்படுத்தினோம்.

சாயபுவின் கைவண்ணத்தால் எங்கள் மூக்கைத் துளைக்கும் மீன் குழம்பையும், பிரியாணி மணத்தையும் கூட நாங்கள் மறந்து விட்டோம்.

தேவர் தொடர்ந்தார்:

''அஞ்சம்மா எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடியும் பொன்னப்பன் அவளை மறு கலியாணம் பண்ணிக்கவே மாட்டேன்னு ஒரேயடியா மறுத்திட்டான். தான் செஞ்ச ஒரு குத்தத்துக்கு—நல்ல குணம் உள்ளவனோட அருமை புரியாமே புறக்கணிச்சோமேங்கிற உறுத்தல் தாங்காமே—எப்படியாச்சும் தன் உயிரைக் காப்பாத்திய அத்தான்கிட்டே மன்னிப்பு வாங்கிடணும்னு அஞ்சம்மா துடியாத்துடிச்சா. அதே சமயம், தன்னைக் கட்டிக்கிறேன்னு சொல்லிட்டுக் கைவிட்டவனுக்கு ஒரு சரியான பாடம் கற்பிக்கணும்கிற வெறியும் வந்துட்டுது அவளுக்கு. அதுக்காகவே பொன்னப்பனை மறுபடியும் கட்டிக்கிறதுக்கு அவ ஒத்தைக் காலிலே நின்னா. என்கிட்டேயும் வந்து அழுது புலம்பினா. நான் பொன்னப்பனைக் கூப்பிட்டுச் சமாதானப் படுத்த முயற்சி பண்ணினேன். அவனோ என் வார்த்தையைக் காதிலேயே போட்டுக்கலே.



''கலியாணம்கிறது வெறும் உடம்பு அழகுக்காக மட்டும் நடக்கிறதா எசமான்? அது மனசு பொருந்தினாத்தான் நடக்கணும். நான் சொல்றது அடிக்கடி மாறக்கூடிய வெளி மனசை இல்லே; உள் மனசை! விளக்கு அணைஞ்சா திரும்ப ஏத்திவைக்கலாம்; விதை அவிஞ்சா அதைத் திரும்ப முளைக்க வைக்க முடியுமா? ஆணும் பெண்ணும் வச்சுக்கிற ஆசையும் அப்படித்தான்! அது அணையிற விளக்கா இருக்கக் கூடாது. அவியாத விதையா இருக்கணும்!''—பொன்னப்பனுக்கு அதற்குமேல் நான் என்ன சமாதானம் சொல்ல முடியும்?

ஆனால், அஞ்சம்மாவுக்கு அவனுடைய பிடிவாதத்தைக் கண்டதும் ஒரே ஆத்திரம் வந்துட்டுது. பொன்னப்பன் மேலே இல்லே; தடுமாறி விழுந்த தன் மேலேயும், தன்னைக் கட்டிக் கொள்வதாகச் சத்தியம் செய்து கொடுத்து விட்டுப் பிறகு பாராமுகமாக ஒதுங்கிப் போனானே அந்தக் கோழைமேலேயும்!

''நீ சொல்றதும் சரிதான் மச்சான்; நீ எதுக்கு என்னைக் கட்டிக்கணும்?... ஆனா என் மனசைக் கெடுத்து ஆசையைக் கொடுத்து, நம்ம ரெண்டு பேரோட வாழ்க்கையையும் கெடுத்தானே அவனையே இப்பப்போய் ரெண்டிலே ஒண்ணு கேட்கிறேன். என் மானமே போன அப்பறம் அவன் மானத்தைமட்டும் எதுக்கு நான் காப்பத்தணும்? என்னையும் அழிச்சுக்கிட்டு உன்னையும் ஏன் அழிக்கணும்? இதோ இப்பவே போய் அவனைச் சந்தி சிரிக்க வைக்கிறேன்.''

—அப்படின்னு ஆவேசமா கிளம்பிட்டா அஞ்சம்மா.

ஒரு செம்படவக் குடும்பத்திலே பிறந்த ஒரு சாதாரணப் பெண், ஒரு பெரிய சாதிக்காரப் பையனின் மானத்தை அவ்வளவு இலேசில் வாங்கி விட முடியுமா? கடைசியிலே நடந்தது என்ன தெரியுமில்லே?

அஞ்சம்மா கொலை செய்யப் பட்டாள். அந்தப் படுபாவியும் தப்பலே. அவனுக்கு மரண தண்டனை கிடைச்சுட்டுது.''

—தேவர் இப்படிக் கதையை முடித்ததும் எங்கள் மனத்தை ஏதோ ஒரு வறட்சி-இல்லை ஒரு விதத் துயரச் சாயல்—அடைத்துக்கொண்டது. பசியைப்பற்றிய நினைவே இல்லை.

ஆனால், சமையலில் வல்ல சாயபுக்குத் தம் கைத்திறமையை எங்களிடம் காட்டாமல் விட்டால் மண்டை வெடித்து விடாதா?

''எசமான், இலை போடட்டுமா''?—என்றார்.

''..ம்..ம்..ம்.. போடும்.''

—என்றார் தேவர். நிதானத்திற்குப் பெயர் பெற்ற அவரது முகத்திலும் ஓர் ஆழ்ந்த சோக மூட்டம் மெல்ல இழையோடியிருந்தது.

* * *

நாங்கள் மோர்ச் சோற்றை முடிக்கப் போகும் வேளை.

''அந்த அஞ்சம்மாவை அப்படிக் கெடுத்தவன் யார் தெரியுமா?''—என்று திடீரென்று ஒரு கேள்வியை எழுப்பினார் தேவர்.

நாங்கள் திகைப்புடன் அவரது முகத்தைப் பார்த்தோம்.

''என்னுடைய ஒரே மகன் தான்?''

—அவர் சிரிக்க முயன்றார்; ஆனால் கண்ணீர் அந்தச் சிரிப்பை அழித்தது.

எங்கள் கண்களும் நீரில் மிதந்தன. படகு மீண்டும் தன் பயணத்தைத் தொடங்கியது. ஆனால் நாங்கள் யாருமே அதற்குப்பிறகு பேசிக் கொள்ளவே இல்லை.






# அமோக விளைச்சலுக்கு PSG பம்பு செட்டுகள்

■ நீங்களும் பிஎஸ்ஜி பம்பு செட்டை இன்றே வாங்குங்கள் ■ என்ஜின் அல்லது மோட்டாரில் இயங்குவது ■ தாராளமாக தண்ணீர் பெறுங்கள் ■ ஏராளமாக விளைச்சல் காணுங்கள் ■ நிறைய செல்வம் அடையுங்கள்

*விவரங்களுக்கு எழுதுங்கள்:*

**பி எஸ் ஜி இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்**

கோயமுத்தூர் 4 தென்னிந்தியா

PSG *the hallmark of high standard*

*விற்பனைக் கிளைகள்:*

311, தம்பு செட்டி வீதி, சென்னை 1. 217 & 218, மேலமாசித்தெரு, மதுரை 1.
பப்ளிக் கார்டன் ரோடு, சைபாபாத், ஹைதராபாத் 4.
13/85, ஜெயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர் 2.

VSK PSG 213

# யாரும் கவர்ந்தது இல்லை!



தமிழக முதல்வரின் சொந்த ஊரான திருவாரூருக்கு மிக அருகில் தான் என் சொந்த ஊராகிய திருச்சிறை இருக்கிறது. வியாபார நிமித்தம் சென்னைக்குக் குடியேறியவன் நான். எனது தந்தையார் காலத்தில் பிரபலமடைந்துள்ள ராதா சில்க் எம்போரியம்—அல்லது ராசி—இப்போது என்னுடைய மேற்பார்வையில் தான் சிறப்பாக நடைபெற்று வருகிற கிறது.

மைலாப்பூரில் சுமார் 18 இலட்சம் ரூபாயில் எங்கள் கடைக்காக நவீன முறையில் ஒரு கட்டடம் கட்டினேன். கைராசிக்காரரான முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தான் இதைத் திறந்து வைக்க வேண்டுமெனத் தீர்மானித்து அவர்களை அணுகினேன். வருவதற்கு ஒத்துக்கொண்டதும் எனக்குப் பெருமை தாங்க முடியவில்லை.

காலை 9 மணிக்குத் திறப்பு விழா என்று குறிப்பிட்டு அழைப்பிதழ்கள் அனுப்பிவிட்டேன். ஆனால் நாள் நெருங்க நெருங்க எனக்குள் ஓர் இனந் தெரியாத பயம் ஏற்பட்டது. அதாவது ''குறிப்பிட்ட நேரத்தில் திறப்பு விழா நடைபெற்றாக வேண்டும்; பல வேலைத் தொந்தரவுகள் உள்ளவராயிற்றே முதலமைச்சர்! காலங்கடந்து வந்தால் என்ன செய்ய முடியும்?'' என்ற அச்சமே அது.

ஆனால் என்னுடைய நல்ல காலம் என்றுதான் நான் இன்னும் எண்ணி வருகிறேன்; முதல் அமைச்சர் அவர்கள் புதிய கட்டடத்துக்கு எதிரில் காரை நிறுத்தி இறங்கும்போது மணி சரியாக 9 அடித்தது. நல்ல சகுனம் என்றும் மைலாப்பூர் வாசிகள் மகிழ்ச்சியோடு கூறினார்கள்.

அன்று முதல் எனக்கு அவர்களிடத்திலே தனியாக ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது.



ஆர்.கே.ராமன்

நமது கைத்தறித் துணிகளுக்கு ஐரோப்பிய பொதுச் சந்தையில் நல்ல கிராக்கி ஏற்படவில்லை. இத்தாலி, ஹாலந்து முதலிய நாடுகளில் இதற்கு இன்னும் இடம் கிடைக்காமல் இருந்து வருகிறது. இதில் ஏதாவது நல்ல ஏற்பாடு செய்து வர முடியுமா எனக் கண்டறிய இந்திய அரசினர் என்னை ஒரு தனி நபர் குழுவாக அனுப்பினார்கள்.

சென்ற திங்கள் இறுதியில் ஐரோப்பா புறப்பட்டுச் சென்ற நான் ரோம், பாரிஸ், முதலிய இடங்களில் நமது தமிழக முதல்வர் அவர்களை விமான நிலையங்களில் வரவேற்கவும் அவர்களோடு இரண்டொரு இடங்கள் உடன் சென்றுவரவும் ஆன நல்ல வாய்ப்பொன்று எனக்குக் கிட்டியதை என் உயிர் உள்ளளவும் மறக்க இயலாது.

வாட்டிகன் நகருக்குச் சென்று மதிப்புக்குரிய போப்பாண்டவர் அவர்களை நமது முதல்வரும் அவர் தம் துணைவியாரும் காண விரும்பியபோது அவர்கள் இருவருக்கு மட்டுமே அனுமதி கிட்டியிருந்தது. நானும் பிறரும் அவர்களோடு சென்றோம். எங்களுக்கு அனுமதி கிடைக்காது என்றுதான் நாங்கள் எண்ணினோம்.

ஆனால் நமது முதல்வர் அவர்கள் தமக்கே உரிய தைரியத்தோடு எங்களை அருகேயுள்ள அறைக்கு அழைத்துச் சென்று அமரச் செய்து தாமும் துணைவியாரும் உள்ளே சென்றார்கள்.

என்ன ஆச்சரியம்! பத்தே நிமிடத்தில் எங்களுக்கும்அழைப்பு வந்தது. இதுவரை யாரிடத்திலுமே இவ்வளவு நேரம் போப்பாண்டவர் அளவளாவியதே இல்லையாம். மிகவும் சுதந்திரமாக சுமார் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்து அந்தப் பெரியவரை மன நிறைவோடு தரிசித்த திருப்தியுடன் திரும்பினோம். தமிழக முதல் அமைச்சர்அவர்களின் முகராசியை நினைத்து நினைத்து வியந்தேன்!

நான் பலமுறை மேல்நாடுகளுக்குச் சென்று வந்தவன் என்றாலும், நமது முதல்வர் அவர்கள் மேல் நாட்டாரைக் கவர்ந்தது போல யாருமே கவர்ந்திருக்க முடியாது என்று நிச்சயமாகக் கூறுவேன்!

---

# தமிழக முதல்வருக்குத் தலைநகரில் வரவேற்பு

ஜூலைத் திங்கள் 21-ம் நாள் பிற்பகல் 2-15 மணி. மீனம்பாக்கம் விமான நிலையத்தில்கூடி நிற்கும் ஆயிரக் கணக்கான மக்கள் வானத்தைப் பார்த்தபடியே நிற்கின்றனர். தூரத்தே விமானம் ஒன்று சிறிதாகத் தெரிகிறது.



''வெளி நாட்டில் 20 நாட்கள் வெற்றிகரமாகச் சுற்றுப் பயணத்தை முடித்து விட்டுத் தாயகம் திரும்பும் நமது முதல்வர் அவர்களைத் தாங்கி வரும் விமானம் இதோ வந்துகொண்டிருக்கிறது. முதல்வர் அவர்கள் விமானத்திலிருந்து இறங்கியவுடன் முதலில் தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் மாலை அணிவித்து வரவேற்பார்கள். பின்னர் அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவிப்பார்கள்'' என்று ஒலிபெருக்கியில் அறிவிப்பாளர் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

விமானத்திலிருந்து தமிழக முதல்வர் திரு கருணாநிதி அவர்கள் இறங்குகிறார்கள். தொடர்ந்து அவரது துணைவியார் வருகிறார்கள்.

வானத்தில் ஒரு சிறிய பயிற்சி விமானம் வட்டமிடுகிறது. அதிலிருந்து பூமாரி பொழிகிறார்கள்.

''கலைஞர் வாழ்க! முதல்வர் வாழ்க! அண்ணா வாழ்க'' என்ற ஒலி விண்ணைப் பிளக்கிறது.

முதல்வர் இறங்கியதும், ஆளுநர் அவர்கள் மாலை அணிவிக்கிறார்கள். பின் அமைச்சர் பெருமக்களும் வெளிநாட்டுத் தூதுவர்களும் மாலை அணிவிக்கிறார்கள்.

வானத்தில் வட்டமிடும் பயிற்சி விமானம் தொடர்ந்து பூமாரி பொழிகிறது.

முதல்வர், தயாராக வைக்கப்பட்டிருந்த வண்ணக்குடை இணைக்கப்பட்ட 'ஜீப்' பில் ஏறி சீரணி அணிவகுப்பைப் பார்வையிடுகிறார்.

பின்னர், அங்கு அமைக்கப்பட்ட உயர்ந்த மேடையில் ஏறியவுடன், அவருக்கு மாலை அணிவித்து, வரவேற்க வந்திருந்த திரளான அன்பர்கள் ஒருவர் பின் ஒருவராகச் சென்று மாலை அணிவிக்கிறார்கள். ஆரத் தழுவிக் கொண்டோர் பலர். அன்புமாரி பொழிந்தோர் பலர். ஆனந்தத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது நின்றோர் பலர். மேடை தாங்கா வண்ணம் மலர் மாலைகள் மலையெனக் குவிகின்றன.

வந்திருந்த பெருமக்களுக்கு நன்றிகூறி, திறந்த ஜீப்பில் ஏறிப் புறப்படுகிறார் முதல்வர். காலை 11 மணியிலிருந்தே முதல்வரைக் காணும்பொருட்டுச் சாலையின் இரு மருங்கிலும் கூடியிருந்த மக்கள் வெள்ளம், முதல்வரைக் கண்டதும் கடல் அலைபோல் ததும்புகின்றது. கைகூப்பியும் கை அசைத்தும் அவர்களது அன்புக்குப் பதிலுரைக்கிறார் முதல்வர். வழி நெடுக வரவேற்பு வளைவுகள், பந்தல்கள், மாலையுடன் காத்திருக்கும் அன்பர்கள்!

இருபது நாட்களாக முதல்வரின் தமிழ் செறிந்த, பொருள் நிறைந்த சொற்பொழிவுகளைக் கேட்க முடியாதிருந்த தமிழ் மக்கள், முதல்வரின் வெளிநாட்டு அனுபவங்களை அவர் வாயிலாகவே கேட்க ஆவலோடு உள்ளனர்.

மேடையிலே கேட்க வாய்ப்பில்லாதவர்களுக்காக, இந்த இதழ் மூலமாகத் தமது அனுபவத்தைக் கூறுகிறார், தமிழக முதல்வர்.



அறந்தாங்கி அறிஞர் அண்ணா மருத்துவ
மனையில் பிறந்த முதல் குழந்தை

குடியரசுத் தலைவருக்கு வரவேற்பு

கல்பாக்கத்திலிருந்து குடிபெயர்ந்த
மீனவர்க்குப் பாடூரில் புதிய இல்லங்கள்

விக்கிரமசிங்கபுரம் தொழிலாளர் குடும்பங்
களுக்கு மருத்துவ வசதி

அனைத்துநாட்டுக்கல்வியாண்டு சென்னையில்
கொண்டாடப்பட்டது.

புஞ்சைபுளியம்பட்டியில் புதிய ஊராட்சி
ஒன்றியக் கட்டடத் திறப்பு விழா

திரு. ஏ. ராமசாமி முதலியாருக்கு 'பத்மவிபூஷண்'
பட்டம் வழங்கப்பட்டது.

டி. வி. சுந்தரம் அய்யங்கார் உருவச்சிலை
திறந்து வைக்கப்பட்டது.

திருப்பர்களுக்கும் வீட்டுவசதி வாரியம் வீடு

















# தென் குமரி

மூன்று கடல்கள் முத்தமிட்டுத் தழுவிடும்
ஆன்றோர் புகழும் தென்குமரி-
இந்தியப் பெருநாட்டின் தெற்கு முனை-
காண்போர் நெஞ்சைக் கவரும்,
இயற்கை யன்னை கொலுவிருக்கும்
எழில்மாடம்-
சுற்றுலாப் பயணிகளும் மற்றோரும்
கற்றுப் பயனடையத்தக்க காட்சிகள்-
கவின்மிகு வரலாற்றுச் சின்னங்கள்-
கன்னியாகுமரி, சுசீந்திரம்,
குளச்சல், நாகர் கோவில், பத்மநாபபுரம்-
ஆகிய பல்வேறு நகரங்கள்-
ரப்பர், தேக்குமரக்காடுகள், அணைகள்,
கோவில்கள், கைத்தொழில் வளங்கள்
கருத்துக்கு விருந்து படைக்கும்
கட்டழகுக் கோலங்கள், கடல்படுபொருள்கள்
விவேகானந்தர் பாறை, காந்தி நினைவு மண்டபம்
மறக்க வொண்ணா மாட்சி!











# 7 நாடுகளில் ௨0 நாட்கள்
# லா சென்று திரும்பிய
# தல்வருக்கு வரவேற்பு



"ஆடிப்பட்டம் தேடி விதை'' என்பது நீங்கள் அனைவரும் அறிந்த ஒன்றே! ஆடிப்பட்டம் நெருங்கி வரும் இந்நிலையில், நீங்கள் செய்ய வேண்டிய பணி குறித்து ஒரு வேண்டுகோள்.

நம் உடலுக்குத் தேவையான 10 வகைத் தாதுப் பொருட்களில் சுண்ணாம்பு, பாஸ்பரஸ், இரும்பு ஆகிய தாதுப் பொருட்கள், வேறு உணவுப் பொருட்கள் மூலம் போதுமான அளவுக்கு நமக்குக் கிடைப்பதில்லை. ஆனால் இத் தாதுப் பொருட்களை எளிதில் பெற ஒரே வழி காய்கனிகள் தான். அதோடு உடல் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா வகை வைட்டமின் சத்துக்களும் காய்கனிகளில் மிகுதியாக உள்ளன.

எனவே, நம் உடலுக்குத் தேவையான சத்துணவைப் பெற, நம் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க, அனைவருக்கும் காய்கனிகள் அவசியம் தேவை. வளர்ந்து வரும் காய்கறித் தேவையைச் சரிக்கட்ட எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம், எவ்வெவரால் இயலுமோ அவரெல்லாம் காய்கறிச் சாகுபடி செய்வது அவசியமாகும். உங்கள் வீட்டின் காய்கறித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள வீட்டுத் தோட்டத்தின் மூலமும், விற்பனைக்கான காய்கறிகளை விவசாயத் தோட்டங்கள் மூலமும் சாகுபடி செய்யும் பணியை உடனே துவங்க வேண்டியது அவசியம்.

காய்கறிச் சாகுபடியை விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் தான் மேற்கொள்ளவேண்டுமென்பதில்லை. இல்லத்து அரசியும், அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்களும், தொழிலாளத் தோழர்களும், வியாபாரிகள் மற்றும் பல்வேறு துறையினரும் தங்கள் இல்லங்களிலேயே காய்கறிச் சாகுபடி செய்யலாம். பல அடுக்கு மாடிகளில் உள்ளவர்கள் கூட மரப் பெட்டிகளிலும், மண் சட்டிகளிலும், தகர டின்களிலும் மண் நிரப்பி காய்கறிச்சாகுபடி செய்யலாம். தோட்டங்களில் வேறு பயிர்ச் சாகுபடி செய்பவர்கள் கூட கிணற்றைச் சுற்றிலும், வாய்க்கால் ஓரங்களிலும், வரப்புகளின் மேலும், எருக்குழிகளின் மேல் பந்தல் அமைத்தும் காய்கறிச் சாகுபடி செய்யலாம். எனவே, எல்லா வகையான மக்களும் தங்கள் ஓய்வுக் காலத்தைப் பயனுள்ள வழிகளில் கழிக்க உடனே துவங்குங்கள் காய்கறிச் சாகுபடியை!

காய்கறிகளில் சிலவற்றைக் குறிப்பிட்ட பட்டங்களில் மட்டுமே சாகுபடி செய்ய இயலும். சில எல்லாக் காலங்களிலும் சாகுபடி செய்ய ஏற்றவை. எடுத்துக் காட்டுக்கு வெண்டை, அரைக் கீரை, கத்தரி, முள்ளங்கி, கோ. 6 அவரை, கோ. 7 அவரை ஆகியவை எல்லாக் காலங்களிலும் சாகுபடி செய்ய ஏற்றவை. ஆனால் பூசணி வகைப் பயிர்கள், பந்தல் அவரை, சேனைக்கிழங்கு போன்றவை குறிப்பிட்ட பட்டங்களில் மட்டுமே சாகுபடி செய்ய ஏற்றவை. ஆனாலும் எல்லாக் காய்கறிகளையும் ஆடிப் பட்டத்தில் சாகுபடி செய்யலாம்.

அவரை, பீர்க்கன் ஆகியவற்றிற்குப் பந்தல் தேவைப்படும். பரங்கிக்காய், சாம்பல் பூசணி, சுரைக்காய் ஆகியவற்றைத் தரையில் அல்லது ஓலைக் கூரை மேல் படர விடலாம். பாகலுக்கு ஊன்றுகோல் தேவைப்படும். தக்காளி, கத்தரி ஆகியவற்றை நாற்று விட்டு நடவேண்டும்.

#### பொறுக்கு ரகங்கள்

மற்ற விவசாயப் பயிர்களைப் போலவே காய்கறிகளிலும் பொறுக்கு ரகங்கள் உண்டு. அவற்றின் பெயர்களும், சிறப்பியல்புகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

இப்பொறுக்கு ரகங்களை உங்கள் வட்டார விவசாயக் கிடங்குகளிலிருந்து உடனே பெற்று ஆடிப் பட்டத்தில் விதைக்கத் தயாராகுங்கள்.



| வரிசை எண். | பொறுக்கு ரகங்களின் பெயர்கள். | சிறப்பியல்புகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | கோ. 1 தக்காளி .. | ஊன்றுகோல் தேவைப்படாதது. அல்லது குறைந்த விதைகளையுடையது. |
| 2 | எஸ். எம். 62 கொத்து வெள்ளைக் கத்தரி. | கொத்துக் கொத்தாகக் காய்க்கும் தன்மையது. |
| 3 | பூசா சவாணி வெண்டை. | நரம்பு வெளுக்கும். நோய் தாக்காதது. |
| 4 | கோ. 1 பரங்கிக்காய். | பெரிய காய்கள் காய்ப்பது. |
| 5 | கோ. 1 சாம்பல் பூசணி. | பெரிய காய்கள் காய்ப்பது. |
| 6 | மிக நீண்ட பீர்க்கன்.. | நீண்ட காய்கள் காய்ப்பது. |
| 7 | கோ. 6 அவரை .. | காய்கறிக்கேற்றது. |
| 8 | கோ. 7 அவரை .. | காய்கறிக்கும், கொட்டைக்கும் ஏற்றது. |
| 9 | வெள்ளை முள்ளங்கி .. | குறுகிய காலப் பயிர். |
| 10 | பூசா மவுசாம்பி கொத்தவரை. | அதிக சதைப் பிடிப்புள்ள நீண்ட காய்களையுடையது. |
| 11 | நியூ ஈரா அல்லது இசி. 455 தட்டைப் பயிர். | நீண்ட காய்களையுடையது. |
| 12 | கோ. 1 அரைக்கீரை | சதைப்பிடிப்பான தழைகள் கொடுக்கக்கூடியது. |

**விதையளவும், வயதும்.**

ஏக்கருக்குத் தேவைப்படும் விதையளவும், ஒவ்வொரு பயிரின் வயதும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| காய்கறிகளின் பெயர். | ஏக்கருக்குத் தேவைப் படும் விதை அளவு. | வயது (நாட் களில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கோ. 1 தக்காளி .. | 128 கிராம் | 135 |
| கொத்து வெள்ளைக்கத்தரி | 150 ,, | 145 |
| பூசா சவாணி வெண்டை | $2\frac{1}{2}$ கிலோ. | 100 |
| பூசா மவுசாம்பி கொத்தவரை. | 7 ,, | 100 |
| கோ. 1 பரங்கிக்காய் .. | 500 கிராம் | 175 |
| கோ. 1 சாம்பல் பூசணி | 500 ,, | 145 |
| கோ. 1 அரைக்கீரை, வெள்ளை முள்ளங்கி. | 1 கிலோ. | 50 முதல் 60. |

எனவே குறுகிய காலத்தில் நல்ல சத்துள்ள உணவைப் பெறக் காய்கறிச் சாகுபடியை மேற்கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையான அளவு விதைகளை உடனே வாங்கி வைத்துக்கொள்ளுங்கள்.

காய்கறிப் பயிர்களையும் தகுந்த இடைவெளி விட்டு நடுவது அவசியமாகும். தக்காளிக்கும் கத்தரிக்கும் $2\frac{1}{2}$ அடி இடைவெளி விட்டு பார்கள் அமைக்கவும். பாரில் செடிக்குச் செடி 2 அடி இடைவெளி விட்டுத் தக்காளி நாற்றுகளையும், $2\frac{1}{2}$ அடி இடைவெளி விட்டு கத்தரி நாற்றுகளையும் நடவு செய்யவேண்டும். வெண்டை விதைகளை வரிசைக்கு வரிசை 2 அடியும், செடிக்குச் செடி 9 அங்குலம் இடைவெளி விட்டு ஊன்ற வேண்டும். உயர் மகசூல் பெறப் போதுமான இடைவெளி விட்டு நடுவது அவசியம்.

விதைகள் சுலபமாகவும், விரைவாகவும் முளைக்க நிலத்தை நன்கு பண்படுத்த வேண்டும்.

நாற்று விட்டு நடவு செய்யும் காய்கறிகளான கத்தரி, தக்காளி போன்றவற்றிற்கு உடனடியாக நாற்றங்கால் தயாரிக்கவும். ஓர் ஏக்கர் நடவு செய்ய ஒரு சென்ட் நாற்றங்கால் தேவைப்படும்.



உங்களுக்குத் தேவையான பொறுக்கு வித்துக்களை உடனே பெற்றுக் கொள்ளவும்.

உங்களுக்குத் தேவையான அளவு உரங்களையும் இப்பொழுதே வாங்கி உங்கள் வசம் வைத்துக்கொள்ளுங்கள்.

போதுமான இடைவெளி விட்டு விதைகளை ஊன்றுங்கள். சரியான ஆழத்தில் ஊன்றுங்கள்.

கத்தரி மற்றும் தக்காளி விதைகளைக் கிலோவுக்கு 2 கிராம் அக்ரசான் அல்லது செரசான் மருந்து வீதம் கலந்து பின்னர் விதைக்கவும்.

தேடிவரும் ஆடிப்பட்டத்தைத் தவற விடாதீர்கள்!




விநாடிக்கு விநாடி விரைந்து செல்லும் ஊர்திகள்—நிமிடத்துக்கு நிமிடம் தொடர்ந்து செல்லும் சைக்கிள்கள்—எந்தக் கணமும் ஏராளமான பொதுமக்களைச் சுமந்து செல்லும் போக்குவரத்துத் துறைப் பேருந்துகள்—வெளியூர்களிலிருந்து வருகை புரியும் ஆயிரக்கணக்கான மக்களின் நடமாட்டம்—நகரத்து மக்களின் சங்கிலிப் பின்னல் போன்ற ஓட்டம்—ஓங்கி உயர்ந்து நின்று தமிழகம் முழுவதுக்கும் வழக்கறிஞர்களை உருவாக்கிக் கொடுக்கும் நீதிக் கோயிலாம் சட்டக் கல்லூரி—சைனுக்காரர்கள் நமது நாட்டுடன் அநியாயமாகப் போர் தொடுத்தும் கூட, சிறிதும் அவர்கள் மீது வெறுப்புக் கொள்ளாமல் ''சைனு பஜார்'' என்று பெயரிட்டு இன்னமும் அழைக்கப் படும் நெடிய வீதி—தமிழிசைக் கல்லூரியாக விளங்கும் ராஜா அண்ணுமலை மன்றம்—இன்னும் இது போன்ற எத்தனையோ வகைச் சிறப்புக்களுடனும் ''பட்டணம்'' என்ற பட்டப் பெயருடனும் விளங்கும் சென்னை எஸ்பிளனேட் என்று சொல்லப்படும் பரபரப்பான பகுதியில், தன்னகத்தே உள்ள திறமையை அடக்க உணர்வுடன் தெரிவிக்கும் வள்ளுவரின் குறள் போல—''இதன் கண் இல்லாத தொன்றில்லை'' என்று புலவர்களால் பெருமைப் படுத்திச் சொல்லப்படும் குறள் போல—ஒளி வீசித் திகழ்கிறது குறளகம் என்னும் எழிற் கட்டிடம். இந்தக் கட்டடத்தில் தான் தமிழகக் கதர்—கிராமத் தொழில் அங்காடி அமைந்திருக்கிறது. ''இதன்கண் இல்லாத பொருள் இல்லை'' என்று கூறத் தக்க அளவுக்கு அநேக கைவினைப் பொருள்கள் இங்கே விற்பனை செய்யப்படுகின்றன.

1968-ம் ஆண்டு பொங்கல் நாளன்று, முன்னுள் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணு அவர்களால் துவக்கி வைக்கப் பட்ட இந்த அங்காடி, இன்று வளம் பெற்று, வலிவு பெற்றுத் திகழ்கிறது.

துவக்க உரையின் போது பேரறிஞர் அண்ணு அவர்கள் குறிப்பிட்ட வாசகங்கள் இப்போதும் நமது நினைவுக்கு வருகின்றன.

''உள்ளம் நெகிழ்ச்சியடையும் உத்தம குணம் படைத்த காந்தியடிகள் நாட்டைச் சுற்றிப் பார்த்து, வேலை வாய்ப்புக் குறைவினுல் மக்கள் பட்ட அவதியைக் கண்டு, அவர் நிலை உயர கதர் இயக்கம் தோற்றுவித்தார். விஞ்ஞானத் தொழில்களில் முன்னேற்றம் ஏற்படும்போது கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ளோரது எண்ணிக்கை குறையும். கதர் இயக்கத்தை அவர் துவக்க, அடிப்படைக் காரணமே மனிதாபிமான உணர்வேயாகும்''

அண்ணுவின் இந்த வாசகம் காதுகளில் எதிரொலித்த வண்ணமே இருந்தது. அதே எதிரொலியுடன் கதர், கிராமத் தொழில் அங்காடிக் கட்டடத்தில் காலடி வைத்தோம். ''நல்வரவு'' என்று எங்களுக்கு வரவு கூறினுர்கள் நாதஸ்வரக் குழுவினர்—நேரிலே தோன்றி யல்ல—ஓவியத்தின் உருவிலே!

பாளையத்து ஜமீன்தார்களின் மாளிகைகளில் நடைபெறும் நவராத்திரி விழாவில் காலடி எடுத்து வைத்து விட்டோமோ என்ற வியப்பு எங்களுக்கு ஏற்பட்டது. பெரும் பெரும் வண்ணப் பொம்மைகள் அங்கே கொலு வேறியிருந்தன. திருப்பதி வெங்கடாசலபதி— திருமுருகன்—முருகனின் அண்ணனை யானைமுகன்—கமலக் கண்ணன்—கலை மடந்தை—நா மடந்தை அனைவரும் வீற்றிருந்தார்கள் பொம்மை வடிவத்தில்!

எங்களுக்கு முன்னே சென்று கொண்டிருந்த வெளியூர்க்காரர் ஒருவர், கடவுளர் பொம்மைகளைக் கண்டவுடன், மடித்துக் கட்டியிருந்த வேட்டியை இறக்கிக் கொண்டு விட்டார். நெற்றியில் நீறணிந்திருந்த முதியவர் ஒருவர் பயபக்தியுடன் கும்பிடத் தொடங்கினுர். இன்னும் ஒருவர் 'வேழ முகத்து விநாயகனைத் தொழுது'—தனது சிரத்திலே ஐந்தாறு குட்டுக்கள் போட்டுக் கொண்டார். இந்தக் காட்சிகளிலிருந்து ஒன்று தெளிவாகியது. சாதாரண மண் பொம்மைகளை, பக்தி உணர்வு கொடுக்கும் களஞ்சியங்களாக அமைப்பதற்குத்

திறமை மிகுந்த கலைஞர்களால் முடியும் என்பது உறுதியாகியது.

மற்றோர் இளைஞரின் பார்வை வெகு வேகமாக ஒரு குறிப்பிட்ட திசையில் தாவியது. அவரது பார்வையைப் பின்பற்றி எங்களின் பார்வையும் ஓடியது. அங்கே, வள்ளுவர், புத்தர், பரமஅம்சர், விவேகாநந்தர், வள்ளலார், காந்தியடிகள், பேரறிஞர் அண்ணா ஆகிய தத்துவ மேதைகள் தங்களின் போதனைகளைக் கண்களாலேயே தெரிவித்துக் கொண்டிருந்தார்கள் — பொம்மைகளின் வடிவில்!

திடீரென்று ''அம்மாவ்'' என்று ஓர் அலறல் கேட்டது. திடுக்கிட்டு விட்டோம். பெரியவர்களின் அபயக் குரலல்ல அது என்பதும், சின்னக் குழந்தையின் தீனக் குரல் என்பதும் எளிதில் புரிந்தது. மறுகணம், குரல் எங்கே இருந்துவந்தது, யாருக்கு என்ன ஆபத்து, என்று அச்சத்துடன் பார்த்தோம்.



தனது மூன்று வயதுப் பெண் குழந்தைக்கு—ரெடிமேடு கவுன் வாங்க ஓர் அம்மையார் வந்து கொண்டிருந்தார் என்பதும், அவரது இடுப்பிலே அமர்ந்திருந்த குழந்தை, அங்கே கூட்டமாக வைக்கப்பட்டிருந்த இருபது, முப்பது பொம்மை நாய்களைப் பார்த்து அவை மெய்யான நாய்கள் என்று எண்ணி பயந்து, கூச்சலிட்டுவிட்டது என்பதும் சில விநாடிகளில் தெளிவாகியது.

என்ன நடந்ததோ என்று அச்சத்துடன் அங்கே ஓடிவந்த தரை மேற்பார்வையாளர் நடந்ததை அறிந்து மன நிம்மதி பெற்றார். ஆனால், பாவம் குழந்தையின் தாயார்தான் நிம்மதியடைய முடியவில்லை. குழந்தை தேம்பித் தேம்பி அழுதால், அதன் தாயாரால் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்! தரை மேற்பார்வையாளர் உடனடியாக அந்தக் குழந்தையை அதன் தாயாரிடமிருந்து அழைத்துச் சென்று, அவை பொம்மை நாய்கள் என்பதைத் தெளிவாக்கினார். மறுகணம் அழுகையை மறந்து, சிரிப்பைச் சிந்தத் தொடங்கியது அந்தக் குழந்தை. குழந்தையைப் பயமுறுத்திய பொம்மை நாய்கள் கடலூரில் உருவானவை என்பதையும், அவற்றை வெளிநாட்டுக் காரர்கள் விருப்பத்துடன் வாங்கிச் செல்கிறார்கள் என்பதையும் அறிந்து மகிழ்ச்சியடைந்தோம்.

அந்தப் பகுதியை விட்டு அடுத்த பகுதிக்குச் சென்றோம். கதர்த் துணிகளால் ஆகிய ரெடிமேடு சட்டைகள், சிலாக்குகள், ட்ரவுசர்கள், சூட்டுகள், வேட்டிகள் ஆகிய இன்னோரன்ன துணிப் பொருள்கள் காட்சி தந்தன. அடுத்து வீற்றிருந்த மெத்தைகள், தலையணைகள், எங்களைத் தங்கள் பக்கம் இழுத்தன. அடுத்து, வாலாஜாபேட்டையில் தயாரான வண்ண வண்ணத்தரை விரிப்புகள் கவர்ச்சியாகக் காணப்பட்டன. அவற்றின் கவர்ச்சியில் மயங்கி வெளிநாட்டுக் காரர்கள் மிகுந்த அளவில் வாங்கிச் செல்கிறார்கள் என்று அறிந்தோம். குஜராத், ஆமதாபாத் போன்ற வெளி மாநிலங்களுக்கு இவை ஏற்றுமதியாகின்றனவாம்.

அடுத்து, விலையுயர்ந்த யானைத் தந்தத்தாலும், சந்தன மரத்தாலும் ஆன கலைப் பொருள்கள் எங்கள் கண்களில் பட்டன. சந்தனத்தாலான கலைப் பொருள்களைத் தொட்டுப் பார்த்தபோது கருத்தில் மட்டுமல்ல—எங்களின் கரத்திலும் நன்மணம் பரவத் தொடங்கியது. கரங்களைப் பார்த்துக்கொண்டே அடுத்த பகுதியை நாடினோம். அங்கே, பனை ஓலைகளாலும், தாழைத் தழைகளினாலும், பிரம்பினாலும் செய்யப் பட்ட கூடைகள், பைகள், தொப்பிகள் வகை வகையாகக் காட்சியளித்து வியப்பில் ஆழ்த்தின. அதைவிட வியப்பு, பழவேற்காட்டில் செய்யப்பட்ட அந்தப் பிரம்புப் பிரயாணப் பை ஒன்றினை யாரோ ஒரு வெளிநாட்டுப் பெண்மணி விருப்பத்துடன் வாங்கிக் கொண்டிருந்ததுதான். சுவிஸ் நாட்டவர் அந்தப் பெண்மணி என்று அறிந்து மகிழ்ந்தோம்.

''பரவாயில்லையே! பழவேற்காட்டுத் தயாரிப்பை, சுவிஸ் பெண்மணி வாங்கிச் செல்கிறாரே''—வியப்புடன் கூறினார் எங்களது புகைப்படக்காரர்.

''சுவிஸ்காரர்கள் மட்டுமல்ல; ஆங்காங், சைனா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாட்டுப் பெண்மணிகள்கூட இங்கிருந்து கலைப்பொருட்களை வாங்கிச் செல்



கின்றார்கள்''— பெருமையுடன் கூறினார் அந்தப் பகுதி விற்பனை உதவியாளரான அம்மையார்.

''சார்! மேலாளர் அறைக்கு இந்தப் பக்கமாகத் தான் செல்ல வேண்டும்''—என்றார் விற்பனை உதவியாளர் ஒருவர்; அவர் வழி காண்பிக்க, அவரை நாங்கள் பின் தொடர்ந்தோம்.

கடகடவென்று சேர்ந்தாற் போல் ஒலி எழுந்தது. சில தையலர்கள் தட்டெழுத்து இயந்திரத்தில் தங்கள் மணி விரல்களை நடனம் ஆடச் செய்து கொண்டிருந்தார்கள். அந்த இன்னொலி எழும் அறையைக் கடந்து, மேலாளர், அறைக்குச் சென்றோம். அவர் எங்களை அன்புடன் வரவேற்றுப் பேசினார். ''உதவி மேலாளர் பாண்டியன் அவர்களிடம் இவர்களை அழைத்துச் செல்லுங்கள்'' என்று ஊழியரிடம் தெரிவித்தார்.

''தமிழரசு'' ஏட்டின் சார்பாக வந்துள்ளோம் என்று தெரிவித்தோம். ''வாருங்க, வாருங்க'' என்று நெல்லைத் தமிழை, தூய வெள்ளைச் சிரிப்பில் தவழவிட்டு வரவேற்றார் அவர். உடனடியாக, காபி வரவழைத்து எங்களை அருந்த வைத்து விட்டு, ''புறப்படுவோமா'' என்று உற்சாகத்துடன் கிளம்பினார். அவரை நாங்கள்பின் தொடர்ந்தோம். ஒவ்வொரு பகுதியாகக் காண்பித்தபடி, விளக்கங்களையும் அவர் சொல்லி வந்தது எங்களுக்கு மிகுந்த பயனை அளித்தது.

விருத்தாசலத்திலே தயார் செய்யப்பட்ட பீங்கான் பொருள்கள் கவர்ச்சிகரமாகவும் பயனுள்ளனவாகவும் காணப்பட்டன. சிறு சேமிப்புத் திட்டத்திற்கு உதவும் வகையில் செய்யப்பட்டுள்ள களி மண் உண்டியல்கள், இரும்பு உண்டியல்கள் போல் உறுதியுடன் காணப்பட்டன. மதுரை மாவட்டத்திலுள்ள கல்லுப்பட்டியில் தயாரானவை இவை. மானா மதுரை, காருகுறிச்சி, வேலூர், செங்கல்பட்டைச் சேர்ந்த செவ்வாய்ப்பேட்டை ஆகிய ஊர்களிலிருந்து தயாரிக்கப்பட்டு வந்திருக்கும் மண் ஜாடிகள், தண்ணீர்க் கூஜாக்கள் எங்களை அதிசயிக்க வைத்தன. விற்பனை நிலையத்துக்கு வந்திருக்கிறோமா, அல்லது தயாரிப்புக் கூடத்துக்குள் நுழைந்திருக்கிறோமா என்று எங்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. அந்த அளவுக்கு, அவை நிறைந்து காணப்பட்டன. ''அதிகமான விற்பனையின் காரணமாகத் தான் அவை அதிகமாக வரவழைக்கப்பட்டிருக்கின்றன'' என்று தெரிவித்தார் உதவி மேலாளர்.

மண் கூஜாக்களின் பெருமையை அறிந்த பல செல்வந்தர்கள் கார்களில் இங்கே வந்து அவற்றை வாங்குகிறார்களாம். அவற்றை அப்படியே எடுத்துச் செல்ல வெட்கப்பட்டுக் கொண்டு காகிதங்களால் சுற்றி எடுத்துச் செல்லும் காட்சி நினைத்து நினைத்து மகிழத்தக்கது. என்று நகைப்பைச் சிந்தியபடி தெரிவித்தார்.

திடீரென்று ஒரு திகைப்பு! தேக்கடி என்று சொல்லப்படும் ஊருக்கு வந்து விட்டோமோ என்ற ஓர் ஐய உணர்வு! ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான யானைகள் நின்றுகொண்டிருந்தால்—அந்தக் காட்சி தேக்கடி









யைத் தானே நினைவுபடுத்தும்! ஆமாம்! அங்கேயிருந்த யானை பொம்மைகள்தான் அந்த உணர்வை ஏற்படுத்தின.

அடுத்து, தோலினால் செய்யப் பட்ட பொருள்களைப் பார்த் தோம். கண்ணையும் கருத்தை யும் கவரும் முறையில்—வேலைப் பாடுகளுடன் கூடிய முறையில் அவை அமைந்திருந்தன. வெளி யில் எந்த வணிக நிலையத்திலும் காண முடியாத அளவுக்குப் புதிய புதிய விதத்தில், காலணிகள் காட்சி தந்தன.

''நமது அங்காடியில் இத்தனை வகையான காலணிகள் இருக்கின் றனவா?''—என்று வியந்தோம்; வியந்தோம்; வியந்துகொண்டே இருந்தோம்! அந்தக் காலணி களை, கால்களில் போட்டு வீணாக் கக்கூடாது. கைகளிலே அணிந்து கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சியே தோன்றிற்று. வெளிக்கடைகளைவிட 5 ரூபாய் குறைவாகவும் விற்கப்படுகிறது என்பதை அறிந்ததும் பெருமூச்சு எழுந்தது. சென்ற மாதம் வெளிக் கடையில் அதிகப் பணம் கொடுத்துக் காலணி வாங்கியதை எண்ணி நொந்துகொண்டோம். மனத்தை அமைதிப்படுத்திய வாறு, சைக்கிள் ஆசனம் ஒன்றை எடுத்தோம். அதன் விலையை விசாரித்தோம். நான்கு ரூபாய் பத்து பைசா என்பதை அறிந்த வுடன் இறும்பூதெய்தினோம். ''இது போன்ற உறுதி உள்ள வகையை எந்த வெளி வணிக நிலையத்திலும் காண முடியாது'' என்று உறுதி கூறினார் உதவி மேலாளர். திண்டுக்கல் காதி போர்டு அமைப்பின் தயாரிப்பு அது என்பது குறிப்பிடத்தக்கது. டம்பப் பைகளும் அங்கே பல வகைகளில் காணப்பட்டன. அவற்றைப் பயன்படுத்துவதற்கு, நாம் பெண்ணாகப் பிறக்க வில்லையே என்ற ஏக்கம் எங்க ளுக்கு எழுந்தது—ஏக்கத்துடன் முன்னேறி நடந்தோம்.

‘‘திடீரென்று சென்னைக்கு மாற்றலாகி வரும் ஓர் அதிகாரி தனது வீட்டிற்குத் தேவைப்படும் மரச் சாமான்களுக்கு என்ன செய்வது என்று தவிக்க வேண்டாம்! நாங்கள் இருக்கிறோம்’’ என்று கூறும் வகையில் காட்சியளித்தன, கட்டில், நாற்காலி, சோபா, அலமாரி போன்ற மரச் சாமான்கள்! அவற்றிற்கு வாழ்த்துக் கூறிவிட்டு, பிரம்பு நாற்காலிகளின் பக்கம் சென்றோம். அவை அதிகமான அளவில் விற்பனையாகின்றன என்ற விவரத்தை அறிந்தோம்.

அவரது விளக்கத்தைக் கேட்டுக்கொண்டு ஓவியர் காண்பித்த ஓவியத்தை ஆர்வத்துடன் பார்த்தோம். வைக்கோலிலே உருவாக்கப்பட்டிருந்தது அந்த ஓவியம். கேரளத்துத் தயாரிப்பான அதனை வெளிநாட்டார் விருப்புடன் வாங்கிச் செல்கின்றனராம்.

‘‘தினமும் ஏராளமான பேர் இங்கே பட்டுப் புடவைகளை வாங்கிச் செல்கின்றனர். காரணம் அவர்களின் உள்ளப் பாங்கை அறிந்து, நாங்கள் வகை வகையாக வரவழைக்கிறோம்’’ —உதவி மேலாளர் பெருமிதத்துடன் கூறினார்.

அவர், தொடர்ந்து பல அரிய செய்திகளைச் சொன்னார். அதனை அவர் சொல்லிய விதத்திலேயே தெரிவிப்பது நல்லது என்பதால், அவரையே பேச அனுமதிக்கிறோம்.

‘‘1968-ல் துவக்கப்பட்ட இந்த விற்பனை நிலையம், துவக்கத்தில் இலாபகரமாக இல்லாவிட்டாலும், 1969–70-ஆம் ஆண்டில் நல்ல இலாபத்தைத் தந்து வருகிறது. தீபாவளி, பொங்கல், காந்தியடிகள் பிறந்த நாள் ஆகிய சமயங்களில் துணிகள் மிகுதியாக விற்பனையாகின்றன. சென்ற ஆண்டு தீபாவளியின்போது நாலரை இலட்ச ரூபாய்க்கு விற்பனையாகியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.








தினமும் நாலாயிரம் ரூபாய்க்கு மேல் விற்பனையாகிறது. நவராத்திரி நேரத்தில் பொம்மைகள் மட்டும் சுமார் 13 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளன. காஞ்சி, சென்னை கடலூர் ஆகிய ஊர்களின் தயாரிப்புகள் அந்த பொம்மைகள்.

''மண்பாண்டப் பொருள்கள், நூக்கமரப் பொருள்கள், தேக்குமரப் பொம்மைகள், டீப்பாய்கள், தந்தத்தினாலான கலைப் பொருள்கள் ஆகியவை மக்கள் விரும்பி வாங்கும் பொருள்கள்.

''பனஞ்சர்க்கரை கலந்த காபி எங்கள் சிற்றுண்டி நிலையத்தில் விற்கப்படுகிறது. மக்கள் விருப்பத்துடன் வாங்கி அருந்துகிறார்கள். தினமும் 300 ரூபாய் வரை விற்கிறது. சில சமயங்களில் 'கியூவில்' நின்று இந்தக் காபியை மக்கள் அருந்துவது குறிப்பிடத்தக்கது. பனஞ்சர்க்கரையில் செய்யப்பட்ட லட்டு, பூந்தி, பிஸ்கட் முதலானவைகூட மக்களால் விரும்பி வரவேற்கப்படுகின்றன.

''வெளிநாட்டுக்குச் செல்லும் அமைச்சர் பெருமக்கள் அனைவரும், அங்கே பரிசு கொடுப்பதற்குரிய பொருள்களை இங்கேயிருந்துதான் வாங்கிச் செல்கிறார்கள். அந்தப் பெருமை இந்த அங்காடிக்கு உண்டு. அண்மையில், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் செய்தபோது, அங்கே பரிசு தருவதற்குரிய பொன்னாடைகளையும், மற்றப் பொருள்களையும், இங்கே இருந்துதான் வாங்கிச் சென்றார்கள். வள்ளுவர், அண்ணா, கலைஞர் ஆகியோர் உருவம் பொறித்த பொன்னாடைகள் மிகுந்த அளவில் விற்பனையாகின்றன.

''திரை உலகப் பெருமக்கள் அடிக்கடி வந்து, கலைப் பொருள்களை எங்களிடமிருந்து வாங்கிச் செல்கிறார்கள். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் ரங்கா அவர்கள், தமது துணைவியாருடன் இங்கு பலமுறை வருகை புரிந்ததுண்டு; பொருள்களை வாங்கிச் சென்றதுண்டு.

''விற்பனை உதவியாளர், மற்றும் அலுவலக ஊழியர், மேலாளர், உதவி மேலாளர் இப்படி மொத்தம் 105 ஊழியர்கள் இங்கே அலுவலில் உள்ளனர்; ஆண், பெண், இருபாலரும் உண்டு. விற்பனை உதவியாளர் பணியில், பெண்களே அதிகம் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. விற்பனை உதவியாளர்களுக்குச் சம்பளம் தவிர, ஊக்க ஊதியமும் கொடுக்கப்படுகிறது. இங்கே தணிக்கைகளும் உடனுக்குடன் கவனிக்கப்படுகிறது; அதற்கென ஒரு குழுவே உள்ளது.



''சிலகாலத்திற்கு முன்பு மாலை நேரங்களில் இசைத் தட்டுக்களின் மூலமாக வாத்திய இசையை ஒலிக்கச் செய்தோம். அந்த இசை, வாணிக வளர்ச்சிக்கு மிகவும் உறு துணையாக இருந்ததைக் கண்கூடாக அறிந்தோம். இன்னும் சில புதிய திட்டங்கள் எல்லாம் வைத்திருக்கிறோம். . . . அவற்றை எல்லாம் நிறைவேற்றிவிட்டுச் சொன்னால் நல்லது. திட்டமாக இருக்கும்போதே தெரிவிப்பது ......'' என்று தயங்கினார் உதவி மேலாளர்.

''தயக்கம் வேண்டாம்! நீங்கள் எப்போது தெரிவிக்க விரும்பினாலும் சரி, நாங்கள் கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்'' என்று சொல்லியபடி, கைக் கடிகாரத்தைப் பார்த்தோம். மாலை ஐந்து மணி ஆகியது. கடமை உணர்ச்சியுடன் புறப்பட்டோம். மக்கள் பணத்தைச் செலுத்துவதற்குக் கியூவில் நின்று கொண்டிருந்த காட்சி இதயத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. மகிழ்ந்தபடி வெளியே வந்தோம். அங்கே எண்ணெய் விற்பனைப் பகுதி இருந்தது.

குமரி மாவட்டத்திலிருந்து வரும் தேங்காய் எண்ணெயும், காஞ்சியிலிருந்து வரும் நல்லெண்ணெயும், வேலூரிலிருந்து வரும் கடலை எண்ணெயும், தற்போது வெண்ணெயுங்கூட விற்பனை செய்யப்படுகின்றன.

''கையினால் செய்யப்பட்ட பொருள்கள், வாய்ப்பும் வசதியும் உள்ளவர்களால் வாங்கப்படுபவை; தேவைப்பொருள்களல்ல; எனவே விற்பனையாளர் நல்ல கனிவோடு, நட்புணர்வோடு பழகி, அவற்றை விற்க வேண்டும்; விற்பனைத் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்''—என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்த அங்காடியின் துவக்க நாள் விழாவில் கூறிய வாசகத்தை இதன் ஊழியர்கள் பின்பற்றி வருகிறார்கள்—பலன் ஏற்படுத்தித் தருகிறார்கள் என்பதை எண்ணி மனம்நிறைந்த பாராட்டுக்களை அவர்களுக்கு வழங்கிவிட்டு விடைபெற்றோம்.

—: o :—



# நோய் நாடி நோய்முதல் நாடி

தற்பொழுது நம் நாட்டில் பசுமைப் புரட்சி நடந்திருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். உழவர் பெருமக்களிடையே அமோக விளைச்சல் தரும் உயர்வள ரகங்களைப் பயிரிடுவதில் ஆர்வமும், புத்துணர்ச்சியும் காணப்படுகிறது. நெல் சாகுபடியில் தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் உயர்வள நெல் வகைகளான ஐ.ஆர். 8, ஜெயா, பத்மா போன்றவை மிகுதியாகப் பயிரிடப்படுகின்றன. மற்றைய நெல் ரகங்களைவிட இந்த நெல் ரகங்கள் இரண்டு, மூன்று மடங்கு அதிக விளைச்சல் தருவதால் தமிழ்நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற வழிவகுப்பதுடன் விவசாயிகளின் வருவாய் அதிகரித்து, வளம்பெருக வாய்ப்பளிக்கின்றன. நடப்பு ஆண்டில் ஐ.ஆர். 8 நெல் சாகுபடியின் குறியளவு 55 லட்சம் ஏக்கர்களாகும். இந்த நெல்லை ''ஹெல்மிந்தோஸ்போரியம்'' (Helminthosporium) என்னும் ''செம்புள்ளி'' நோய் மிகுதியாகத் தாக்கிச் சேதத்தை விளைவிக்கிறது. இந் நோயைப் பற்றியும் இதைத் தடுக்கும் முறைகளைப்பற்றியும் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

மற்ற நெல் ரகங்களைத் தாக்கும் கொடிய நோயான கொலை அல்லது கொள்ளை நோய் (Blast disease) ஐ. ஆர். 8 நெல்லைத் தாக்குவதில்லை. இது, இந்த ரக நெல்லின் போற்றத்தக்க ஒரு சிறப்பு அம்சமாகும். எனவே தழைச் சத்து (Nitrogen) அதிகமாக இட்டபோதிலும் கொள்ளை நோயினால் இந்த நெல்லிற்குச்சேதம் விளைவதில்லை. எனினும் செம்புள்ளி நோய் (Helminthosporium) என்னும் இலைப்புள்ளி நோய் இந்த நெல்லைக் கடுமையாகத் தாக்குகிறது. பயிர் பாதுகாப்பு முறைகளில், பூச்சிகளுக்கு மருந்து தெளிக்கும் பணியில் விவசாயிகள் காட்டும் ஆர்வம் பொதுவாகப் பூசனத்தினால் ஏற்படும் இந்நோயைக் கட்டுப்படுத்துவதில் இருப்பதில்லை. எனவே ஐ. ஆர். 8 நெல் சாகுபடியில் அமோக விளைச்சல் பெற பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதுடன் செம்புள்ளி நோயைத் தடுப்பதில் கவனம் செலுத்துவது இன்றியமையாதது. இந்நோயை உழவர்கள் நெற்பயிரில் எளிதில் தெரிந்துகொள்ள இந்நோயின் அறிகுறிகள், அது பரவும் வழிகள், நோயின் தடுப்பு முறைகள் ஆகியவற்றைப் பற்றி இனிக் காண்போம்.

## நோயின் அறிகுறிகள்

இந்நோய் தாக்கிய இலைகளின் மேற்பரப்பில் முதலில் சிவப்பு அல்லது கரும் சிவப்பு நிறத்தில் (எள்ளின் நிறத்தில்) சிறிய புள்ளிகள் தோன்றும். இத்தகைய புள்ளிகள் இலையின் அடிப்பாகம் முதல் நுனி வரை, பரவலாகக் காணப்படும். நாளடைவில் இப்புள்ளிகள் அளவில் 0·5 முதல் 3 மில்லி மீட்டர் அகலமும் 1 முதல் 14 மில்லிமீட்டர் நீளமும் கொண்ட பெரிய புள்ளிகளாக மாறும். இப்புள்ளிகள் கொள்ளை நோயின் புள்ளிகளைவிட அளவில் சிறியதாக, சற்று நீண்டு, அகலம் குறுகலாகக் காணப்படும். சாதாரணமாகப் புள்ளிகளின் நிறம் கருஞ்சிவப்பாக (Brown Colour) இருக்கும். ஆனால் முதிர்ந்த புள்ளிகளின் நடுவில் அழுக்கேறிய வெண்மை அல்லது இளஞ்சிவப்பு நிறம் காணப்படும். கொள்ளை நோயைப் போன்று கண்வடிவமுள்ள பெரிய புள்ளிகள் இந் நோயினால் உண்டாவதில்லை. எனவே இந் நோயின் அறிகுறிகளைக் கொள்ளை நோயினின்றும் உழவர்கள் இலகுவில் பிரித்து அறிந்து கொள்ளலாம். புள்ளிகள் இலைகளில் அதிகமாகத் தோன்றும் பொழுது இலைக் கருகல் ஏற்படுவதுண்டு. ஆனால் இப்புள்ளிகள் கொள்ளைநோயைப் போன்று ஒன்றுக்கொன்று இணைந்து (Coalescence) காணப்படா. தனித்தனியாக இலை முழுவதும் பரவலாகக் காணப்படும்.

இந்நோய் நெற்கதிரையும், நெல் மணிகளையும் தாக்க வல்லது. இதனால் நெற்கதிருக்கும், நெல் மணிகளுக்கும் பெருத்த அளவில் சேதம் உண்டாகிறது. நெற்கதிரைத் தாக்குவதால் கதிர், கொடி

# வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டி!



எல்லா வசதிகளோடும் கூடிய ஓர் இல்லத்தை அமைத்துக் கொள்ள உங்களுக்கும் ஆசையிருக்கலாம் !

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுக்காக நீங்கள் செலவிடும் ஒவ்வொரு ரூபாயும் வீண் போவதில்லை. இந்தச் சமுதாயத்தின் வளமான சுபிட்சத்துக்காக ஏராளமான திட்டங்கள் ... உணவு ... உறைவிடம் ... சுகாதாரம் ... கல்வி ... மருத்துவம் ஆகிய பல்வேறு துறைகளில்உங்கள் முதலீடு அரசினால் மறு-முதலீடு செய்யப்படுகிறது.

வளமான வாழ்க்கையை அடைவதில் உங்களுக்குள்ள வாய்ப்புகளை நினைவு கொள்ளுங்கள் ... தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம் இந்தியாவெங்கிலும் அதிகப்படியான பரிசுகளையும், தொகையையும் அள்ளித் தருகிறது !

## அடுத்த குலுக்கலுக்கான பரிசுகளின் மொத்தத் தொகை : ரூ. 17,50,000

## ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு : ரூ. 1,00,000

## குலுக்கல் தேதி: 25-8-1970

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
இதுவரை உருவாக்கிய புதிய லட்சாதிபதிகள் = 177 பேர்

**பரிசுச் சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது. ஒரு சீட்டின் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!**

**இன்றே வாங்குங்கள்**
**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**

செலவு ஒரு ரூபாய்




வரவோ லட்ச ரூபாய்

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9



இலையிலிருந்து (Flag or boot leaf) வெளிவராமல் தடுக்கப்படுகிறது. இத்தகைய நிலைக்கு '' கதிர் இறுக்கம் '' (Chocking) என்று பெயர். கதிர் இறுக்கம் ஏற்படும்பொழுது நெற்குலைகள் கொடி இலையினின்றும் வெளிப்பட்டு, நன்கு விரிந்து, நெல் மணிகள் முதிர்ச்சியடையாமல், கொடி இலைக்குள் உள்ளே பகுதியும், வெளியே பகுதியுமாக இறுக்கமாகக் காணப்படுவதால் நெல்மணிகள் முதிர்ச்சியடையாமல் பதராகிவிடுகின்றன. கொடி இலைகளின் வெளிப்பாகத்தில் சற்று அளவில் பெரிய கருஞ்சிவப்புப் புள்ளிகள் காணப்படுகின்றன. மேலும் இந்நோய் நெல்மணிகளைத் தாக்கும் பொழுது அவை கருஞ்சிவப்பு அல்லது கருப்பான நிறத்தையடைகின்றன. கதிரிலுள்ள பெரும்பான்மையான மணிகளின் புறத்தோல் (Glumes) இந்த நிறத்தில் காணப்படுவதால் மணிகளின் நிறம் மங்குவதோடு சில சமயங்களில் பதராகி விடுகின்றன. கதிர் வெளியே வந்தபின்னும், கதிர்க் காம்புகளில் கருப்பு நிறம் காணப்படும்.

### நோய் பரவும் விதம்

இந்த நோய் முக்கியமாக விதைகளின் மூலம் பரவுகிறது. இந்நோயைத் தோற்றுவிக்கும் பூசனமான ஹெல்மிந்தோஸ்போரியம் ஒரைசே (Helminthosporium oryzal) விதைகளின் புறத்தோலிலும், உள்ளேயும் (Externally and internally seed borne) தொற்றிப் பரவவல்லது. எனவே நோய் தாக்கப்பட்ட விதைகளை விதைக்கும்பொழுது இந்நோய் அத்தகைய விதைகளிலிருந்து முளைத்து வளரும் செடிகளையும் தாக்குகிறது. மேலும் இலைகளிலும், கதிரிலும் நோய் தாக்கிய பகுதிகளிலிருந்து பூசன வித்துக்கள் (Fungal spores) உற்பத்தியாகி, அவை காற்றின் மூலம் மற்ற இடங்களுக்குப் பரவி, நோயற்ற செடிகளின் இலைகளில் விழுந்து, முளைத்து, இலைகளின் உட்புகுந்து நோயை உண்டாக்குகின்றன. இதனல் இந்நோயைக் கட்டுப்படுத்த இரு வழிகளில் பாதுகாப்பு முறைகளைக் கையாளவேண்டும்.



'' தமிழ்மொழி பரவியுள்ளது— தமிழர்கள் உலகெங்கும் சென்றுள்ளார்கள். ஆனல், தமிழ் மொழி—உதாரணமாக மொரீஷியஸ் தீவில் மறைந்து வருகிறது. இன்னும் வேறு சில நாடுகளிலுள்ள தமிழர்களும், தம் தாய் மொழியை மறந்துவிடக் கூடிய அபாயத்திலுள்ளனர். இந்த மாதிரியான நிலைமை தொடர்ந்து நிலவ அனுமதிக்கப்படக் கூடாது. தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளிலெல்லாம், தமிழைக் கற்பதற்கான வாய்ப்பும் தமிழனேடு தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொள்வதற்கான வாய்ப்பும் வகை செய்யப்படவேண்டும் ''.

### நோய்த் தடுப்பு முறைகள்

பாக்டீரியல் பிளைட் (Bacterial blight) நோய்க்குக் கையாளப்படும் '' சுடுநீர் சிகிச்சை முறை'' (Hot water treatment) இந்த நோயையும் கட்டுப்படுத்த வல்லது. 54 முதல் 55 டிகிரி சென்டிகிரேடு வெப்பநிலையுள்ள நீரில் 20 முதல் 30 நிமிடங்கள் வரை விதைகளை மூழ்க வைத்துப் பின் நீரை வடித்து, நன்ருக உலர்த்தி, விதைக்கு உபயோகிப்பதன் மூலம் இந்நோயை விதைகள் மூலமாகப் பரவுவதினின்றும் தடுக்கலாம். சுடுநீர் சிகிச்சையின் மூலம் விதைகளின் உள்ளும், புறமும் தொற்றியுள்ள பூசனத்தை இலகுவில் கொல்ல ஏதுவாகிறது. இம்முறையைக் கையாள்வதில் தனிக்கவனம் செலுத்தப்படவேண்டும். இம்முறையைக் கவனத்துடன் மேற்குறிப்பிட்டவாறு செய்தால் விதைகளின் முளைப்புத்தன்மை (Germination) பாதிக்கப்படுவதில்லை.

மேற்கூறிய தடுப்பு முறையைத் தவிர இரசாயனப் பூசன மருந்து



போன்ற பாதரச மருந்துகளை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து வீதம் நன்றாகக் கலந்து விதைக்கலாம். பாதரச மருந்துகள் நச்சுத் தன்மை மிகுந்தவை. எனவே நச்சுத்தன்மை குறைவான, டி.எம்.டி.டி. திராம் போன்றவற்றை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து வீதம் கலந்து விதைப்பதன் மூலமும் இந்நோய் விதைகள் மூலம் பரவுவதினின்றும் தடுக்கப்படுகிறது. மேற்கூறிய முறைகளுக்கு விதைத் தொற்று நீக்குதல் என்று பெயர் (Seed disinfection).

நெற்பயிரின் இலைகளிலும், கதிரிலும் இந்நோய் தோன்றாமல் தடுக்க, தக்க சமயத்தில், நோய் தோன்றுமுன் மருந்து தெளிப்பது மிகவும் அவசியம். பயிரின் இளம் பருவத்தில் இந்நோய் அவ்வளவாகக் கடுமையானதாக இருக்காது. பயிர் நன்றாக வளர ஆரம்பிக்கும் பருவத்திலும் இலைப் பருவத்திலும் கடுமையாக இருக்கும். சாதாரணமாக வெளிவெப்பநிலை 25 முதல் 30 டிகிரி சென்டிகிரேடாக இருக்கும் பொழுது இந்நோய் அதிகமாகக் காணப்படும். நடவு நட்டு ஒரு மாதத்திற்குப் பிறகு ஆரம்பித்து மூன்று வாரங்களுக்கு ஒரு முறை மொத்தம் மூன்று அல்லது நான்கு முறைகள் மருந்து தெளிக்க வேண்டும். டைதயோ கார்பனேட்டுகளான ஜினெப் (zineb) ஜிராம் (ziram) போன்றவைகளை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் மருந்து வீதமும் குமான் மருந்தை 1 லிட்டருக்கு 1 கிராம் வீதமும் கலந்து தெளிப்பதன் மூலம் இந்நோயைத் தடுக்கலாம்.

எனவே, உழவர் பெருமக்கள் ஐ.ஆர். 8 நெல்லுக்கு உழவு, உரம், பூச்சித்தடுப்பு போன்ற முக்கியக் கட்டுக்கோப்புச் சாகுபடிமுறைகளை அனுசரிப்பதோடு, செம்புள்ளி நோயினின்றும் பயிரைப் பாதுகாத்துச் சிறந்த பலனையடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


**உங்கள் சேமிப்பு ஐ.ஓ.பி.யில் பேணி பாதுகாக்கப்படுகிறது**



IOB-5940

ஒரு தாய் தன்னுடைய மகளைப் பற்றி எவ்வளவு பெருமிதமும் களிப்பும் கொண்டு கனிவுடன் பேணி வளர்க்கிறாளோ அதுபோல் ஐ.ஓ.பி. உங்களின் சேமிப்பை உங்களுக்குத் தேவைப்படும் காலம் வரை பாதுகாத்து வருகிறது. கூடவே வட்டியும் அளித்து உங்களின் சேமிப்பைப் பெருக்குகிறது. இச்செயலை ஐ.ஓ.பி. பெருமைக்கு உகந்ததாகக் கருதி கடமையுணர்வுடன் செயலாற்றுகிறது.

ஐ.ஓ.பி. பலதரப்பட்ட சேமிப்பு வசதிகளை உங்கள் ஒவ்வொருவரின் தேவைகளுக்கேற்ப அளிக்கிறது. அவற்றுள் சில: (1) சேமிப்புக் கணக்கு (2) சிறுவர்கள் சேமிப்புக் கணக்கு (3) தொடர்முறை காப்புத் தொகை (4) தவணை வைப்பும், குறுகியகால வைப்புத் தொகை

சேமிப்பின் வட்டிக்குச் சலுகையும் அளிக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு உங்கள் சேமிப்பின் மீது சேர்க்கப்படுகிற வட்டி ரூபாய் மூவாயிரம் வரைக்கும் வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. தவிரவும் மொத்த சேமிப்பு ஒன்றரை லட்ச ரூபாய் வரையிலும் செல்வ வரியிலிருந்தும் விலக்கு அளிக்கப்படுகிறது.

இதுவே நல்ல தருணம் சேமிப்புக்கு—
உங்கள் சேமிப்பு ஐ.ஓ.பி.யில்
நாளொரு வண்ணமாகப் பெருகட்டும்—

**இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்**
மத்திய அலுவலகம்: 151 மவுண்ட் ரோடு, சென்னை-2




## கிராமப் புறங்களுக்கு மின்வசதி அளிப்பதில்

இந்தியாவிலேயே, கேரளம் தவிர, மற்ற எல்லா மாநிலங்களையும் தமிழகம் விஞ்சிவிட்டது.

தமிழகத்தில்
31-3-66-ல் 7,208 கிராமங்கள் மின்வசதிபெற்றன
31-3-70-ல் 10,116 (71·8 சதவீதம்) கிராமங்கள் மின்வசதி பெற்றுவிட்டன.

### கிணறுகளுக்கு மின்வசதி பொருத்தப் பட்ட விசையேற்றங்கள்

31-3-1970-ல்
இந்தியாவில் மொத்தம் 11,57,468
இதில் தமிழகம் மட்டும் 4,70,903
இது நாட்டின் மொத்த எண்ணிக்கையில் 40 சதவிகிதத்துக்கு மேலாகும்.

தமிழகத்தில் உள்ள 3 கோடியே 93 இலட்சம் மக்களில் 70 சத விகிதத்தினர் கிராமங்களில் வசிக்கின்றனர். நாட்டின் அடித்தளம் கிராமங்களே. கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது இன்றியமையாப் பணிகளில் ஒன்றாகும். எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி, எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி அளிப்பதை இலட்சியமாகக் கொண்டு செயல்படுகிறது தமிழக அரசு. 1971 டிசம்பருக்குள் தமிழ்நாட்டில் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி, மின் வசதி அளிக்கப்படல் வேண்டும் என்பது அரசின் இலட்சியம்.

### அமைதியான புரட்சி

அமைதியான புரட்சி ஒன்று நாட்டில் இன்று நடைபெற்று வருகிறது. கிராமங்கள் மறுமலர்ச்சி பெற்று வருகின்றன. தமிழகத்தில் 341 நகரங்களும் 14,124 பெரிய கிராமங்களும், 42,000 குக்கிராமங்களும், கிராமங்களை ஒட்டி 20,200 அரிசனக் குடியிருப்புகளும் உள்ளன.

30—4—70 அன்று உள்ள நிலவரப்படி, தமிழகத்தில் உள்ள எல்லா நகரங்களுக்கும், 10,126 கிராமங்களுக்கும் (71.9 சதவிகிதம்), 25,031 குக்கிராமங்களுக்கும் (59.6 சதவிகிதம்) மின்வசதி அளிக்கப்பட்டு விட்டது.

### முதல் இடம் தமிழகத்திற்கே

கிராமங்களுக்கு மின்வசதி வளர்ப்பதில் தமிழகம் நாட்டின் மற்ற மாநிலங்களையெல்லாம் விஞ்சி விட்டது. கேரளம் தவிர, மற்ற மாநிலங்களை விஞ்சி தமிழகம் இத்துறையில் ஏறுநடைபோட்டு வருகிறது. ஆனால், கேரளத்தில் கிராமங்கள் மிகக் குறைவு. கேரளத்தில் உள்ள 1,573 கிராமங்களில் 1,159 கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கப் பட்டுள்ளது. ஆனால், தமிழகத்தில் உள்ள 14,124 கிராமங்களில் 10,116 கிராமங்கள் மின் வசதி பெற்று விட்டன. ஆகவே, இந்தியாவிலேயே இத்துறையில் தமிழகம் தான் முன்னணியில் நிற்கிறது என்று கூறலாம்.

### பிரமிக்கத்தக்க வளர்ச்சி

கடந்த சில ஆண்டுகளாக இத்துறையில் தமிழகத்தில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் கண்டுள்ள முன்னேற்றம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் இதைத் தெளிவு படுத்துகின்றன:—

| | மின்வசதி செய்யப்பெற்ற கிராமங்கள். (1) | சத விகிதம். (2) |
|---|---|---|
| 1. 31-3-1951-ல் .. | 1,495 | 10.6 |
| 2. 31-3-1956-ல் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலம். | 2,430 | 17.2 |
| 3. 31-3-1961-ல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம். | 5,919 | 42.0 |
| 4. 31-3-1966-ல் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலம். | 7,208 | 51.0 |
| 5. 31-3-1970-ல் .. | 10,116 | 71.8 |

### செங்கை, வடஆர்க்காடு முந்துகின்றன

தமிழகத்தில், செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்களில் இப்பணி முடிவடையும் தறுவாயிலிருப்பது குறிப்பிடத்தக்கது. செங்கற்பட்டு



மாவட்டத்தில் உள்ள 1,440 கிராமங்களில் 1,356 கிராமங்களும் வடஆர்க்காடு மாவட்டத்தில் 1,681 கிராமங்களில் 1,536 கிராமங்களும் மின்வசதி பெற்றுள்ளன (31-3-70 நிலவரப்படி). கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் மாவட்ட வாரியாக நடைபெற்றுள்ள பணியினை விளக்குகின்றன :—

| | மாவட்டம். | கிராமங்கள். | மின்வசதி அளிக்கப் பட்டவை. | சத விகிதம். |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| 1. | செங்கற்பட்டு | 1,440 | 1,356 | 94.0 |
| 2. | கோயமுத்தூர் | 897 | 816 | 91.0 |
| 3. | தர்மபுரி .. | 655 | 373 | 56.9 |
| 4. | கன்யாகுமரி | 46 | 46 | 100.0 |
| 5. | சென்னை .. | இல்லை. | இல்லை. | இல்லை. |
| 6. | மதுரை .. | 875 | 775 | 88.6 |
| 7. | நீலகிரி .. | 37 | 30 | 81.0 |
| 8. | வடஆர்க்காடு | 1,681 | 1,536 | 91.2 |
| 9. | இராமநாதபுரம் | 1,427 | 869 | 60.8 |
| 10. | சேலம் .. | 848 | 621 | 73.2 |
| 11. | தென்ஆர்க்காடு | 2,005 | 1,166 | 58.1 |
| 12. | தஞ்சாவூர் | 1,899 | 954 | 50.2 |
| 13. | திருச்சிராப்பள்ளி | 1,405 | 820 | 58.5 |
| 14. | திருநெல்வேலி | 909 | 754 | 83.0 |
| | மொத்தம் | 14,124 | 10,116 | 71.8 |

கிராமங்களில் மக்கள் தொகைக் கணக்குப்படிப் பார்த்தால், 5,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராமங்களில் 99 சதவிகிதமும் இரண்டாயிரத்துக்கு மேல் ஐயாயிரத்துக்குள் 82·1 சதவிகிதமும் இரண்டாயிரத்துக்குக் கீழே ஆயிரத்துக்கு மேலே 65.5 சதவிகிதமும் என்ற அளவில் கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டது.

மிஞ்சியுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் 1972 ஆரம்பத்திற்குள் மின்வசதி அளித்து விட வேண்டும் என்ற இலட்சியத்தை முன்னிறுத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### நாட்டின் பாதி தமிழகத்தில் மட்டும் !

தமிழ்நாட்டில் உள்ள 9 இலட்சம் நீர்ப்பாசனக் கிணறுகளில் 4,70,903 கிணறுகளுக்கு இது வரையில் (31-3-70) மின்சார விசையேற்றங்கள் பொருத்தப்பட்டு விட்டன. இந்திய நாடு முழுவதற்குமாக 31-3-70 முடிய 11,57,468 விசையேற்றங்களுக்கு மின்சாரம்பொருத்தப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டில் மட்டும் 4,70,903 விசையேற்றங்கள் மின்வசதி பொருத்தப்பட்டுள்ளன. இது நாட்டின் மொத்தத்தில் 40 சதவிகிதத்துக்கும் மேலாகும். கிராமங்களுக்கு மின்வசதி வழங்குதலிலும், கிணறுகளுக்கு மின்வசதி பொருத்தப்படுவதிலும் பாரதத்திலேயே தமிழ் நாடுதான் முதல்

இடத்தினைப் பெற்றுள்ளது. எந்த மாநிலமும் இத் துறையில் தமிழ்நாட்டை மீற முடியாது என்ற நிலை நமக்கெல்லாம் மனநிறைவு அளிக்கக்கூடிய ஒன்றாகும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண் டொன்றுக்கு 3,600 விசையேற்றங்களுக்குத்தான் மின்சாரம் பொருத்தப்பட்டது. ஆனால் 1967-70-ல் மட்டும் சுமார் 50,000 விசையேற்றங்கள் மின்சாரம் பொருத்தப்பட்டு விட்டன.

### பத்தாண்டு கூறும் உண்மை

கடந்த பத்தாண்டுகளில் இத்துறையில் கண் டுள்ள முன்னேற்றம் கீழே காணலாம்:—

| ஆண்டு. (1) | | மின்சாரம் பொருத்தப் பட்ட விசையேற்றங் களின் எண்ணிக்கை. (2) | ஆண்டு இறுதியில் மொத்தம் விசை யேற்றங்கள். (3) |
|---|---|---|---|
| 1959-60 | .. | 19,172 | 97,476 |
| 1960-61 | .. | 19,012 | 1,17,695 |
| 1961-62 | .. | 23,438 | 1,40,601 |
| 1962-63 | .. | 26,086 | 1,65,561 |
| 1963-64 | .. | 24,465 | 1,92,424 |
| 1964-65 | .. | 33,862 | 2,25,192 |
| 1965-66 | .. | 31,654 | 2,56,594 |
| 1966-67 | .. | 34,993 | 2,89,903 |
| 1967-68 | .. | 54,412 | 3,44,483 |
| 1968-69 | .. | 59,724 | 4,10,119 |
| 1969-70 | .. | 60,784 | 4,70,903 |

கடந்த மூன்றாண்டுகளில் கிணறுகளுக்கான விசை யேற்றங்களுக்கு மின்சாரம் பொருத்துவதில் பாராட்டத்தக்க முன்னேற்றத்தினைத் தமிழகம் கண்டுள்ளது.

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சைத் தரணியில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற் காக விரைவுத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப் பட்டது. 31-3-70 வரை 2,758 வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கு மின்சார வசதி பொருத்தப் பட்டது. நான்காவது திட்டக் காலத்தில் சுமார் 7,500 வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கு மின் சாரம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### அரிசன மக்களின் நல் வாழ்வுக்காக . . .

இத்துடன் இப்பணி நின்று விடவில்லை. அரிசன மக்களின் வாழ்விலே ஒளிமிகுந்த எதிர்காலத்தினை உருவாக்கவும் பணிகள் ஆற்றப்பட்டு வருகின்றன. கிராமங்களைச் சுற்றியுள்ள அரிசனக் குடியிருப்பு களுக்கு மின்சாரம் வழங்குவதில் தமிழக அரசும், தமிழக மின் வாரியமும் தனி அக்கறையுடன் செய லாற்றி வருகின்றன. 1957-58-லிருந்து அரிசனக் குடி யிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கத் தமிழக அரசு சிறப்பு உதவித்தொகை ஆண்டுதோறும் அளித்து வந்துள்ளது. 1970-71 முடிய 4,300 அரிசனக் குடி யிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.



1957-58-லிருந்து புள்ளி விவரங்கள் இதோ :—

| ஆண்டு. | மின்சாரம் வழங்கப்பட்ட அரிசனக் குடியிருப்புகளின் எண்ணிக்கை. | செலவு செய்யப் பட்ட உதவித் தொகை. (ரூ. இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1957-58 | 90 | 1.50 |
| 1958-59 | 110 | 2.00 |
| 1959-60 | 144 | 1.50 |
| 1960-61 | 173 | 1.50 |
| 1961-62 | 235 | 1.50 |
| 1962-63 | 228 | 2.04 |
| 1963-64 | 276 | 1.50 |
| 1964-65 | 300 | 1.61 |
| 1965-66 | 370 | 3.07 |
| 1966-67 | 436 | 3.02 |
| 1967-68 | 448 | 4.84 |
| 1968-69 | 480 | 5.55 |
| 1969-70 | 1,100 | 9.14 |

1969-70-ல் மட்டும் அரிசனக் குடியிருப்புகளில் மின்சாரம் வழங்கத் தமிழக அரசு ரூ. 9·14 இலட்சம் உதவித்தொகை அளித்துள்ளதிலிருந்தே, தமிழக அரசு ஏழை, எளிய, பாட்டாளி மக்களின் நல்வாழ்விலே அக்கறை கொண்டுள்ள அரசு என்று அறுதியிட்டுக் கூற முடியும். கடந்த மூன்றாண்டுகளில் முந்தைய ஆண்டுகளை விட, இத்தொகை பெருகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

31-3-1969 வரை தமிழகத்தில் 31,727 கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 22,700-க்குத்தான் தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளன. மற்றவற்றில் விசையேற்றங்களுக்குத்தான் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. தெரு விளக்குகளோ, விசையேற்றங்களோ இல்லாத கிராமங்கள் - குக்கிராமங்கள் 25,345. மிச்சமுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் இரண்டாண்டுக்குள் தெரு விளக்குகள் போடப்பட வேண்டும் என்ற சிறப்புத் திட்டம் ஒன்றினை மாண்புமிகு முதல்வர் துவக்கி வைத்தார். இதற்காக ஆகும் செலவு ரூ. 44 கோடியாக இருக்கும். இப்பணி பிரம்மாண்டமான பணியாகும். சிறப்பான முறையில் இப்பணி நடைபெற்று வருகிறது. 1969-70-ல் 3,728 கிராமங்களுக்குத் தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளன. இந்தப் பணி 1972-73-க்குள் முழுமையாக முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இப்படி எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி அளிப்பதால் நிதி ஆதாயம் ஒன்றும் இல்லை இருந்தாலும் இது செய்து முடிக்கப்பட வேண்டிய ஒன்று. மக்களின் நன்மைதான் தலையாயது. அதை நிறைவேற்றுவதுதான் முக்கியக் கடமை என்ற உணர்வுடன் மக்கள் அரசு பாடுபடுகிறது. தமிழகத்தின் மூலை முடுக்குகளிளெல்லாம் மின்சாரத்தைக்கொண்டு சென்று, வேளாண்மை பெருக, நாட்டிலே பசுமைப் புரட்சிகாண, மக்கள் நல்வாழ்வு வாழ, அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரப் பாடுபடுவதெனத் தமிழக அரசு உறுதி கொண்டுள்ளது.



ஏழை எளிய மக்களின் வாழ்வில் வளம் காணவேண்டும். அவர்களிடையே உள்ள இருள் அகற்றப்பட வேண்டும். பாமரமக்களின் வாழ்விலே ஒளிமயமான எதிர்காலம் அமைக்க வேண்டும். ஏழையின் சிரிப்பில்தானே இறைவன் இருக்கின்றான். அந்த இலட்சியப் பயணத்திலே தமிழ்நாடு மின் வாரியமும் தன் பங்கினைச் செம்மையுறச் செய்து வருகிறது !



# சிறுவர்க்கோர் அரங்கம்

"எனது வேலூர் சுற்றுப்பயணத்தின்போது இந்தச் சிறுவர் அரங்கத்திற்கு வருகை புரிவதற்கு வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த அரங்கம் சிறுவர்களுக்குத் திரைப்படங்களைக் காண்பிப்பதன் வாயிலாக ஒரு நல்ல பணியைச் செய்து வருகிறது. கல்வி நிலையங்களுக்குச் சமமான பெருமை இந்த அரங்கத்திற்கு உண்டு. இதுபோன்ற நல்ல பணியில் ஈடுபட்டுவரும் தமிழக அரசின் முயற்சிகள் அனைத்தும் எப்போதும் வெற்றிபெற வாழ்த்துகிறேன்.''

வேலூரில் அமைந்துள்ள சிறுவர் அரங்கத்திற்கு இவ்வாறு வாழ்த்துரை தந்திருக்கிறார் மாண்புமிகு இந்தியக் குடியரசின் தலைவர் வி. வி. கிரி அவர்கள். அன்னாரின் வேலூர்ச் சுற்றுப் பயணத்தின்போது, அவருக்காகவே சில தனிக் காட்சிகள் சிறுவர் அரங்கத்தில் காட்டப்பட்டன. அவற்றைப் பார்த்து அகமகிழ்ந்த குடியரசுத் தலைவர் அவர்கள்—சிறுவர் அரங்கத்திலுள்ள பார்வையாளர் புத்தகத்தில்தான் மேலே சொல்லியுள்ள வாசகங்களை 1970 மே 10-ம் நாளன்று தமது மணிக்கரத்தினால் பொறித்திருக்கிறார்.

குடியரசுத் தலைவரின் வாழ்த்துதலுக்கு இடமான இந்த அரங்கம், நமது பெருமதிப்பிற்குரிய—பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின் உருவாகியது. "அண்ணா கலை அரங்கம்" என்றே பெயரிடப்பட்டுள்ளது. கடந்த ஓராண்டாக இந்த அரங்கம், வேலூர் நகரத்திலும், அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள சிறுவர்களின் இதயங்களைக் கவர்ந்து வருகிறது. இந்தப் பகுதியில் ''நாடகம் நடத்துவதற்குச் சரியான அரங்கம் இல்லையே'' என்று நீண்ட காலமாக இருந்துவந்த ஏக்கத்தையும் இந்த அரங்கம் நீக்கிவருகிறது. தற்போது வாரந் தவறாமல் பல நிகழ்ச்சிகளும் அடிக்கடி நாடகங்களும் இந்த அரங்கத்தில் நடைபெறுகின்றன. நகரத்தின் நடுப்பகுதியில் அமைந்திருப்பதால் அநேக வசதிகள் இயற்கையாகவே இந்த அரங்கத்திற்குக் கிடைத்திருக்கின்றன; குறிப்பாகப் பேருந்துவசதி கிடைத்திருக்கிறது. மக்கள் அனைவரும் எளிதில் வருவதற்குரிய வகையில் நகரத்திற்கு அண்மையில் அமைந்திருக்கிறது. சென்னையிலுள்ள சிறுவர் அரங்கத்தைப் போலவே இங்கேயும் மாதத்தின் எல்லா நாட்களிலும் திரைப்படக் காட்சிகள் நடைபெறுகின்றன.

சென்னையிலுள்ள சிறுவர் அரங்கம், வருகின்ற செப்டம்பர் மாதம் தனது பன்னிரண்டாவது ஆண்டினை நிறைவு செய்கிறது. அண்மையில் சில புதிய வசதிகளை இந்த அரங்கம் பெற்றிருக்கிறது. இதுவரை சாதாரண 35 மில்லி மீட்டர் படங்கள் மட்டுமே திரையிடப்பட்டுவந்தன. தற்போது சினிமாஸ்கோப் படங்களைத் திரையிடுவதற்குரிய வசதிகள் ஏற்பட்டுள்ளன. இந்த ஆண்டு மே மாதம் முதல் இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதன் காரணமாகச் சிறுவர்களுக்குத் தகுதியான விதவிதமான சினிமாஸ்கோப் படங்கள் திரையிடப்படுகின்றன.

சென்னை-வேலூர் இந்த இரு நகரங்களிலும் உள்ள சிறுவர் அரங்கங்கள்—இந்தியத் துணைக் கண்டத்திலேயே புகழ்பெற்று விளங்குகின்றன. ஏனென்றால் இந்த இரண்டு அரங்கங்கள்தான் இந்தியாவிலேயே ஒரு மாநில அரசினரால் வெற்றிகரமாக நடத்தப்படும் நிலையங்களாகும். இந்த வகையில், தமிழக அரசு இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள ஏனைய மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகஅமைந்திருக்கிறது. இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது போலச் சிறுவர்களின் கல்வித் துறையில் திரைப்படங்கள் உன்னதமான இடம் பெறுகின்றன—அவர்களின் கல்வித் திறமையை வளர்க்கின்றன. இந்த அரங்கத்தையும் பம்பாய் சண்முகானந்தா அரங்கினைப் போல மாற்றுவதற்கு நமது மாநில அரசு திட்டம் வைத்துள்ளது.

# உதகைக்குப் புதிய மகுடம்

உதகை-தமிழகத்தின் பூஞ்சோலை-கோடையிலே குளிர்தரும் குன்றம்-வானுயர்ந்த யூகாலிப்டஸ் மரங்களும், செல்வம் கொழிக்கும் தேயிலைத் தோட்டங்களும் நிறைந்துள்ள இடம் இவ்வாறு உதகமண்டலத்தின் சிறப்புக்கள் பற்பல.

புகழ் மிக்க இந்த உதகையின் புகழுக்கு, மேலும் அணிசெய்வது போல் அமைந்துள்ளது, இவ்வாண்டு அங்கு புதிதாக நிறுவப்பட்ட வானொலித் தொலை நோக்கி (ரேடியோ டெலஸ்கோப்). உலகிலே உள்ள மிகவும் சக்தி வாய்ந்த தொலை நோக்கிகளில் இதுவும் ஒன்று. இந்தத் தொலை நோக்கி மூலம், விண்வெளி ஆராய்ச்சியாளர்கள், அண்ட வெளியின் எல்லையினையே ஆய்வு செய்திட முடியும். அறிவியல் துறையில், இது பெரும் வாய்ப்பாக அமையும்.

நமது நாட்டிலுள்ள இளம் விஞ்ஞானிகளுக்குப் பயிற்சியளிக்க, இது குறிப்பிடத்தக்க பல நன்மைகளை வழங்கும்.

### குறைந்த செலவு! அதிக சக்தி !!

பொதுவாக, ஆடிகள் துணை கொண்டு இயங்கும் தொலை நோக்கிகள் மூலம் ஆய்வு செய்யும் விண்வெளி ஆய்வாளர்கள் ஒளி அலைகளையே தங்களது ஆய்வுக்குப் பயன் படுத்துவர். ஆனால் வானொலித் தொலை நோக்கியில் வானொலி அலைகள் பயன்படுத்தப் படுகின்றன. எனவே உதகையிலுள்ள வானொலித் தொலை நோக்கி இந்திய விஞ்ஞானிகளுக்கு ஒரு புதிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளது.

இந்தியத் துணைக் கண்டம், பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ளதைப் பயன்படுத்திடும் வகையில் தனி அமைப்புடன் உதகை வானொலித் தொலை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு, குறைந்த செலவில் அதிக சக்தியைச் சேகரிக்கும்; தேவையானமுறையில் இயங்கும்.

இந்தத் தொலை நோக்கியில், ஒலியைப் பிரதிபலிக்கும் மேல் பாகம், 530 மீட்டர் நீளமும், 30 மீட்டர் அகலமும்கொண்டது. இங்கிலாந்து நாட்டிலே, ஜோட்ரெல் பாங்க் என்ற இடத்திலுள்ள 76.2 மீட்டர் வட்டத்தைவிட இது நான்கு மடங்கு பெரியது என்பது குறிப்பிடத் தக்கது.



### எத்திசையிலும் இயங்கும்

உதகையிலுள்ள இந்தத்தொலை நோக்கி புதிய அமைப்புக்கொண்டது. இதில் ஒலி சேகரிக்கும் பகுதி மிகவும் அதிகம். உலகின் வேறு சில பகுதிகளில் இத்தகைய தொலை நோக்கிகள் அமைக்கப் பட்டுள்ளன. ஆனால் அவற்றைக் கிழ-மேல் திசையில் இயக்க முடியாது. எனவே வானொலி அலைகளின் பிறப்பிடங்களைக் (Radio sources) கண்டு பிடிக்கவோ அல்லது பின் தொடரவோ, ஒரு சில வினாடிகளுக்குமேல் அவற்றைப் பயன்படுத்த முடியாது.

ஆனால் உதகையிலுள்ள இந்த வானொலித் தொலை நோக்கியின் அச்சு, புவியின் அச்சு சுழல்வதற்கு நேர்கோட்டில் வைக்கப் பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டின் மூலம், வானொலிப் பிறப்பிடங்களை கிழ-மேல் திசை வாக்கில் நாளொன்றுக்கு $9\frac{1}{2}$ மணி நேரம் தொடரமுடியும். அதற்கேற்றவாறு சுழலும்படி அதன் நீளமான அச்சு அமைந்துள்ளது.

வானொலித் தொலைநோக்கியின் கதிரினை அல்லது அது பார்க்கும் திசையினை, அதன் விநியோகக் கம்பிகளை, மாற்றி இணைப்பதன் மூலம், தென்-வடலாகவும் திருப்பமுடியும். எனவே இதனைக் கிழ-மேலாகவும், தென்-வடலாகவும் இயக்க முடிகிறது.

இந்தத் தொலை நோக்கி 11 டிகிரி சாய்வுள்ள மலையின் மீது

அமைக்கப்பட்டுள்ளது. இந்த சாய்வுப் பகுதியில் சமதூரமுள்ள 24 உயர்ந்த இரும்புக்கோபுரங்கள் உள்ளன. அதன் மீது புனலின் குறுக்கு வெட்டுப் போன்றுள்ள சட்டங்கள் (frames) ஏற்றப்பட்டுள்ளன. இவை 530 மீட்டர் நீளமுள்ள 1100 இரும்புக் கம்பிகளினால் (Stainless Steel wires) இணைக்கப் பட்டுள்ளன. இந்த இரும்புக் கம்பிகள்தான் வானொலியைப் பிரதிபலிக்கும் பாகமாக அமைகின்றன. இதில் வந்து மோதும் வானொலி அலைகள், தொலைநோக்கியில் வைக்கப்பட்டுள்ள 968 வானொலிச்செய்தி பரப்பும் கருவிகளில் பிரதிபலிக்கப்படுகின்றன. அங்கிருந்து அவை பல் கதிர் வாங்கிக்குச் (Multi beam receiver) செல்கின்றன.

உதகையில் உள்ள இந்த வானொலித் தொலைநோக்கிமூலம், மிகத் தொலைவிலுள்ள வானொலி மண்டலங்களை ஆய்வு செய்யத் தக்க வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

சந்திரன் வானவெளியில் சுற்றும்போது, அதனது கூர்மையான எல்லை, மிகத் தொலை தூரத்திலிருந்து வரும் வானொலி அலைகளை மறைக்கிறது. வானொலிப் பிறப்பிடத்தின் ஒரு குறுகிய பகுதி உடனே சந்திரனின் பின்புறத்தில் மறைந்து விடுகிறது. எஞ்சிய பெரிய பகுதி மெள்ள மெள்ள மறைகிறது. சந்திரன் நகர்ந்தவுடன், மீண்டும் இந்தப் பகுதி வெளி வருகிறது. இதனைப்பதிவு செய்வதன் மூலம், வானொலியின் பிறப்பிடத்தை மிகவும் துல்லியமாகக் கணக்கிடவும், பிறப்பிடத்தின் அமைப்பைப் பற்றியதகவலை அறியவும் முடிகிறது.

இந்தத் தொழில் நுணுக்க முறை மிகவும் சக்தி வாய்ந்தது. நன்கு இயக்கப்படக்கூடிய மிகப் பெரிய வானொலித் தொலைநோக்கி உலகின் எந்தப்பகுதியிலும் இல்லாததால், இந்த முறை இதுவரை முழுக்கப் பயன்படுத்தப்படவில்லை.

உதகையில் இந்தத் தொலைநோக்கி அமைக்கப்பட்ட 14 நாட்களுக்குள் 16 வானொலிப் பிறப்பிடங்கள் பார்வையிடப்பட்டன. அவற்றில் 11, ஏற்கனவே மற்ற வானவெளி ஆய்வுக்கூடங்களினால் பதிவுசெய்யப்பட்டவை. ஆனால் அங்கு அவைகளைப்பற்றிய விரிவான குறிப்புகள் கிடையா. மீதி 5, உதகைத் தொலைநோக்கியால் முதல் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டவை.

உதகையிலுள்ள இந்தத் தொலைநோக்கி, ஆண்டுக்குப் பல நூற்றுக்கணக்கான வானொலிப் பிறப்பிடங்களைக் கவனிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இவை அமெரிக்காவில், பாலோமார் மலை வானிலை ஆய்வுக் கூடத்திலுள்ள 48அங்குலத் தொலைநோக்கியினால் எடுக்கப்பட்ட புகைப்படங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்படும். கொடைக்கானல், நைனிட்டால், ரெங்காப்பூர் ஆகிய இடங்களிலுள்ள தொலை நோக்கிகள் மூலமும் இவை ஆய்வு செய்யப்படும்.

சூரியன், மற்றும் மிகவும் ஒளிமயமான கோளங்களிலிருந்து வெளிவரும் வானொலி அலைகளை ஆய்வு செய்யவும் இந்தத் தொலைநோக்கி பயன்படும்.

வானொலிப் பிறப்பிடங்களின் துடிப்புகள் பற்றி விரிவாகப்படிக்கவும் ஒரு பெரும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. பத்துலட்சத்தில் ஒரு பங்கு நேரத்தில் இவை வானொலித் துடிப்புகளை வெளியிடுகின்றன. இது வரை இத்தகு துடிப்புகள் 50 ஐ வான வெளி நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதுவும் சில வினாடிகள் அளவே. பூமியை விடப் பல கோடிக்கணக்கான அளவு பெரிதான நட்சத்திரங்கள் தான் இத்தகைய வானொலித் துடிப்புகளை அனுப்புமென்று நம்பப்படுகிறது. இவற்றைக்கண்டுபிடிக்க நமது உதகைத் தொலைநோக்கி பெரிதும் உதவும்.





# உங்கள் அரிசி கண்டுமுதலை அறுவடைக்குப் பிறகும் அதிகரிக்கமுடியும் அதற்கு உதவுகிறது

# பின்னி-ஸதாகே

## நவீன நெல் அரைவை ஆலை

ஜப்பானிய ஸதாகே என்ஜினியரிங் கம்பெனி ஒத்துழைப்புடன் பின்னி லிமிடெட் என்ஜினியரிங் டிவிஷன் இந்த இயந்திரங்களை தயாரிக்கிறது. அவை மணிக்கு 1 முதல் 4 டன்கள் வரை அரைக்கும் ஆற்றல் உள்ளவை.

### பின்னி-ஸதாகே அரைவை ஆலைகள் சாதனை

புழுங்காத நெல் — மொத்த அரைவையில் சராசரி அதிகரிப்பு 5%-முழுமையான அரிசி அதிகரிப்பு 10%

புழுங்கல் நெல் — மொத்த அரைவையில் சராசரி அதிகரிப்பு 1%-முழுமையான அரிசி அதிகரிப்பு 3%/

இதன் இன்னொரு சிறப்பு-பின்னி-ஸதாகே நொய் அளவை குறையச்செய்கிறது. இந்த நவீன ஆலைகளுக்கு அரைவையை மாற்றிக் கொள்வதன் மூலம் அரிசி கண்டு முதல் 15 லட்சம் டன்கள் அதிகரிக்க முடியும். இது ஆண்டு ஒன்றுக்கு 83 லட்சம் மக்களுக்கு உணவு அளிக்கப்போதுமானது. இதனால் ரூ 120 கோடி மீதமாகும்!

### பின்னி-ஸதாகேயின் 4 சிறப்புகள்

1. சாதாரண நெல் அரைவை ஆலைகளைவிட உங்களுக்கு அதிக ஆதாயம் கிடைக்கிறது.
2. குறைந்த அளவு நொய்யும், அதிக அளவு முழுமையான அரிசியும் கிடைக்கிறது.
3. தவிடை நன்ருகப்போக்குகிறது. நல்ல விதமாக தவிட்டு எண்ணெய் எடுக்க உதவுகிறது.
4. பராமரிப்பில் சிக்கனம், இயக்க எளிது. தொடர்ந்து நாள் ஒன்றுக்கு 24 மணிநேரம் ஓடக்கூடியது.



முழுவிவரங்களுக்கு: பின்னி லிமிடெட், என்ஜினியரிங் டிவிஷன்,
சென்னை தொழிற்கூடம்• தபால் பெட்டி எண் 1111, மீனம்பாக்கம், சென்னை-16




''புதிதாகக் கண்டு பிடிக்கப்படும் நட்சத்திரத்தைவிடப் புதிதாகக் கண்டு பிடிக்கப்படும் உணவு மக்கள் சமூகத்திற்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுக்கும்''—என்பது பிரெஞ்சு நாட்டுப் பழமொழியாகும்.

புதிய சமையல் முறைகள் மக்களிடையே பெற்றுள்ள செல்வாக்கைத்தான் இந்தப்பழமொழி நமக்கு உணர்த்துகிறது.

பிஷர் என்பவர் குறிப்பிடுகிறார், ''சாதாரணமாக ஒருவர் தம்து இருபதாவது வயது முதல் ஐம்பதாவது வயது வரை இந்த முப்பதாண்டுக் காலத்தில் தாம் மென்று விழுங்கி உண்பதற்குச் செலவிடும் நேரம் சுமார் இருபதாயிரம் மணி. அதாவது இருபத்தெட்டு மாதம் இரவும் பகலும் தொடர்ந்து உண்ணும் நேரம்''—என்று.

இப்படி நீண்ட நேரத்தை எடுத்துக் கொடுக்கும் 'உணவு தயாரிக்கும் முறையில்' பழங் காலத்திலிருந்து எவ்வளவோ மாறுதல்கள் உருவாகி வந்துள்ளன.

### முதல் சமையல் கலை நூல்

உலகத்திலேயே சமையல் கலை பற்றிய முதலாவது புத்தகம் சுமார் 4700 ஆண்டுகளுக்கு முன் சீனாவில் வெளியாகியது என்று கூறுகிறார்கள். அந்தச் சமையல் கலைநூலின் பெயர் 'ஹோன்சோ'. அதனை எழுதியவர் 'ஷென்னாங்' என்னும் சீனச்சக்கரவர்த்தி.

அந்நாள்தொட்டு இதுவரை உலகின் பல பாகங்களிலும் சமையல் கலை நூல்கள் ஆயிரக் கணக்கில் வந்துள்ளன. 'நாகரிக உணவுகள்' என்ற பெயரில் எல்லா மக்களும் பயன்படுத்த முடியாத முறையில் அதிகமாகச் செலவு செய்யும் வகையில் பல புதிய உணவு முறைகள் குறிப்பிடப்படுகின்றன. ஆனால், இங்கு ஏழை எளிய மக்களும் பயன்படுத்தக்கூடிய சத்துணவுகளைப் பற்றிய குறிப்புகளைக் காண்போம்.

### கேழ்வரகு ரொட்டி

தேவையான பொருள்கள்.

கேழ்வரகு மாவு= 4 கோப்பை

உப்பு = $1\frac{1}{2}$ தேக்கரண்டி

வனஸ்பதி = 1 மேஜைக் கரண்டி

செய்முறை: உப்பு, வனஸ்பதி, வெந்நீர் ஆகியவற்றை கேழ்வரகு மாவில் விட்டுப் பிசையவும்; இதில் ஒரு பகுதியை எடுத்து வாழை இலையில் சிறிது எண்ணெய் தடவி மாவை அதில் பரவலாகத் தட்டவும். தோசைக் கல்லை அடுப்பில் வைத்துப் பரவலாகத் தட்டிய ரொட்டியை அதில் இட்டு வேக வைக்கவும். ஒரு புறம் வெந்த



வுடன் மறுபுறமும் திருப்பி வேக வைத்து எடுக்கவும்.

### கேழ்வரகு லீப் கேக்

தேவையான பொருள்கள்.
கேழ்வரகு மாவு = 200 கிராம்.
வெல்லம் = 80 கிராம்.
தேங்காய்த் துருவல் = 80 கிராம்.
உப்பு = ருசிக்கத்தக்க அளவு.
கொதி நீர் = 1 கப்.

செய்முறை: ராகி மாவில் உப்புக்கலந்து மிருதுவான தண்ணீர் கலந்து மாவாகத் தயார் செய்து கொள்ளவும். 10 அங்குல சதுரமுள்ள வாழை இலையை எடுத்துக் கொள்ளவும்; 25 கிராம் அளவுள்ள மாவை எடுத்து இலையில் வைத்துத் தட்டவும். ஒரு மேஜைக் கரண்டி வெல்லப்பொடி தேங்காய்த் துருவல் கலவையை அதில் வைக்கவும். பிறகு இலையை மடித்து, இட்லிப் பாத்திரத்தில் வைத்து 20 நிமிடங்கள் வேக வைக்கவும்.

### மரவள்ளிக் கிழங்கு உப்புமா

தேவையான பொருள்கள்.

| | |
|---|---|
| மரவள்ளிக் கிழங்கு மாவு | = 115 கிராம். |
| உப்பு | = 5 கிராம். |
| வனஸ்பதி | = 15 கிராம். |
| கடலைப் பருப்பு | = 5 கிராம். |
| உளுத்தம் பருப்பு | = 5 கிராம். |
| கடுகு | = கொஞ்சம். |
| வெங்காயம் | = 15 கிராம். |
| பச்சை மிளகாய் | = 5 கிராம். |
| இஞ்சி | = 5 கிராம். |
| கறிவேப்பிலை | = கொஞ்சம். |
| தண்ணீர் | = 55 மிலி. |

செய்முறை: பச்சை மிளகாய், வெங்காயம், இஞ்சியை நறுக்கி வைத்துக் கொள்ளவும், வனஸ்பதியில் பாதியை அடுப்பில் வைக்கவும். மரவள்ளிக் கிழங்கு மாவை வறுக்கவும். மீதி வனஸ்பதியை ஊற்றிக் கொள்ளவும். திரவியங்களையும், வெங்காயத்தையும் கொதிக்க விடவும். உப்பையும் வறுத்த மாவையும் சேர்க்கவும். நன்ருகக் கலக்கவும். நன்ருக வேக விடவும்.

—"அஞ்சனு"

## தமிழக அரசு—விவசாயிகள் அரசு

உழுவார் உலகத்தார்க்கு ஆணி. உழவர் பெருமக்களின் நல்வாழ்வே நாட்டின் நல்வாழ்வு. இதை இதய கீதமாகக் கொண்டுள்ள தமிழக அரசு உழவர் பெருங்குடி மக்களுக்கு மின்சாரம் வழங்குவதில் அநேக சலுகைகளை வாரிவாரி வழங்கியுள்ளது :—

...விவசாய விசையேற்றங்களைப் பொறுத்தவரையில், அவைகளை மின்சாரத் தொடர்பு படுத்திக் கொடுக்கும் பணிக்காக, தனியாக் கட்டணம் கிடையாது.

...150 வாட்டுகள் வரை உள்ள மூன்று விளக்குகளை விவசாயப் பணிகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதை எரிப்பதற்காகும் கட்டணம், விவசாயம் செய்ய மின் வசதியினைப் பயன்படுத்துதலுக்கு உள்ள கட்டணம் போலவே நிர்ணயிக்கப்படுகிறது.

...மின்சாரத்தைப் பல முறையில் பயன்படுத்துகின்றனர். விவசாயத்திற்காக மின்சாரம் வழங்க யூனிட்டுக்கு 9 பைசா வசூலிக்கப்படுகிறது. மற்ற வகையில் மின்சாரம் பயன்படுத்துதலை விட, இதற்கான கட்டணம் மிகக் குறைவு.

...விவசாயிகளின் மீது உபரிக் கட்டணம் விதிக்கப்படுவதில்லை.

... கிணறுகள் வறண்டு போனாலோ, தண்ணீர் கிடைக்காமல் தண்ணீரை இறைப்பதற்கு முடியாமல் போகும் காலங்களிலோ குறைந்தபட்சக் கட்டணம் வசூலிப்பதுகூடத் தள்ளி வைக்கப்பட்டு வருகிறது.

... தண்ணீர் இல்லாததனுல் விசையேற்றங்களை எடுத்துவிட்டாலும், இறைவை இயந்திரத்தை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்ருலும் அதற்காக மறுதொடர்பு கொடுப்பதற்கான கட்டணம் ஒன்றும் தனியாக வசூலிக்கப்படுவதில்லை.

...விவசாயிகள் ஒப்பந்தப்படி ஏற்றுக் கொண்டுள்ள அளவைக் கணக்கிடாமல், எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தப்பட்டுள்ளதோ, அதற்கு மட்டும்தான் கட்டணம் விதிக்கப்படுகிறது.

...மின் உற்பத்தி நிலையங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு, மின்வெட்டு ஏற்படுகிற காலங்களிலும், விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் மின்சார அளவு குறைக்கப்படுவதில்லை. அதற்கு வெட்டு கிடையாது.

# குற்றால அருவியிலே குளிப்போம்



சந்தன நிறத்து மாலை வெய்யில், பன்னீர் தெளிப்பது போன்ற சாரலின் தூறல், சலசலவென்று இசையுடன் கெண்டை மீன் போல் துள்ளி விழும் அருவி நீர்.

ஆம். குற்றாலத்தில் 'சீசன்' தொடங்கி விட்டது என்பதற்கு இவைதான் அடையாளங்கள். ஆண்டுதோறும் ஜூன் திங்கள் முதல் செப்டம்பர் திங்கள் வரை நீடிக்கும் இந்த 'சீசன்'.

உடலுக்கும் உள்ளத்திற்கும் இதமான இன்பம் தரும் இந்தக் குற்றால அருவியில் குளிப்பதற்கு வேறு எதுவும் ஈடாக மாட்டாது!

மாதம் ஒரு முறை குளிக்கும் பகுதிகள் உண்டு. வாரத்திற்கு ஒரு முறை தலையை நனைப்பவர்களும் உண்டு. நாளுக்கு இரு முறை குளிக்கிறோம் என்ற பெருமை கேரளக்காரர்களுக்கு இருக்கலாம். ஆனால் நெல்லை மாவட்டத்திலுள்ள இந்தக் குற்றாலத்து அருவியிலே குளிக்க வருபவர்கள் நாளொன்றுக்குக் குறைந்தது நாலு முறையாவது குளிப்பார்கள் என்பது நிச்சயம்!

அதிகாலை 4 மணிக்கே தலையில் அரைக்கீரை அல்லது சந்தனாதித் தைலம் வடிய, இடுப்பில் துண்டுடன், பல் துலக்கிக்கொண்டு அருவியில் தலை கொடுக்கத் தயாராகயிருப்பவர்களைக் காணலாம். உச்சி வெய்யிலில் கூட்டத்தோடு கூட்டமாக முண்டியடித்துக் குளிப்பவர்களும் உண்டு. நள்ளிரவு 12 மணிக்குச் சென்றால், பால்போல் ஒளி வீசும் மின்விளக்கு வெளிச்சத்திலே உள்ளங் குளிர அனுபவித்துக் குளிக்கும் உல்லாசப் பிரியர்களையும் காணலாம்.

இங்கு 'சீசனை' அனுபவிக்க வருபவர்கள் பலதரப்பட்டவர்கள். வடநாட்டிலிருந்து வரும் வணிகர்களும், சென்னை போன்ற பெரிய நகரங்களிலே இடிபாடு

## மக்களாட்சியில்....!

"தூய்மை நிறைந்த மக்களாட்சி முறை, தேவைப்படும் போது, பொது நோக்கத்துக்குத்தான் கட்டுப்படுமேயன்றி கட்சிக் கொடிகளுக்கு அன்று; அங்ஙனமாயின் கட்சிகள் பலப்பல ஏன்? தனித்தனிக் கொடிகள் ஏன்? என்று கேட்கப் படுகிறது. ஒரு பொது நோக்கத்துக்காகப் பாடுபடும் மாண்பு மக்களாட்சிக்கு உண்டு என்பதாலேயே எல்லாவற்றையுமே கூட்டிக் கலக்கி ஒருருவாக்கிப் பேருருவாக்கிவிட எண்ணுவது பேதைமை மட்டுமல்ல; கேடு விளைவிக்கக் கூடியதே!

மலர்களை உதிர்த்து இதழ்கள் குவித்திடலாம்; இதழ்களைக் குவித்துப் புதிய பூக்களை மலரச்செய்திட முடியாது! மலர்களைத் தொடுத்து, மாலைகளாக்கலாம்-செடிகள் மாலை மாலையாகவே ஏன் தந்துவிடக்கூடாது என்று எண்ணுவது வேடிக்கை நினைப்பன்றி வேறில்லை! தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டச் சொன்னார் சான்றோர்; தனித்தனிக் கனிகளே கூடாது என்றாரில்லை."

—பேரறிஞர் அண்ணா

# தமிழ்நாடு தொழில் வணிகத் துறை

## சென்னை-5

நேர்த்தியான, கவர்ச்சிமிக்க கைவினைத்திறன் (HANDICRAFTS) பொருள்கள், தொழில் வணிகத் துறையினரால் நடத்தப்படும் கீழ்க்கண்ட விற்பனை நிலையங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

1. குடிசைத் தொழில் விற்பனை நிலையம்,
   166-ஏ, மவுண்டு சாலை, சென்னை-2.
2. அரசினர் விற்பனை நிலையம், மகாபலிபுரம்,
   செங்கற்பட்டு மாவட்டம்.
3. அரசினர் விற்பனை நிலையம், நெய்வேலி,
   தென்னுற்காடு மாவட்டம்.
4. அரசினர் விற்பனை நிலையம், திண்டுக்கல்,
   மதுரை மாவட்டம்.
5. அரசினர் விற்பனை கொள்முதல் நிலையம், தஞ்சாவூர்.
6. அரசினர் விற்பனை கொள்முதல் நிலையம், திருச்சி.
7. அரசினர் விற்பனை கொள்முதல் நிலையம், திருநெல்வேலி.
8. அரசினர் விற்பனை கொள்முதல் நிலையம். கோயம்புத்தூர்.
9. அரசினர் விற்பனை கொள்முதல் நிலையம். சேலம்.

### *விற்பனை செய்யப்படும் பொருள்கள்*

வெண்கலச் சிலைகள், கலைப்பொருட்கள் காகித, களிமண் பொம்மைகள், சந்தன இதர நவீன கலைப்பொருள்கள், நூதன பனையோலைப் பொருள்கள், தந்தம், கொம்பினாலான பொருள்கள், இசைக் கருவிகள், நெட்டி உருவகங்கள் (தாஜ் மஹால் போன்றவை), தரை விரிப்புகள், கம்பளங்கள், தஞ்சாவூர் பஞ்ச உலோகக் கலைத் தட்டுகள் மற்றும் இதர கைவண்ணப் பொருள்கள்.

**தேவைக்குக் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்:—**

## இணை இயக்குநர்

தொழில் வணிகத் துறை. (தொழில் கூட்டுறவு மற்றும் கைவினைத் திறன்)

**சேப்பாக்கம். சென்னை-5.**

களுக்கிடையே வாழ்ந்து, குழாய் நீரிலேயே குளித்துச் சலித்த செல்வந்தர்களும் மூன்றுமாதமாவது நிம்மதியாக மூச்சு விடலாம், கொட்டும் அருவியிலே குளிக்கலாமென்று வருகை தருகின்றனர்

### தேனருவியில் தேனிலவு !

தேனிலவிற்காக வரும் தம்பதியர் பலர். மாணவ-மாணவியர் சுற்றுலா வருவதும் சைக்கிளில் சாரை சாரையாக அவ்வட்டார இளைஞர்கள் இங்கே வருவதும் வாடிக்கையான காட்சிகளே!



சித்த சுவாதீனம் இல்லாதவர்களும் இங்கு குளிக்க அழைத்து வரப்படுவதுண்டு. அங்குள்ள மருத்துவமனையிலிருந்து கூட்டமாக அவர்களை அழைத்துவந்து குளிப்பாட்டுவார்கள். மலையிலுள்ள மூலிகைச் சத்துக்களும், ஜில்லென்ற அருவிக் குளிப்பும் அவர்களைக் குணமடையச் செய்கின்றன.

குற்றாலம் அருவி என்று பொதுப்படையாகச் சொன்னாலும், அங்கு பல இடங்களிலிருந்து விழும் அருவிகளுக்கும் வெவ்வேறு பெயர்கள் உண்டு.

படங்களில் பொதுவாகக் காணும் அருவிதான் பெரிய அருவி. அது குற்றால நாதரின் கோயிலருகே உள்ளது. குற்றாலம் வருபவர்களில் பெரும் பகுதியினர் குளிப்பதும் இங்கேதான். ஆடவரும் மகளிரும் தனித்தனி நீர் வீழ்ச்சிகளில் குளிக்கிறார்கள். மகளிர் ஆடைகள் மாற்றவும் தனி அறைகள் அருவியின் அருகிலேயே உள்ளன.

அருவியின் பக்கத்திலேயே மலை மீது ஏறிச் செல்ல வழியிருக்கிறது. வாலிபர்களும், மாணவர்களும் அதில் ஏறி மேலேயுள்ள செண்பகாதேவி, தேனருவி மானருவி (இங்கு மான்கள் வந்து தண்ணீர் அருந்துமாம்) ஆகியவைகளைக் காணச் செல்வர்.

தேனருவி மலை உச்சியிலுள்ளது. சுமார் 180 அடி உயரத்திலிருந்து இரு பாறைகளுக்கு நடுவே அருவியாக விழுகிறது. இருபுறமும் பிரமாண்டமான தேன் கூடுகள் அடை அடையாகத் தொங்குகின்றன. இந்த மலைத்தேன் கூடுகளை, வேடர்கள் அம்பு எய்து, தேன் அடைகளை வீழ்த்தித் தேன் எடுப்பதாகக் கூறுகிறார்கள். நாமும் தேன் கூடுகளை அண்ணாந்து பார்க்கிறோம்.

காட்டுத் தேனியின் ரீங்கார ஒலியும், குயிலின் இன்னிசையும், நம்மை ஒரு புதிய உலகிற்கே அழைத்துச் செல்கின்றன. கையில் கொண்டு சென்ற தின்பண்டங்களைக் கொறித்தபடியே தேனருவியை ரசிக்கின்றனர் மாணவர் குழாம்.

பெரிய அருவிக்கும் தேனருவிக்கும் நடுவில் உள்ள செண்பகாதேவி அருவியிலிருந்து பாறைகள் நடுவே தண்ணீர் வீழ்ந்து பெரிய கிணறு போல் காட்சி அளிக்கிறது. இதைப் பொங்குமாங் கடல் என்றும் கூறுகின்றனர். பாறையின் மீது ஏறி இதில் குளித்து நீந்துவதில் ஆனந்தம் காண்பவர் பலர்.

செண்பகாதேவி அருகிலுள்ள செண்பகாதேவி அம்மன் கோவிலுக்கு அதிகாலை வேளையில் சென்றால் இடியப்பமும், பிட்டும் சுடச்சுடக் கிடைக்கும் !

இளம் தம்பதியரும், அமைதியாகக் குளிக்க விரும்புபவர்களும் செல்லும் அருவி, ஐந்தருவி. ஐந்து பகுதிகளாகப் பிரிந்து விழுவதால், இப் பெயர் பெற்றுள்ளது. பெரிய அருவியிலிருந்து மேற்கே சுமார் 4 மைல் தூரத்தில் உள்ளது. இதற்காக மலை ஏற வேண்டியதில்லை. தனிச்



சாலையே செல்கிறது. இதற்குச் செல்வதற்குத் தனிப்பேருந்து வசதிகள் உண்டு. இருப்பினும் சாலையின் இரு மருங்கிலுமுள்ள சந்தன மரங்களையும் மாஞ் சோலைகளையும் இயற்கைக் காட்சிகளையும் ரசித்தபடியே செல்வது ஒரு தனி ரசனை.

அதோ, ஐந்தருவி வந்து விட்டது. அருவியை நெருங்கு முன்பே உடம்பில் இதமான ஒரு சிலிர்ப்பு. ஒரு பெண்மணி குளித்துவிட்டுத் திரும்புகிருள். அவள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அவளது கணவன், அவள் அருகில் வந்ததும், '' டிரான்சிஸ்டரை '' திருப்புகிருன். '' குற்ருலம் அருவியிலே குளித்தது போலிருக்குதா..? மனதை மயக்குதா..? '' என்று பாடுகிறது அந்தக் குறும்புக்கார '' டிரான் சிஸ்டர் ''. இளம் தம்பதியரின் முகங்களிலே புன்னகை '' பொங்கு மாங்கடல் '' போல் பொங்கி வருகிறது.

வீட்டிலே, வாளித் தண்ணீரில் குளிக்கும் முன் குளிரால் நடுங்கும் ஒரு பெரியவர், பாறையில் சாய்ந்து உட்கார்ந்தபடியே அரைமணி நேரமாக அருவிக் குளிப்பை அனுபவிக்கிருர். குற்ருல அருவியின் மகத்துவம் — அவர் உடல் நடுங்கவில்லை. குளிரும் ஆட்டவில்லை.

தாயின் சேலை முன்தானையைப் பிடித்த வண்ணம் '' தங் தங் '' என்று குதிக்கிருள் ஐந்து வயதுச் சிறுமி. ஐந்தருவியிலே குளிப்பதிலே அந்தச் சிறுமிக்கு அலாதி ஆனந்தம்.

பெரிய அருவிக்குக் கிழக்கே இரு மைல் தூரத்திலிருப்பது '' புலியருவி ''.

இவை தவிரப் பெரிய அருவியிலிருந்து சுமார் ஒரு பர்லாங் தூரத்தில் மலைச் சரிவில் உள்ளது புதிய அருவி ஒன்று. இது செயற்கை அருவி. ஆடவர், பெண்டிர் தனித்தனியாகக் குளிப்பதற்காக இரு அறைகள் அங்கு உள்ளன.

இயற்கை அன்னையின் எழில் கூடமான இந்தக் குற்ருலம், நெல்லை மாவட்டம், தென்காசியிலிருந்து சுமார் 4 மைல் தொலைவில் உள்ளது. '' சீசன் '' காலங்களில் தென்காசியிலிருந்து குற்ருலம் வந்து போக அடிக்கடி பேருந்துகள் உள்ளன. குற்ருலத்திலே தங்க விரும்புபவர்களுக்குக் குன்றின்மீது வசதிகள் நிறைந்த சுற்றுலா மாளிகை உள்ளது. பலதரப்பட்ட வாடகைகளில் தனிப்பட்டவர்களின் வாடகை இல்லங்களும், மாளிகைகளும் உள்ளன. குற்ருலம் நகரியத்தின் (டவுன்சிப்) நிர்வாகத்திலுள்ள சத்திரங்களும் ஏராளமான சுற்றுப் பயணிகளுக்கு வசதியாக உள்ளன.

வாழ்க்கைத்தளத்தில், ஏற்றத் தாழ்வின்றி எல்லோரும் சென்று அனுபவிக்கத்தக்க இந்தக் குற்ருலம், உடல் நலமேம்பாட்டிற்கேற்ற ஓய்வுத்தலம்; சுற்றுலாவிற்கேற்ற உல்லாசபுரி; கோடைக்குப் பின்னும் இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தரும் மலைத் தலம்!



''குயில்கூவிக் கொண்டிருக்கும் கோலமிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும் வாசமுடைய
நற்காற்றும் கலந்தடிக்கும் கண்ணாடிபோன்ற
நீரூற்றுக்கள் உண்டு கனிமரங்கள் மிக்குண்டு
பூக்கள் மணங்கமழும் பூக்கள் தோறும் சென்று
தேனீக்கள் இன்னிசை பாடிக் களிக்கும்
வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு
காட்டு மறவர்களும் காதல் மணம் செய்வதுண்டு

இன்றைய முதல்வர்; அல்ல, அல்ல; அன்றைய பொதுப்பணி அமைச்சர், கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணாவின் சீரிய தலைமையில் பதவி ஏற்றதும் முதன் முதலாகச் சென்று பார்வையிட்ட அரசு நிலையத்திற்குச் செல்கிறோம் என்ற உணர்வு மேலிட, உற்சாகமாகச் சுமந்து செல்லும் ஜீப் பறக்கிறது; அமைச்சர்களது இல்லங்களைத் தாண்டுகிறது; அவனுக்கு ஏனோ ஒரு கலக்கம்-இமைப் பொழுதில் எண்ணற்ற நினைவு அலைகள்-'இங்குதானே நாம் ஒருவாரம் இரவுபகலென்று பாராது பட்டினியாகப் படுத்திருந்தோம்; எதையும் தாங்கும் இதயம், இங்குதானே, ''இறுதியாகத் தூங்கப் போகிறேன்-தம்பீ!'' என்று நம்மிடம் கூறி விட்டுச் சென்றது!' அவன் எண்ணுகிறான்; எதிரே எல்லாம் ஒரே சூன்யமாய்க்காட்சி அளிக்கிறது.

'சார்! கவர்னர் மாளிகை வந்து விட்டது! வண்டியை எங்கே ஓட்ட?' என்று டிரைவர் குரல் கொடுக்கிறார். அவன் எட்டிப்பார்க்கிறான். வலப் புறத்தில் ஒரு பெரிய மாளிகை; அதனைச் சுற்றிப் பச்சைப் பசேலென்று புல்வெளியும்-உயர்ந்த மரங்களும் காட்சி தருகின்றன. அவனுக்கு எண்ணம் கோடைக் கானலில் இருப்பதாக.

'இதுதான் சார்! நீங்கள் சொன்ன இடம்' என்றவாறே ஜீப்பின் இடையை இலகுவாகத் திருப்பி ஓடித்துச் சென்று நிறுத்துகிறார், அவனுக்கே ஓர் அச்சவுணர்வு-இது பங்களாவா அல்லது ஆராய்ச்சி நிலையமா என்று. மேலே செல்கிறான். மாடியில் மலர்ந்த முகத்துடன் ஒருவர் வரவேற்கிறார்; அவர் தான் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர்.



# நெடுஞ்சாலை அமைத்திடும் வேலை

நெஞ்சில் நிறுத்துங்கள் இந்த இடத்தைத்தான்
சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்று சொல்லிடுவார்''

என்பார் பாரதிதாசன்; நான் அப்படிச் சொல்லவில்லை; இத்தகைய இயற்கை எழில் குலுங்க இருக்கும் இடம் 'நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்' என்பேன். ஆம், அதன் எதிரில்தானே காந்தி மண்டபமும், இயற்கை எழிலோடு கூடிய சிறுவர் பூங்காவும் அமைந்துள்ளன.

அவன் 'தமிழரசு' இரண்டாம் இதழை நீட்டுகிறான்; அவர் புரிந்து கொள்கின்றார் ஒரு புன்னகையுடன் - அவன் அங்கே செய்தியாளராகின்றான்!

# கதர் - கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் - கதர்ப்பட்டு
சோப்பு - தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் - வார்ப்படங்கள்
மண்பொருள்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப்
பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில்
கிடைக்கும்.

வெளியீடு:

## கதர் கிராமத் தொழில் துறை

உ, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.



''உங்கள் ஆராய்ச்சி நிலையம் மக்களுக்கு எந்தவகையில் நன்மை செய்கிறது?''

''நவீன முறையில் சாலையமைத்திட உதவுகின்றது. விஞ்ஞானம் வேகமாய் வளர்ந்திடும் இந் நிலையில், சாலைப்போக்குவரத்து இன்றியமையாததாய் ஆகிவிட்டது. ஆகவே இங்கு இருக்கும் சாலைகளை நவீனப்படுத்துவதும், விஞ்ஞான முறைப்படிச் சீரிய முறையில் சாலை அமைத்திடப் புதிய வழி முறைகளைக் கண்டறியத் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்துவதும் இதன் முக்கிய பணிகளாகும்.'' என்கிறார்.

''செயல்படுத்த இருக்கிற நல்ல திட்டம் இப்போது உண்டா?''

''ஓ! ஜெமினி அருகே, வெளிநாடுகளில் உள்ளதைப்போன்ற, முற்றிலும் புதிய போக்குவரத்து வசதிகளோடு பலவழிச் சாலையினை அமைக்க இருக்கிறோம்'' என்கிறார்.

'அப்படியா, மகிழ்ச்சி! உங்கள் பெருவழித் துறை ஆராய்ச்சி நிலையத்தின், தோற்றம், வளர்ச்சி, ஆற்றிய பணிகள், எதிர்காலத் திட்டம் இவைகளைச் சற்று விளக்குவீர்களா?'

''பெருவழித்துறை ஆராய்ச்சி நிலையம், அதன் சொந்தக் கட்டிடத்தில், 1957-ம் ஆண்டு நவம்பர் மாதம் நிறுவப்பட்டது. இந்தப் புதிய நிறுவனம் 1948-ல் தோன்றிய மண்வள ஆராய்ச்சி ஆய்வுக் கூடத்திலிருந்து உருவானது.

எதிர்காலத்தில் விரிவு படுத்தும் நோக்கத்தோடும், சோதனைச் சாலைத் தடங்களோடும் கூடிய அதன் பரப்பளவு 35 ஏக்கராகும். 1962-ம் ஆண்டு ஒவ்வொரு தனிப்பிரிவுக்குமாக நான்கு ஆய்வுக் கூடங்களும், ஆய்வுக் கூடங்களுக்குச் சொந்தமான வண்டிகளையும், கனரக இயந்திரங்களையும் நிறுத்தி வைக்கின்ற கொட்டகைகளும் 1·94 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டன. அந்த ஆய்வுக் கூடம் முறையே (1) மண்வளம், (2) கான்கிரீட், (3) பிட்டுமன், (Bituman) (4) போக்குவரத்து ஆகிய நான்கு முக்கிய பிரிவுகளை உட் கொண்டிருந்தது.

நோக்கம்: பெருவழித்துறை போக்குவரத்து முறைகள் ஆபத்தில்லாதவையாகவும், வசதி நிறைந்தவையாகவும், செலவினம் குறைந்தவையாகவும் அமையச் சோதனைகள் உதவின. சாலை மற்றும் சாலைப் போக்குவரத்து, இவை இரண்டும் எப்பொழுதுமே பெருவழித்துறை ஆராய்ச்சி நிலையத்தின் விருப்பத்திற்குகந்த பகுதிகளாக இருந்தன. உண்மையில் இந் நிலையம், மாநிலத்தின் எந்தப் பகுதிகளில் போடப்படும் சாலைகளாக இருந்தாலும் தனது பரிபூரண ஒத்துழைப்பை அளித்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையம் நிறுவப்பட்டது முதல் இன்று வரை மாநிலப் பெருவழித்துறையின் கீழும், தனியார் துறையின் கீழும் பல சாலைகளை அமைத்திருக்கிறது. அதன்



# சிறு சேமிப்பு
# ஓர்
# ஒளிவிளக்கு



குல விளக்காம் உங்கள் மகன் கல்வி பெற....



திரு விளக்காய் உங்கள் மகள் மணவாழ்வு பெற....



பெருவிளக்காய் உங்கள் வருங்காலம் சீர் பெறவே....



ஒளி விளக்காய் வழிகாட்டும் சிறுசேமிப்பு...

## இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்

இயக்குநர்
சிறு சேமிப்பு நிறுவனம்
சென்னை-9

செயல் முறைகளைக் கீழ்வருமாறு பிரிக்கலாம்.

1. மண்வளம் : மண்வளங்களின் தராதரங்களைப் பகுத்தறிந்து, அஸ்திவாரங்கள், நடைபாதைகள் முதலியவைகளைக் கட்டுவதற்கு உதவுவது.

2. கான்கிரிட் : கான்கிரீட் கலவைகளின் நிர்ணயங்களும் தரக் கட்டுப்பாடும் நிலை நாட்டுவது.

3. பிட்டுமன் : (Bituman) உபயோகிக்கப்படும் பொருட்களின் நிரந்தர சோதனைகளும் நிர்மாணமும்.

4. கட்டடங்கள் : பாலங்கள் மற்றும் பலதரப்பட்ட சாலை சம்பந்தமான சோதனைகள், நடைபாதைகளின் நிலைமைகளை ஆராய்தல் முதலியன.

5. போக்குவரத்து : சாலைகளின் இடம், சந்திப்புகள், குறுக்குச் சாலைகளின் நிர்மாணங்கள், போக்குவரத்து வாகனங்களின் அளவு, சாலைப் பாதுகாப்பு, சாலைப்பரப்புகளின் தனித்தன்மைகள் முதலியன ஆராய்ந்தறிவது.

6. வாசகசாலை உதவி : புது முறைகள், புதுத் தேவைகளுக்காகப் புகுத்தப்படுதலைக் கவனித்தல், பழைய முறைகளைப் புதுத் தேவைகளுக்காக மாற்றியமைத்தல் முதலியன.

குழுவின் வேலைகள் : நெடுஞ்சாலைப் பொறியியலில் வரும் பிரச்சினைகளைக், குழுவின் உறுப்பினர்களோ, அல்லது விஞ்ஞானத் தொழில்ஆராய்ச்சிக் குழுபோன்ற தனி அமைப்புகளோ (Council of Scientific and Industrial Research) சமர்ப்பிக்கும்பொழுது அவற்றைப்பற்றி ஆடம்பரமற்ற முறையில் கூடி ஆலோசனை செய்தல்; பெருவழித்துறை ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஆராய்தல் முதலியன.

மண் வளப் பகுதி: 1969–70-ம் ஆண்டு மண்வள ஆய்வுக் கூடத்தின் மிக முக்கியமான அலுவல், உலக வங்கியின் மூலமாக, உலக அபிவிருத்தி உதவி நிறுவனத்தின் கீழ்த் தொடர்ந்த சேலம்-பெங்களூர், சேலம்-கொச்சி சாலை வேலைகளாகும். இந்த இரண்டு சாலைகளிலும், சாலைகளின் பல இடங்களில் உள்ள மண்ணின் மாதிரிகளும், பழைய மற்றும் புதிய சாலைகள் வந்து சேருகின்ற சந்திப்புகளிலுள்ள மண்ணின் மாதிரிகளும், பெரிய சிறிய பாலங்களின் அருகிலுள்ள மண்ணின் மாதிரிகளும், சோதனைகள் பல செய்யப்பட்டு, அச்சோதனைகளின் முடிவுகள் மத்திய அரசிற்குத் தெரிவிக்கப்பட்டன. மேலும் பல அடிமண் 'சோதனைகள் கட்டடங்கள் மற்றும் பாலங்களுக்கான அஸ்திவாரங்கள் கட்டுவதற்கான வழிவகைகளை, நல்கின.

இது போன்ற பணிகள் ஏராளம்!'' என்று முடிக்கின்றார். அத்தோடு, அங்குள்ள ஒரு பதிவேட்டைக் காட்டுகின்றார். அதில் அன்றையப் பொதுப்பணி அமைச்சர் கக்கன் அவர்கள் ''நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தினைப்பார்வையிட்டேன். முற்போக்கான முயற்சிகள் பாராட்டத்தக்க அளவில் நடைபெறுகின்றன. மேலும் முயற்சிகளில் முனைந்து வெற்றி பெற ஊக்கம் பெற விழைகிறேன்.'' என்று தம் கைப்பட எழுதியுள்ளார்.

''இவ்வளவு செய்யும் எங்கள் நிலையத்தை மக்கள் அறியாதிருக்கின்றார்கள்'' என்று வருத்தத்துடன் கூறுகிறார்.

'' அதற்குத்தான் 'தமிழ் அரசு' இருக்கிறதே'' என்று கூறி விடை பெறுகிறேன்.



## நமக்குத் தேவை—அந்த உணர்ச்சிதான்!

''நமது நாடு தொழில் துறையில், பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் பின்னணியில் நிற்கிறது எனினும், வளம் குறைந்த நாடா இது? இல்லை! பெட்ரோலியம் இல்லாத நாடுகள் உண்டு; இரும்பு இல்லாத நாடுகள் உண்டு; நிலக்கரி இல்லாத நாடுகள் உண்டு; மற்ற கனிவளங்கள் இல்லாத நாடுகள் உண்டு; ஆனால் நம் நாட்டிலோ எல்லாவகைக் கனி வளங்களும் உண்டு தோண்ட வேண்டிய கனிச்சுரங்கங்கள்; கட்டவேண்டிய கப்பல் துறைகள் இன்னும் இருக்கின்றன; ஆகவே, ஏராளமான வளத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

''நாம் முன்னேறியிருக்கிறோம் என்றாலும்-நமது வளத்திற் கேற்ப முன்னேறவில்லை! நமது தேவைக்கேற்பவும் முன்னேறவில்லை! ஆகவே, எக்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த அரசியல் கொள்கையை உடையவராக இருந்தாலும் நமது திறமையை - உழைப்பை ஒன்று படுத்தி ஆக்கப்பணியில் செலுத்தினால் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம். இரண்டாம் உலகப் போரில் அழிந்த ஜப்பான் நாட்டினர் பெரும் சேதத்திற்கு ஆளானபோதும், பத்துப் பதினைந்தே ஆண்டுகளில் கடுமையான உழைப்பினால் பழைய நிலையை அடைந்தார்கள். அதுமட்டுமல்ல நம்மைப் போன்றவர்களுக்கும் உதவ முன்வந்திருக்கிறார்கள். அந்த உணர்ச்சிதான், எழுச்சிதான் நமக்குத் தேவை.''




# இந்தக் காசு போதும் உங்கள் குடும்பம் பெருகாமல் தடுக்க!

## நிரோத்

உபயோகியுங்கள்

உயர் தர ரப்பரினாலான கருத்தடைச் சாதனம்

**குடும்பக் கட்டுப்பாட்டிற்கு**

15 காசுக்கு 3

அரசாங்க ஆதரவினால் குறைந்த விலை

### வேண்டுமென்றபோது மட்டுமே பேறு

வேண்டுமென்றபோது மட்டுமே இன்று மக்கட்பேற்றை ஏற்படுத்திக் கொள்ளலாம். இதற்கு நிரோத் உதவும்.

### தாய் சேய் இருவரின் தேகநலம் ...

குழந்தைகள் சரியான வளர்ச்சி பெற, முதல் மூன்று நான்கு வருடங்கள் அவர்களுக்கு விசேஷமான பராமரிப்பு தேவை என்று வைத்தியர்கள் கூறுகின்றனர். பேற்றில் இழந்த தேக வலுவை மீண்டும் பெற தாய்க்கும் சிறிது காலம் பிடிக்கும். நிரோத் உபயோகிப்பதால், அடுத்த பேற்றைச் சுலபமாகத் தள்ளிப் போடலாம்.

நிரோத் (காண்டோம்) உயர் தர ரப்பரினாலான கருத்தடைச் சாதனம். ஆண்களுக்கான இது எளிமையான, தீமையற்ற நிரோத் உலகமெங்கும் உபயோகிக்கப்படுகிறது. இதை உபயோகிப்போரின் தேகநலம் பாதிக்கப்படுவதில்லை. நிரோத் எங்கும் கிடைக்கும்.

நிரோத், வீட்டுச் சாமான்கள் விற்கும் கடை, மருந்துக் கடை, வெற்றிலைப் பாக்குக் கடை ஆகியவற்றில் கிடைக்கும்.



(தமிழக முதல்வர் தமது மேலைநாட்டுச் சுற்றுப் பயணம் பற்றிச் சென்னை வானொலி நிலையத்துக்கு அளித்த பேட்டி. இதனைச் சென்னை, திருச்சி வானொலி நிலையங்கள் 27—7—1970 அன்று மாலை 6-15 மணிக்கு அஞ்சல் செய்தன. பேட்டி கண்டவர் திரு. அகிலன்.)

கேள்வி: பாரீஸில் நடைபெற்ற மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டைத் தாங்கள் துவக்கி வைத்ததை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். மாநாட்டிற்கு அங்கு வந்திருந்த பிறநாட்டுத் தமிழறிஞர்கள் காட்டும் உற்சாகம் பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்? தமிழ் மொழி—இலக்கியம்—கலாச்சாரப் பண்பாடு இவை உலகத்தில் பரவுவதற்கு நல்ல வாய்ப்பிருக்கிறது என்று நம்புகிறீர்களா?

பதில்: பாரீஸில் நடைபெற்ற மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு வந்திருந்த பிறநாட்டுத் தமிழறிஞர்கள் தமிழின் பாலும், தமிழ் இலக்கியத்தின் பாலும், தமிழ்க் கலாச்சாரத்தின் பாலும் அளவுகடந்த பற்று வைத்திருக்கிறார்கள் என்பதை என்னால் நேரடியாக உணர முடிந்தது.

தமிழின் மென்மையும் வளமும் இனிமையும் எழிலும் அனைவரையும் கவரத் தக்கவை என்பதை அந்த மாநாட்டில் எதிரொலித்த ஆர்வத்தின் மூலம் நான் புரிந்து கொண்டேன்.

தாங்கள் விரும்புகிறவாறு, தமிழ்மொழி—இலக்கியம் — கலாச்சாரப் பண்பாடு இவை உலகத்தில் பரவுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று நான் நம்புகிறேன். ஆனால் அந்த முயற்சியில் ஈடுபடுகிறவர்கள் பரந்த மனப்பான்மையோடு பணியாற்ற வேண்டுமென்பது என்னுடைய ஆசையாகும்.

வெளி நாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் தமிழ் பேசவும் எழுதவும் மறந்து வருகிறார்கள். அங்கெல்லாம் தமிழ்க் கல்விப் பயிற்சிக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாடுகளுக்கு நாடு மாணவர்கள் பரிமாற்றம் செய்யப்பட்டு மொழி வளரப் பாடுபட வேண்டும்.

தமிழின் வளத்தையும் தொன்மையையும் பற்றிப் புகழ்ந்து கொண்டிராமல் தமிழை விஞ்ஞான யுகத்திற்கேற்ற புது மொழியாக (Modern Language) ஆக்க வேண்டும். அதற்கு சங்க இலக்கியங்களில் உள்ள 3 லட்சம் தமிழ்ச் சொற்களோடு—மேலும் 3 லட்சம் தமிழ்ச் சொற்களை இணைத்து 6 லட்சம் சொற்கள் கொண்ட ஆங்கிலத் தமிழ் அகராதி வெளியிட வேண்டும்.

இவைகளே அந்த மாநாட்டில் நான் தெரிவித்த முக்கியக் கருத்துக்கள்.

கேள்வி: உலகத்து மொழி அறிஞர்கள், தமிழ் மீது மட்டும் இந்த ஆர்வம் கொண்டிருப்பதற்கு என்ன காரணமாக இருக்க வேண்டும்? இலங்கை, மலேசியா, தென்னாப்பிரிக்கா, பர்மா போன்ற நாடுகளிலெல்லாம் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதாலா? அல்லது மிகத் தொன்மையான இலக்கிய மொழியாகவும், அதே சமயம் இப்போது கூட வளர்ந்து வரும் மொழியாகவும் இருப்பதாலா?

பதில்: மலர்க்காட்டில் பூத்துக்குலுங்கும் எத்தனையோ எழில் மலர்களை விட்டு விட்டு, மல்லிகையின் பால் மங்கையர் மனம் நாடுவதில்லையா! அது போலத்தான் தமிழ் மீது உலக மொழி அறிஞர்கள் ஓயாத காதல் கொண்டிருக்கிறார்கள். அது வளமான மொழி மட்டுமல்ல; வளர்ந்து வரும் மொழி ; இன்னும் வளர வேண்டிய மொழி என்பதும் மற்றொரு காரணமாகும்.

தமிழ்நாடு என்பது தவிர, கடல் கடந்து பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள், தங்கள் தாய் மொழியின் மீது கொண்டுள்ள நீங்கா அன்பும் இன்னொரு காரணமாகும்.

கேள்வி: சுமார் எத்தனை நாடுகளிலிருந்து-எந்தெந்த நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள் என்று கூற முடியுமா?

பதில்: 39 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் பங்கு கொண்டார்கள். அமெரிக்கா, சுவீடன், டென்மார்க், ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, செக்கோஸ்லோவேகியா, ஆஸ்டிரியா, தென்



ஆப்பிரிக்கா, மொரிஷியஸ், மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், ஜப்பான், இந்தியாவில் தமிழ்நாடு, புதுவை ஆகிய நாடுகளிலிருந்து ஏறத்தாழ 200 பிரதிநிதிகள் பாரீஸ் மாநாட்டிற்கு வந்திருந்தனர்.

கேள்வி: அந்தந்த நாடுகளில் தமிழாராய்ச்சியைத் தொடர்ந்து செய்ய ஏதேனும் அமைப்புக்கள் — நிறுவனங்கள் — அவர்களுக்கு இருக்கின்றனவா?

பதில்: சில வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் தமிழ் ஆராய்ச்சிக்கான துறைகளைத் தோற்றுவித்திருக்கின்றன. வேறு சில பல்கலைக் கழகங்கள் மொழி நூல் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளன. அம்மொழி நூல் துறையில் ஆராயப்படும் மொழிகளில் தமிழும் ஒன்றாக விளங்குகிறது.

பென்சில்வேனியா, கலிபோர்னியா, சிகாகோ, வாஷிங்டன், மிச்சிகன், லண்டன், லெய்டன், ஸ்டாக்ஹோம், உப்சலா, ஹய்டல் பர்க், பிராகா, பாரீஸ், மாஸ்கோ, லெனின் கிராடு, மலேசியா, இலங்கை, சிங்கப்பூர் ஆகிய பல்கலைக் கழகங்களில் தமிழ் ஆராய்ச்சித் துறைகள் செயல்படுகின்றன. ஜப்பான், பிரான்ஸ் ஆகிய இரண்டு நாடுகளும் தமிழாராய்ச்சிப் பிரிவைத் தோற்றுவிக்க உத்தேசித்துள்ளன. ரஷ்ய நாட்டிலுள்ள கீழை நாட்டுக் கல்வி நிலையத்தில் தமிழாராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

கேள்வி: தமிழ் நாட்டுக்கு வந்து அவர்கள் தொடர்ந்து ஆராய விரும்பினாலோ, அல்லது இங்கிருந்து தமிழறிஞர்கள் அவர்கள் நாடுகளுக்கு வருவதை விரும்பினாலோ, அதற்கு உதவும் வகையில் தமிழக அரசு ஏதும் ஏற்பாடு செய்யுமா?

பதில்: சென்னையிலுள்ள அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சிக்காக வெளிநாட்டிலிருந்து தமிழ் அறிஞர்கள் தமிழ் நாட்டிற்கு வருவதற்கும், தமிழ் நாட்டிலிருந்து தமிழ் அறிஞர்கள் வெளி நாடுகளுக்குச் செல்வதற்கும் ஒரு திட்டம் உள்ளது. தமிழ் ஆராய்ச்சிக்கு ஜெர்மனி, டென்மார்க், அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து தமிழ் அறிஞர்கள் தமிழ் நாட்டிற்கு வர இருக்கின்றனர். தமிழ்நாட்டுத் தமிழறிஞர் ஒருவரைத் தமிழ் ஆராய்ச்சிக்காக டென்மார்க் நாடு தன்னுடைய நாட்டிற்கு வரும்படி அழைத்துள்ளது.

**கேள்வி: தமிழ்நாட்டின் தலைநகரில் நிறுவ இருக்கும் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்துக்கு எந்தெந்த வகைகளில் தமிழக அரசு உதவி செய்யத் திட்டமிட்டிருக்கிறது என்பதைக் கூறுகிறீர்களா?**

பதில்: அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தைச் சென்னையில் நிறுவக் கொள்கையளவில் தமிழக அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. இந்நிறுவனத்தை அமைப்பது பற்றியும் அதற்கு வேண்டிய நிதி உதவிகள் அளிப்பது பற்றியும் தமிழக அரசு பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கின்றது. யுனெஸ்கோ நிறுவனம் இவ்வாராய்ச்சிக் கழகத்திற்காக ஒரு தொகை கொடுத்துதவி, இதன் அமைப்பில் பங்கு கொள்ள முன் வந்துள்ளது. இக் கழகத்தில் தமிழக அரசிற்குப் போதிய பிடிப்பு இருக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

கேள்வி: பழந்தமிழ் இலக்கியம், அது பற்றிய ஆராய்ச்சியோடு, மேலை நாட்டார் இந்த இருபதாம் நூற்றாண்டுப் படைப்பு இலக்கியமான சிறுகதை, நாவல், கவிதை போன்றவற்றிலும் ஆர்வம் கொண்டிருப்பார்கள். இந்தத் துறையும் வளர்ச்சி அடைய இனி வழி வகுக்கப்படுமா?

பதில்: சிறுகதை, நாவல், கவிதை, போன்றவற்றிலும் தமிழ்நாடு முன்னணியில் நிற்பதாகவே நான் கருதுகிறேன். பிறநாட்டு மொழிகளில் இத்தகைய தமிழ் நூல்கள் மொழி பெயர்க்கப்படாததாலேயே இந்தத் துறையில் தமிழகம் பின்னடைந்திருப்பது போன்ற ஒரு நிலை தோன்றுகிறது. அண்மையில் என்னுடைய சிறுகதைகளில் சிலவற்றையும், கவிதைகளில் சிலவற்றையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து மேலைநாட்டில் தந்தேன். அவைகளைப் படித்த மேலை நாட்டார் பாராட்டுதல்களைத் தெரிவித்தார்கள். ஆகவே தமிழ்நாட்டில் சிறுகதை எழுத்தாளர்கள், நாவலாசிரியர்கள், கவிஞர் பெருமக்கள் இயற்றியுள்ள நூல்களின் வழி அந்தத் துறையும் வளர்ச்சியடையப் படிப்படியாக வழி வகுக்கப்படும்.

கேள்வி: பொதுவாகத், தாங்கள் சென்று வந்த நாடுகளில் தாங்கள் கண்டு கேட்ட அனுபவங்கள் எவ்வாறு தமிழகத்தின் வளர்ச்சிக்கு உதவக் கூடும்? இது போலவே மேல் நாட்டினர் நம் கலாச்சாரத்தை எவ்வளவு தூரம் உணர்கிறார்கள்? தெரிந்து கொண்டிருக்கிறார்கள்?

பதில்: என்னுடைய மேலைநாட்டுப் பயணத்தில் வீரம் செறிந்த ரோமாபுரியின் வரலாற்றுச் சுவடுகளையும், அதன் அழிவிற்குக் காரணமான நிகழ்ச்சிகளின் நினைவுகளையும், அழிந்ததை நினைத்து ஏக்கமுறாமல் இன்று வளமுற அந்நாடு வாழ்வதையும் கண்டேன்.

குற்றாலம், உதகமண்டலம், கொடைக்கானல் ஏரியும் என் கூட வந்தனவோ என எண்ணும் விதத்தில் ஸ்விட்சர்லாந்து நாட்டில் இயற்கை வளத்தைக் கண்டேன்.

பயங்கரப் போரினால் பாதிக்கப்பட்ட மேற்கு ஜெர்மனி குறுகிய காலத்தில் அற்புதமாக வளர்ந்திருக்கின்ற காட்சிதனைக் கண்டேன்.

சாலைகள், சோலைகள், ஆலைகள் அனைத்தும் என்னைக் கவர்ந்தன. கண்டு, கேட்ட அனுபவங்களை விட, மனதில் மொண்டு வந்த உணர்ச்சிகள் என் தமிழ் நாட்டையும் அது போல ஆக்க வேண்டும் என்ற ஆர்வத்தை எனக்கு ஊட்டிக் கொண்டேயிருக்கின்றன. மேல் நாட்டினர் நமது கலாச்சாரத்தை அதிகம் உணர்ந்திருக்கவில்லை என்றாலும், அதனைத் தெரிந்து கொள்கிறபோது பெரிதும் பாராட்டுகிறார்கள். உதாரணமாக, ஜெர்மனியில் நடைபெற்ற ஒரு கலை நிகழ்ச்சியில் தமிழ் நாட்டுப் பரதக் கலை நிகழ்ச்சியும், கேரளத்துக் கதகளி நிகழ்ச்சியும் நடைபெற்றன. நானும் அழைக்கப்பட்டிருந்தேன் விழாவிற்கு. அந்த விழாவில் நமது கலாச்சாரத்தைக் கண்டு ஜெர்மானிய மக்கள் பெரிதும் வியந்தார்கள்.

அனைத்திந்திய அளவில் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், அதை அஞ்சல் துறை மூலமாகவே செய்ய முயல வேண்டுமென்றும், அதனைக் குறிப்பிட்ட சில இடங்களில் மாத்திரமல்லாமல் இந்தியா முழுமைக்கும் பரவலாகச் செய்ய வேண்டுமென்றும் இந்தியப் பிரதமருக்கு நான் எழுதியுள்ளேன்.

நகரங்களை அழகுபடுத்தவும், கிராமப் புறங்களில் விவசாய வளர்ச்சிக்கான முறைகளை மேலும் பெருக்கிடவும், வீட்டு வசதிக்கான ஏற்பாடுகளை விரிவு படுத்திடவும், தொழில் வளம் பெருக்கிட மத்திய அரசோடு இன்னும் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளவும் இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து பயணம் பயன்பட்டது. சுற்றுப் பயணத்தில் கிடைத்த அனுபவங்களை தமிழ் மக்களின் ஒத்துழைப்போடு செயல்படுத்த நானும் தமிழக அரசும் முயற்சிகளை மேற்கொள்ளுவோம்.

சுற்றுலாக்களின் மூலம் மேலைநாடுகள் ஆண்டு தோறும் அதிக வருமானத்தை ஈட்டுகின்றன. எந்த ஒரு மண்டபமானாலும், பழைய நினைவுச் சின்னமானாலும், நவீன பூங்காக்களானாலும் அங்கெல்லாம் அயல்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆயிரக்கணக்கில் சுற்றுலாப் பயணிகளாக வருகிறார்கள். சின்னஞ்சிறு நாடான ஸ்விட்சர்லாந்து ஆண்டுதோறும் சுற்றுலா மூலம் பெறுகிற வருமானமும், அமெரிக்க நாடு ஆண்டுதோறும் சுற்றுலாமூலம் பெறுகிற வருமானமும் ஒன்றாகவே இருக்கிறது என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. நம்முடைய நாட்டிலும் சுற்றுலாப் பயணத்தை விரிவுபடுத்தவும், சுற்றுலாப் பயணிகளை நமது பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் கவரவும் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். உதாரணமாகச் சொன்னால் அந்த நாடுகளிலுள்ள இயற்கைக் காட்சிகள், பார்க்கத் தகுந்த இடங்கள் அனைத்தும் பல வண்ணங்களில் அஞ்சல் அட்டைகளில் அச்சேற்றப் படுகின்றன. அது சுற்றுலாப் பயணிகளை மெத்தவும் கவருகிறது. அந்த விளம்பரத்தை

## அரசுப் பேருந்து ஊழியர்கள் செய்த உதவி

ஐயா,

தமிழ்நாடு அரசாங்கப் பேருந்தில் எனது தாயார் 1970 ஜூலை 2-ந் தேதியன்று கோயம்புத்தூரிலிருந்து கடலூருக்குப் பயணம் புறப்பட்டார். ஜன்னல் கம்பியில் தலை சாய்த்தபடி அவர் தூங்கிக் கொண்டு சென்றார். பேருந்து, விருத்தாசலத்தை நெருங்கியபோது என் தாயாரின் வைர மூக்குத்தி கழன்று, இருக்கைக்கும் பேருந்தின் அள்ளைப்புறத்துக்குமிடையே உள்ள சந்தில் விழுந்துவிட்டது. விருத்தாசலத்தில் பேருந்து நின்றபோதுதான், மூக்குத்தி கழன்று விழுந்துவிட்டது என்பது அவருக்குத் தெரிய வந்தது. பேருந்து ஊழியர்களும் மற்ற பிரயாணிகளும், அதைத் தேடித் தருவதில் உதவ முற்பட்டனர். அதை எடுக்க முயன்ற சமயத்தில், வைர மூக்குத்தி சேசிஸின் அடிப்பாகத்தில் விழுந்து விட்டது. பேருந்து நடத்துநருக்கும் ஓட்டுநருக்கும் அவர் இந்த விவரத்தைத் தெரிவிக்க, தற்சமயம் கைவசம் உள்ள கருவிகளை வைத்து அதை எடுக்க இயலாது என்றும், கடலூர் பணிமனை சென்றுதான் எடுக்க இயலும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். நெய்வேலியில் இறங்குவதாக இருந்த என் தாயார் தொடர்ந்து கடலூருக்குச் சென்றார். கடலூரில் பணிமனைக் கண்காணிப்பாளரிடம் விஷயத்தைக் கூறி மூக்குத்தியை எடுத்துத் தருமாறு கேட்டுக் கொண்டார். அவர் உடனே சில மெக்கானிக்குகளை வரவழைத்து மிகுந்த சிரமத்தின் பேரில் இருக்கையை அகற்றி சேசிஸ் பகுதியைத் திறந்து, நீண்ட நேரம் தேடிய பிறகு நகையை எடுத்தனர். தாம் பக்தியோடு போற்றும் வைர மூக்குத்தியை, மிகுந்த சிரமத்தின் பேரில் எடுத்து என் தாயாரிடம் தந்த அந்த ஊழியர்கள் அனைவருக்கும் எவ்வாறு நன்றி செலுத்துவது என்றே தெரியவில்லை.

நெய்வேலி. **எஸ். பாலசுப்பிரமணியன்.**

*(நன்றி: ''இந்து'' 7-7-70)*




**ஒருவர்:** இது என்னங்க; இந்த வீட்டுக்கு "சீட்டு இல்லம்"னு விசித்திரமா பெயர் வைச்சிருக்காங்க?

**மற்றவர்:** அதுவா! தமிழக அரசு பரிசுச் சீட்டிலே லட்ச ரூபாய் பரிசு பெற்றவர் கட்டிய வீடு, இது!




"சார்! நம்ம புத்தகம் முழுவதையும் விலைக்கு வாங்க இதோ ஆளைக் கொண்டு வந்திட்டேன்?"

"அப்படியா? அய்யா யாரு?"

"அவரா? பழைய பேப்பர் வியாபாரி 'கபோதி மார்ட்' கருப்பையா!"




**கணவன்:** (பொருட்காட்சியிலிருந்து திரும்பும்போது) வாங்கின எல்லா சாமான்களையும் ஞாபகமா எடுத்துக்கிட்டியா?

**மனைவி:** எல்லாத்தையும் ஞாபகமா எடுத்துக்கிட்டேன். ஆனா குழந்தையைத்தான் எந்தக் கடையிலே வைச்சிட்டு வந்தேன்னு தெரியலே!




சோம்பேறி மகனுக்குச் சுறுசுறுப்பாக இருப்பதால் ஏற்படும் நன்மையை விளக்கிக்கூற விரும்பினர், தந்தை.

"அதிகாலையிலே எழுந்துவிடும் மீன்கொத்திக்கு நிறைய மீன்கள் கிடைக்கும். அதுபோல நீயும் அதிகாலையில் எழுந்து உன் வேலையைத் துவங்கவேண்டும்" என்றார், தந்தை.

"அதிகாலையில் கண் விழித்துத்தண்ணீரில் நீந்திக்கொண்டிருந்ததால் தானே அந்தமீன்கள் மீன்கொத்திக்குப் பலியாயின" என்று தன் சோம்பேறித் தனத்திற்கு அந்த உதாரணத்தையே திருப்பிக் கூறினான், அந்த புத்திசாலி மைந்தன்.




**மனைவி:** உங்களுக்கு டிபன் பொட்டலத்தில் தோசை மூணு வைக்கணுமா, நாலு வைச்சுடட்டுமா?

**கணவன் :** (எங்கோ நினைவாக) ஒன்றுக்கு மேல் இப்போது வேண்டாம். இரண்டுக்குப் பின் எப்போதும் வேண்டாம்.




**போலீஸ்காரர்:** சைக்கிளில் ஏம்ப்பா "லைட்" இல்லாமே போற....

**திருடன்:** இருட்டிலே இது தானுங்களே கிடைச்சுது.




வேற்றுமொழிச் சொற்களைத் தமிழில் பயன் படுத்தவேண்டி வரும்போது, அவற்றைத் தமிழ்ச் சொல்லாக்கிப் பயன் படுத்தலாம். உதாரணமாக,

சட்னி என்பதைச் சட்டுண்ணி-அதாவது சட்டென்று உண்ணத்தக்கது—என்றும், டியூட்டோரியல் காலேஜ் என்பதனை தோற்றோரியல் கல்லூரி என்றும் பயன்படுத்தலாமே!

அமைச்சர்
திரு மா. முத்துசாமி.




1. அமெரிக்கா போகும் நுங்கு
2. புலன் விசாரணை
3. அருபதாங் கல்யாணம்
4. இங்கே எல்லாம் கிடைக்கும்

மற்றும் பல
சுவைமிகு பகுதிகள்

ஆசிரியர், வெளியிடுபவர் : இயக்குநர், செய்தி விளம்பரத் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.
அச்சிடுபவர் : இயக்குநர், எழுதுபொருள் அச்சகத் துறை, அரசினர் அச்சகம், சென்னை-1.


குறளகம்
தொலைபேசி எண்கள்: 26762-21552-21553
உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்

Registered No. M. 8657



# "வாழ்வு தொடங்கும் மணமக்களுக்கு ஒரு முக்கியமான செய்தி" —டாக்டர் நளினி கூறுகிறார்:



"இந்த நாட்டில் இன்று பல லட்சம் பேர் எதிர்கொண்டாக வேண்டிய பிரச்சினை—எளிமையோடு சொன்னால்— இதுதான்.

'குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரின் வாழ்க்கைக்குரிய அத்யாவசியங்களை வழங்கிச் சரிசெய்வது எப்படி?'. உணவு உற்பத்தியில்; உடையில்; வேலை வாய்ப்புகளில் நமக்குள்ள மிகையான வாய்ப்புகளையெல்லாம் மக்கட் தொகைப் பெருக்கத்தின் வேகம் துடைத்தழித்துக் கொண்டு வருகிறபோது நாம் பசுமைப் புரட்சியைப் பற்றி பேசுகிறோம். இந்தப் போக்கில் எந்த அரசுதான் எப்படிச் சரிக்கட்ட முடியும்?"

"இப்படி இருந்தால் நம்முடைய பிள்ளை குட்டிகளுக்கு நல்வாய்ப்புகளையும் வளமான மகிழ்ச்சியையும் வாரிவழங்குவது எப்படி; எப்போது? வளமான மகிழ்ச்சி என்பது தனி மனித உணர்வுகளில் தேங்க வேண்டியது. நாடு இதை நம்முடைய திட்டமிட்ட வாழ்க்கை முறையாலும் அனுசரணைகளாலுமே எதிர்பார்க்கிறது! எல்லாத் தம்பதியர்க்கும் என்னுடைய ஆலோசனை இதுதான்:

"உங்கள் குடும்பத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்; மகிழ்ச்சியோடு வாழுங்கள்!"

* *

உங்கள் குழந்தை உங்களுக்கு மிக விருப்பமாக இருக்கட்டும்; இடையூறாக வேண்டாம். அதாவது எப்போது வேண்டுமென நினைக்கிறீர்களோ—அதுவரையில் பெற்றெடுத்த ஒன்றின் மீதே அக்கறையும் அனுசரணையும் காட்டுங்கள்.

உங்கள் டாக்டரைக் கேளுங்கள். தமிழ்நாட்டில் இதுவரை பத்து லட்சம் பேர் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்; அவர்களில் உங்கள் நண்பரும் இருக்கலாம்! எனவே, அவர்களிடம் ஆலோசனை கேளுங்கள். அல்லது— ஒரு குடும்பக்கட்டுப்பாடு மருத்துவ மனைக்குள்ளேனும் நுழையுங்கள்!

உங்களுக்கு இலவச ஆலோசனையும் உதவியும் புரிவதற்கென்றே அங்கு பயிற்சி பெற்ற ஊழியர்கள் காத்திருக்கிறார்கள்!

உங்கள் குடும்பத்தைத் திட்டமிடுங்கள்; மகிழ்வோடு வாழுங்கள்!

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு
செய்தி விளம்பரத்துறை, சென்னை-9